கல்கி








KALKI 4.10.1964

30 காசு




IMPORTANT TO MOTHERS
WOODWARD'S CELEBRATED
GRIPE WATER

கல்கி பொருளடக்கம்

குரோத புரட்டாசி 18 — அக்டோபர் 4

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

மழலை இன்பம்

வண்ண மலர்கள் பலவேந்தி
வழிபடக் கோவில்யான் போந்தேன்
கண்ணுதற் கடவுள் வாய் மலர்ந்து
"கவிதை இசையின்"னெனப் பணித்தான்


"அண்ணல் மூவர் பொழிந்தது போல்
அடியேன் பாட வல்லேனோ ?
பண்ணுக்குருகும் பெருமானே
பனிமலரிதனைப் பெறுக" வென்றேன்


பெண்ணை மெய்யிற் கொண்டவனும்
பித்தேயானேனும் இசையின் பால்
"எண்ணித் தளர்ந்து அஞ்சாது
இசையின்" என்றே வலிந்துரைத்தான்!


மண்ணிற்றவழும் குழவியென
மழலைப் பாடல் யானிசைத்தேன்!
தண்ணார் கூடல் தந்தையுமே
தகவுடன் மழலைச் செவியுற்றான் !

— பா. நா. கணபதி




வந்தனம், இது வேண்டாம்
ஏற்கனவே நாங்கள் இதே
அங்கிதான்
அணிந்திருக்கிறோம்
நேரு
மோஸ்தர்:
உடலை
பிடிக்கும்
அங்கி.


மகிழ்ச்சியாக இரு.
தோழா! கம்யூனிஸ
கபிட்ச யுகத்தின்
பிரசவ நோவைத்தான்
இப்பொழுது
அநுபவிக்
இறுய்!
விலை உயர்வு
வரிகள்
உணவுப் பற்றாக்குறை



மலர் 24

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 10

மற்றுமொரு காந்தி ஜயந்தி

ராஜாஜி

காச்மீரப் பிரச்னைக்கு நான் சொல்லும் பரிகாரம் வாசகர்களுக்குத் தெரிந்ததே. இந்தியாவோ பாகிஸ்தானோ காச்மீர மக்களின் எஜமானர்களல்ல; காச்மீர மக்களே தங்கள் எதிர்கால வாழ்க்கையை முடிவெடுக்க வேண்டும்; பிரச்னையை இவ்விதத்தில் தீர்த்துக் கொண்டு, இந்தியாவும் பாகிஸ்தானும் கெட்டியான நட்புப் பெற வேண்டும்; சீன அபாயத்தைச் சமாளிக்க இதுவே வழி என்று கூறி வருகிறேன். ஆனால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நட்பு ஏற்படுவதற்கு முரணான சூழ்நிலையை வளர்த்து வருவதையே நாம் காண்கிறோம்.

'காச்மீரம் இந்தியாவுடன் இணைந்து விட்டதென்பது தீர்ந்துபோன விஷயம்; இதில் விட்டுக் கொடுப்பதற்கு எதுவும் இல்லை' என்று ஸ்ரீ கிருஷ்ணமேனன் அவர்கள் மக்கள் சபையில் பேசியிருக்கிறார். இதுவே அரசாங்கத்தின் கொள்கை எனக் கொண்டால் காச்மீரப் பிரச்னையில் நமக்கும் பாகிஸ்தானுக்குமிடையே சுமுக முடிவுக்கு இடமேயில்லை. ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணர் பாகிஸ்தானுக்குச் சென்று நல்லெண்ணம் உண்டாக்கச் செய்த முயற்சிகளையும் நம் நாடு நல்ல முறையில் வரவேற்கவில்லை. காச்மீர இணைப்பு முடிந்து போன விஷயமல்ல; இனியும் சமரஸத்துக்கு இடமுண்டு என்று ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயணர் கருதுவதைப் பிரபல இந்தியப் பத்திரிகைகள் ஆட்சேபிக்கின்றன. இந்தியாவின் தரப்புக்கு ஜயப்பிரகாசர் குழி பறித்து விட்டார் என்கின்றன. உணர்ச்சிவசப்பட்டவர்கள் உண்மைகளை எப்படிக் காண முடியும்? பழைய நிகழ்ச்சிகளைப் புதிய கோணத்தில் ஆராய்வதே தேசத் துரோகம் என்கிறார்கள். ஜயப்பிரகாசர் எடுத்துச் சொல்லும் உண்மைகளுக்கு பொருந்திய எதிர்வாதம் செய்வது தான் முறையேயன்றி, உணர்ச்சிவசப்பட்டுக் குற்றம் சாட்டுவது அரசியல் அல்ல.

ஜயப்பிரகாசரவர்கள் இந்தியாவின் உரிமைக்குக் குழி பறித்தாரோ இல்லையோ, தமது பாகிஸ்தான் விஜயத்தால் அவர் மக்களுக்கு ஊட்ட முயன்ற நன்னம்பிக்கைக்குப் பத்திரிகைகள் குழிபறிக்கின்றன. செஞ்சீனாவுக்கு எதிராக இந்தியாவும் பாகிஸ்தானும் சேர்ந்து வலுவான முறையில் பாதுகாப்பு அமைத்துக் கொள்ள வேண்டுமென ஆர்வமாயிருந்தவர்களுக்கு ஜயப்பிரகாசர் அளித்த நம்பிக்கை விளக்கை அணைக்க முயற்சி நடக்கிறது. ஸ்ரீ ஜயப்பிரகாசர் நாட்டுப் பற்றுடன் பாகிஸ்தான் சென்று திரும்பியதற்காக அவருக்கு நன்றி கூறாவிடினும் அவர் கொண்டு வந்த நம்பிக்கையை அழிக்கப் பார்ப்பது துர்ப்பாக்கியம்.

நம்பிக்கையைக் குலைப்பது எளிதான காரியம். ஆனால் நம்பிக்கையைக் குலைப்பதன் மூலம் சிலர் பெறுகிற தாற்காலிகத் திருப்தி தேச நன்மைக்கு உகந்ததல்ல. இந்தியாவும் பாகிஸ்தானும் நட்புப் பெற முடியும் என்ற நம்பிக்கையை இப்போது வளர்த்தேயாக வேண்டும். இது வாதப் பிரதிவாத சாமர்த்தியங்களுக்குரிய பொருளல்ல. சீன அபாயம் பயங்கரமான பிரத்தியட்ச உண்மை; அண்டை நாடுகளுக்குப் பொதுவான நலன்கள் உண்டு என்பது பிரத்தியட்ச உண்மை. இவ்வுண்மைகளை உணர்ந்தால் மற்ற விவகாரங்களை இரண்டாம் பட்சமாகத் தள்ளி, இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பர நட்புப் பெற வேண்டிய அவசியத்தை யாரும் காண முடியும். இந்தியா தன் தவறுகளைத் திருத்திக்

கொள்ளவேண்டும் என்று பாகிஸ்தான் ஜனாதிபதி கூறுவது விரோதப்பேச்சாகத் தோன்றக்கூடும்; ஆனால் அது விரோதப் பேச்சல்ல. இந்தியா உண்மையாகவே தன் போக்கை மாற்றிக்கொண்டால் தான் இரு நாடுகளும் நட்பில் இணைய முடியும் என்று கருதிக் கூட்டுறவுக்கு அவர் அழைக்கிறார். பெருமிதம் படைத்த ராணுவ வீரரொருவர் தம் முயற்சி வீண் போனால் எப்படிப் பேசு வாரோ அப்படிக் காரம் தொனிக்க அயூப் அவர்கள் பேசுகிறார். தொனி யைக் கொண்டு பொருளை நாம் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது.

உலகத்திலேயே மிகப் பெரும் சேனை யைத் தயாராக வைத்திருக்கிறது செஞ் சீனா. எவ்வளவுபேர் மாண்டுபோனாலும் சீனாவின் ஜன நெரிசல் அதைத் தாங் கும். தற்காலத்துச் சீன மக்கள் ராணுவக் கட்டுப்பாட்டின் மீதே வளர்ந்தவர்கள். தென் கிழக்கு ஆசியா வில் நம்மை அவர்கள் சூழ்ந்து கொண் டிருக்கிறார்கள் என்பதில் இம்மியும் சந்தேகமில்லை. வியட்நாமுக்கும் இந்தி யாவுக்கும் இடையில் உள்ள நாடுகள் சீனாவின் பலத்துக்கு முன்னால் சீட்டுக் கட்டு விளையாட்டு வீட்டைப் போலச் சரிந்துவிடும். பட்சபாதங்களை விலக்கிச் சிந்தித்துப் பார்த்துத் தீரமாகச் செயல் புரிய வேண்டிய தருணம் இது. பல னேதும் கிட்டாது என்று முதலிலேயே அமங்கள முடிவு செய்வது சமயத்தின் தேவைக்கு நன்மை செய்யாது.

★

காந்திஜி மறைந்த பின் னர் பதினாறு காந்தி ஜயந்தி தினங்கள் வந்து போய் விட்டன. எத்த னையோ கொள்கைகளுக்கு காந்திஜியின் பெயரை வைத்து ஆதரவு காட்டி யாகி விட்டது. அவை யெல்லாம் எப்படியானா லும் எல்லாக் கொள்கை களுக்கும் மேலாக இந் தியா — பாகிஸ்தான் நட் புக்குத்தான் காந்திஜி இறுதி மூச்சு வரை ஆர்வ மாயிருந்தார் என்பதை யாவரும் அறிவர். காந்தி ஜிக்கு நாம் பட்டுள்ள நன் றிக் கடனைத் தீர்க்க வேண் டுமெனில், அவருடைய ஆசைகளை நாம் புரிந்து கொண்டு கடன் தீர்த் தோம் என்பதற்கு ஒரு சின்னம் அமைக்க வேண்டுமெனில், இந்தியா — பாகிஸ்தான் நட்பை ஏற் படுத்த வேண்டும். இவ்வளவு நாட் களாகச் செய்யாததை இந்த ஜயந்தி யின் போதாவது செய்ய முழுக் கருத்து செலுத்தி முயலுவோமா? அல்லது இதுவரை இருந்தது போலவே இனி யும் பிடிவாதமாயிருந்து, ஏதும் செய் யாமல் காலங்கழித்து, காந்தி அடிகளையும் அவருடைய கொள்கை களையும் முற்றிலும் மறந்து மனச்சாட் சிக் குத்தலின்றி ஏதோ ஒரு வழியில் வாழ்க்கையை முடிக்கப் பார்க்கிறோமா? இதுவே கேள்வி.

காச்மீரப் பிரச்னை தீர நான் கூறும் யோசனையை எந்த வாதமும் முறி யடிக்கவில்லை. நான் தற்பெருமையில் கூறவில்லை: உண்மையான நம்பிக்கை யுடன் சொல்கிறேன் — காந்தியவர்கள் இன்று உயிரோடு இருந்தால் இவ்விஷ யத்தில் நான் சொன்ன யோசனையை மனமார வரவேற்றிருப்பார்; இந்த யோசனையை எடுத்துச் சொல்ல அவரே ராவல்பிண்டிக்குச் சென்றிருப்பார்; வெற்றியுடன் திரும்பி யிருப்பார். காந்தியவர்கள் காய்தே ஆஜம் ஜின்னா வுடன் சமரஸப் பேச்சுகள் காண முயன்ற போது வல்லரசுகள் அதில் சம்பந்தப் படாமலிருந்தன; ஜின்னாவும் மிகப் பிடி வாதமாக இருந்தார். ஆனால் இன்று காந்திஜி நட்புத் துவஜம் எடுத்துக் கொண்டு பாகிஸ்தான் சென்றால் உலக நாடுகள் நம் பக்கம் இருக்கும். அயூப் அவர்களும் ஜின்னா வைப் போல் பிடிவாதக் காரர் அல்ல. நல்ல முடிவு நிச்சயமாக உண் டாகும்.



கம்யூனிஸ ஆக்கிரமிப் பும் விஸ்தரிப்பும் ஒரு பயங்கரமான பிரச்னை. நல்ல மனிதர்கள் இப் போது வாய் மூடிக் கொண்டு பார்த்திருப்பது முறையல்ல. ஒரு நாட் டின் நன்மக்கள் சும்மா யிருப்பதை விடத் தீமை யின் வெற்றிக்கு உதவுவது வேறெதுவுமில்லை என்று இருநூறாண்டுகளுக்கு முன் ராஜ்ய நீதி நிபுணர் எட்மண்ட் பர்க் சொன்னது நாமெல்லாரும் உணர்ந்து ஒப்புக் கொண்டு செய லாற்ற வேண்டிய உப தேசமே.

கெய்ரோன் இனத்தில் இன்னொருவரா?

முன்னாள் காச்மீரப் பிரதமர் பக்ஷி குலாம் முகமது கைதாகி விட்டார். கெய்ரோன் இனத்தைச் சேர்ந்த இவரும் காலம் சென்ற நேரு அவர்களின் ஆதரவால் கேட்பாரின்றி ராஜ்ய பாரம் நடத்தினார். 'நம்பிக்கைக்கு மிகவும் உகந்தவர்; அற்புதமான ஆட்சி நிர்வாகத் திறன் பெற்றிருந்தவர்' என்று நேருஜியின் காலத்தில் பக்ஷி குலாம் அவர்கள் பெயரெடுத்திருந்தார். அவரைப் பற்றிய லஞ்சப் புகார்கள் எதுவும் அப்போது செல்லுபடியாகவில்லை. இப்போது அதே பக்ஷி குலாம் அவர்கள் லஞ்ச ஊழல், பயங்கர நடவடிக்கைகள் ஆகியவற்றுக்காக விசாரணை யின்றி இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டிருக்கிறார். இவ்வளவு காலமாக எவ்வளவு தவறான முடிவுகள் எடுக்கப் பட்டிருக்கின்றன என்பதற்கு இது ஓர் உதாரணம். ஆனால் ஆட்சியாளர்களோ இந்தப் பழைய தவறான முடிவுகளுக்காக வெட்கப்படுவதாகக்கூடத் தெரியவில்லை. கெய்ரோன்—பக்ஷி குலாம் விஷயத்தில் மட்டுமின்றி எவ்விஷயத்திலுமே பழைய தவறுகளை அரசாங்கம் உணரவில்லை.

மாறாக எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் 'சுக்லாம்பரதரம்' குட்டிக் கொள்வது போல், 'நேரு மார்க்கத்திலிருந்து சிறிதும் விலகவில்லை' என்று சொல்வது ஒரு மந்திரமாகிவிட்டது. பழைய சடங்குகளை மறந்தோம். இந்தப் புதிய சடங்கைப் பிடித்துக் கொண்டு பிடிவாத அரசியல் நடந்து வருகிறது. தவறுகளைத் திருத்திக் கொண்டு நன்மைக்கு நெகிழ்ந்து கொடுத்து ஆள்வதுதான் முறை என்பதை நிகழ்கால ஆட்சித் தலைவர்கள் உணர வேண்டும்.

நாடகத்தின் தந்தை

முத்தமிழின் சிறப்பையும் முழக்கும் நாடகங்கள் பல இயற்றித் தாமே நடித்துக்காட்டி நாடகமேடைக்குத் தனிப் பெருமையளித்தவர் ராவ்பகதூர் பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள். மேடைகளில் பழைய பாணி நாடகங்களே நடந்து வந்த காலத்தில் முதலியார் அவர்களின் "மனோகரன்" போன்ற வீரம் ததும்பும் புதுமை நிறைந்த பல நாடகங்கள் மக்களிடையே புத்துணர்ச்சியை அளித்தன.

பள்ளி மாணவர்களும், கல்லூரி மாணவர்களும் அவர் எழுதிய நாடகங்களைப் பெரிதும் விரும்பி நடித்தார்கள். நடிப்பைத் தொழிலாகக் கொள்ளாமல், கலையாகப் பயின்று பல அமெச்சூர் நடிகர்கள் தோன்றுவதற்குக் காரணமாயிருந்தவர் முதலியாரவர்கள். தமிழ் நாட்டில் மட்டும் அல்லாமல், தமிழ் கூறும் நல்லுலகமெல்லாம் தமிழ் நாடகங்கள் பரவுவதற்குக் காரணமா யிருந்தவரும் அவரே.

செல்வமும், செல்வாக்கும் நிறைந்த பெரிய குடும்பத்தில் பிறந்த சம்பந்த முதலியார் அவர்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கறிஞராயிருந்து பேரும் புகழும் பெற்றுப் பிறகு நீதிபதி பதவியும் வகித்தார். ஆனால் மக்கள் அவரை நாடக நடிகராகவும், சிறந்த நாடக ஆசிரியராகவும்தான் பாராட்டிக் கௌரவித்தனர். அவரும் அதில் தான் உள்ள நிறைவெய்தினார். உலகப் புகழ் பெற்ற ஷேக்ஸ்பியரைப் போல் தாம் இயற்றிய நாடகங்களில் தாமே நடித்து வந்த முதலியாரவர்கள் நடிப்புக் கலைக்கும் ஓர் இலக்கணம் வகுத்துத் தந்தார். பண்பாடும், பக்தியும், ஒழுக்கமும் நிறைந்த வாழ்க்கையைப் பயனுள்ளதாக்கிப் பல்லாண்டு வாழ்ந்த நாடகத்தின் தந்தை சம்பந்த முதலியார் அவர்கள் 24—9—64 அன்று இறைவனடி சேர்ந்தது நம்மையெல்லாம் துயரத்தில் ஆழ்த்திவிட்டது. அவரது குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த அநுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



நாடகப் பேராசிரியருக்கு அஞ்சலி

டி. கே. சண்முகம்

தமிழ் நாடகத் தாய் பெறற்கரிய தன் புதல்வனை இழந்தாள்.

தமிழ் நாடகக் கலைஞர்கள் தம் கலையுறவுத் தந்தையை இழந்தனர்.

தமிழ் நாடக ஆசிரியர்கள் தங்கள் வழி காட்டியாய் விளங்கிய மாமேதையை இழந்து விட்டனர்.

வாழ்நாளெல்லாம் நாடகக் கலையைப் பற்றியே எண்ணியும், பேசியும், எழுதியும் வந்த நாடகப் பேராசிரியர், 'பத்மபூஷணம்' பம்மல் சம்பந்த முதலியார் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார்.

தமிழ் நாடக உலகம் இவரது பெருந் தொண்டினால் பெருமை பெற்றது. நாடக உலகுக்குச் செய்த ஈடற்ற சேவையால் இவர் பெருமை பெற்றார்.

'கூத்தாடிகள்' என்று நடிகர்கள் தூற்றப் பட்டனர் ஒரு காலத்தில்! இன்று 'கலைஞர்கள்' என்று போற்றப்படுகின்றனர். இந்த மகத்தான மாறுதலுக்கு . வழிகோலியவர் திரு சம்பந்த முதலியார் அவர்கள்.

அண்மையில் நம் பாரத சர்க்கார் இப் பெரியாருக்குப் 'பத்ம பூஷண்' என்ற சிறப்புப் பட்டம் வழங்கிப் பாராட்டியதை அனைவரும் அறிவர்.

முதன் முதலாக 1944ல் சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நாடகக் கலை மாநாட்டில் 'நாடகப் பேராசிரியர்' என்னும் பட்டம் இவருக்கு வழங்கப்பெற்றது.

1953ம் ஆண்டில் இவரது எண்பதாம் ஆண்டு விழாவை நாடகக் கழகம் மிகக் கோலாகலமாகக் கொண்டாடியது.

தொண்ணூறு வயதுக்கு மேல் வாழும் பேறு பெற்ற இப் பெரியார் தொண்ணூற்றுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதித் தந்துள்ளது தமிழ் பெற்ற பேறு எனலாம்.

அத்தனை நாடகங்களும் பல்வேறு நாடகக் குழுவினராலும் மேடையில் நடிக்கப் பெற்றவை என்பது குறிப்பிடத் தக்கது.

இவரது நாடகங்களிலே மிகச் சிறந்தது "மனோகரா". இது நாம் மறக்க முடியாத குணச்சித்திரங்கள் நிறைந்த கதாபாத்திரங்களைக் கொண்டது. தமிழர் பண்பிலே தலைசிறந்ததான தாய்மையைப் போற்றும் சீரிய நாடகம் இது. உலக நாடக இலக்கியங்களிலே ஒன்றாகப் புகழ் பெறும் தகுதியுடையது.

மகாகவிகளான ஷேக்ஸ்பியர், காளிதாசன் முதலியோருடைய ஆங்கில — சமஸ்கிருத நாடகங்களை இவர் இனிய தமிழில் தந்துள்ளார். தமிழ் நாடக ஆராய்ச்சியைப் பற்றி இவர் எழுதியுள்ள 'நாடகத் தமிழ்' என்னும் நூல் காலத்தை வென்று பயனளிக்கக் கூடிய சிறந்த கருவூலம் ஆகும்.

"தமிழ் நாடக மேடை நினைவுகள்" என்னும் தலைப்பில் இவர் தமது நாடக அநுபவங்களையெல்லாம் இனிக்க இனிக்க எழுதியுள்ளார்.

இந்நூல்கள் நாடகம் பயில்வோருக்கு ஒளி விளக்குகளாக வழிகாட்டும்.

இவர் நாடக ஆசிரியராக மட்டுமல்லாமல் தாம் படைத்த நாடகங்களில் முக்கிய பாத்திர மேற்று நடித்துச் சிறந்த நடிகராகவும் பல பரிசுகள் பெற்றுள்ளார்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் - ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்னும் வான் புகழ் வள்ளுவர் வாக்கை உபதேசமாகக் கொண்டு சிறிதும் பிறழாது தம் வாழ்க்கையிலும் கடைப்பிடித்து அக் குறளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி வந்தார்.

இத்தகைய மகா மேதை தம் வாழ்வில் நிறை வாழ்வு வாழ்ந்து — காலமெல்லாம் கலைப் பணியாற்றி, இறுதிவரை நினைவாற்றலோடு திகழ்ந்து, 24—9—64 அன்று மாலை நம்மை விட்டு அமரராகி விட்டார் !

தமிழ் நாடகக் கலைஞர்கள் அவருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றித் தங்களுடைய கலை வாழ்வை வகுத்துக் கொள்வதே அவருக்குச் செலுத்தும் நன்றிக் கடனாகும்.

அவரது பூத உடல் மறைந்து விட்டது. அவரது புனித ஆன்மா கலையோடு கலந்து என்றும் நம்மிடையே வாழும்.


திரு சம்பந்த முதலியார் சில ஆண்டுகளுக்கு முன் தமது எண்பதாம் ஆண்டு நிறைவின்போது உள்ளம் நெகிழ்ந்து கூறியது இப்போது நினைவுக்கு வருகிறது. "நான் மீண்டும் தமிழ் மண்ணிலே ஒரு தமிழ் மகனாகப் பிறக்க வேண்டும்; பல தமிழ் நாடகங்கள் எழுத வேண்டும். மேடை ஏறி அவற்றில் நானும் பங்கு கொண்டு நடிக்க வேண்டும். இறுதி மூச்சு வரையில் நாடகக் கலைக்குத் தொண்டாற்ற வேண்டும்." இந்தக் கூற்று மெய்யாகி நாடகக் கலை புத்துயிர் பெற வேண்டும்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் நம் நாடகப் பேராசிரியரைப் பாராட்டி, வாழ்த்திய கவிதை இப்போது என் நினைவுக்கு வருகிறது:

"தத்தளித்து நின்ற தமிழ்நாடகத் தாய்க்குப்
புத்துயிர் ஊட்டியநற் புண்ணியவான்
தித்திக்கும்
செந்தமிழ்ச் செல்வன் திருவளர் சம்பந்தன்
சந்ததம் வாழ்க தழைத்து!"

"அந்தி மதிசூடி நின்று அம்பலத்தில் ஆடிநிதம்
சிந்தைமகிழ் கூத்தன் திருவருளால்-செந்தமிழ்
நாடுபுகழ் சம்பந்தன் நடிக மகராஜன்
நீடுலகில் வாழ்க நிலைத்து!"

கவிமணி அவர்கள் மனம் நிறைந்து வாழ்த்திய அந்த நடிக மகராஜனுக்கு, நாடகப் பேராசிரியருக்கு நாடகக் கலைஞர்களின் அஞ்சலி உரியதாகுக.









காஞ்சிக் கலை விழா

சென்ற செப்டம்பர் 22ந் தேதியன்று காஞ்சீபுரத்தில், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் திருமுன்னர் மூன்றாவது ஆகம, ஸில்ப, வியாஸ பாரத புராதனக் கலை விழா தொடங்கப்பட்டது.

1. விழாவைத் தொடங்கி வைத்துத் தமிழக கவர்னரான மைசூர் மகாராஜா ஸ்ரீ ஜயசாமராஜேந்திர உடையார் அவர்கள் உரையாற்றுகிறார்.

2. ஸ்ரீ புஷ்பகிரி சங்கராசாரிய ஸ்வாமிகளும், இளைய பெரியவர்களான ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளும் வருகை தரும் காட்சி.

3. காஞ்சிகாமகோடி பீடத்தின் இரண்டு பெரியவர்களும் எழுந் தருளுகிறார்கள்.

4. ஸ்ரீ பெரியவர்களுக்கு இளைய பெரியவர்கள் மாலை அணிவிக்கிறார். ஸ்ரீ புஷ்பகிரி ஆசாரியர்களையும், காஞ்சி ஞானப் பிரகாச ஸ்வாமிகள் மடத்துத் தலைவரையும் உடன் காண்கிறோம்.

5. மைசூர் மகாராஜாவுக்குக் கலை விழா வரவேற்புக் குழுவின் சார்பில் பிரம்மஸ்ரீ மாதவ சாஸ்திரிகள் வரவேற்புரை வழங்குகிறார். விழாவில் கலந்துகொண்ட முதன் மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்ஸலம் அவர்களையும் படத்தில் காண்கிறோம்.


அறிந்தீர்களா ?
இதுதான் உங்கள்
பனாமா
1 தேர்ந்தெடுத்த வர்ஜீனியாப் புகையிலைகளின் கலவைப் பலனாக தன்மையான புகைநயம்—அதுவே உங்கள் பனாமா !
2 நாடெங்கும் நல்லின்பம் பரப்பும் மக்கள் ரகமாகிய பனாமா ஒத்த இனத்திலே உன்னத விற்பனையுள்ள ரகமாகும்.
3 நாட்டின் பல பகுதிகளிலே தலைசிறந்த ரகமாகத் திகழுவதும் உங்கள் பனாமா.
4 இன்று மக்கள் மனங்கவர்ந்துள்ள இருபதடங்கிய உறையினைப் பல்லாண்டுகளுக்கு முன் தோற்றுவித்த ரகமே பனாமாதான்.
Panama
20
CIGARETTES
உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது பனாமா
கோல்டன் டுபாக்கோ கம்பெனி பிரைவேட் லிட். பம்பாய்-56
GTC
பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப்பெரியது
GT. (P) 635 A TH Greens' Advtg.



அதிசய ஆங்கிலேயர்

கே. வேதமூர்த்தி

பாரதம் விடுதலை பெறுவதற்குப் பாரத மக்கள் பாடுபட்டதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் இந்தியரல்லாதவர் ஒருவர், அதிலும் நாம் எந்தப் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தோமோ, அந்த இங்கிலாந்து தேசத்தவர் ஒருவரே நம் நாட்டுக்கு வந்து, நம்முடைய அரசியல் சமூக வாழ்வில் பணியாற்றி இரண்டறக் கலந்து, இந்தியராக வாழ்கிறார் என்றால் அது ஆச்சரியமான விஷயமே அல்லவா? அப்பேர்ப்பட்ட ஆங்கிலேயர் யார் என்று அறிய உங்களுக்கு ஆவல் ஏற்படுகிறதல்லவா? அதிலும், ''காந்திஜியைப் பற்றியும், கம்யூனிஸத் தத்துவத்தைப் பற்றியும், மேலைநாடுகளைப் பற்றியும் இவரைப் போல் அறிந்தவர் இன்றைய இந்தியாவில் வேறு யாருமில்லை'' என்று ராஜாஜி குறிப்பிட்டிருந்தார் என்றால் அந்த ஆங்கிலேயரைப் பற்றித் தெரிந்துகொள்ளும் ஆவல் கட்டுக்கடங்காமல் போவதில் வியப்பென்ன! அந்த ஆவலுடன்தான் பெங்களூர் வந்த சில நாட்களிலேயே அந்த ஆங்கிலேயரைக் கண்டு பேச முயற்சி செய்தேன்.

'ஸ்வராஜ்யா' வாசகர்களுக்கு 'மைஸிந்தியா' (Mysindia) என்னும் ஆங்கில வாரப் பத்திரிகையை அறிமுகப்படுத்தத் தேவையில்லை. ஏனெனில், ராஜாஜி அவர்கள், 'மைஸிந்தியா' பத்திரிகையின் தலையங்கத்திலிருந்து சில பகுதிகளையாவது 'ஸ்வராஜ்யா'வில் குறிப்பிடாத வாரம் கிடையாது என்றே சொல்லி விடலாம்! இந்த 'மைஸிந்தியா'வின் ஆசிரியராகத்தான் பணியாற்றுகிறார் மேற்சொன்ன அதிசய ஆங்கிலேயராகிய பிலிப் ஸ்ப்ராட் (Philip Spratt) அவர்கள்.

ஸ்ப்ராட் அவர்களை நான் அவரது காரியாலயத்தில் பேட்டி காணும் பேறு பெற்றேன். என் சொந்த விஷயத்தைப் பற்றிச் சிறிது நேரம் பேசினார். பிறகு நான், ''தாங்கள் இந்தியாவுக்குக் கம்யூனிஸக் கொள்கையைப் பரப்புவதற்காகத்தான் வந்தீர்களாமே, எந்தக் காரணத்தினால் தாங்கள் கம்யூனிஸத்தை உதறித்தள்ளினீர்கள்? அதோடு மட்டுமல்லாமல் இன்று அதற்கு நேர் எதிராகப் பெரு முனைவில் போராடிக் கொண்டிருக்கிறீர்களே?'' என்று கேட்டேன். இந்தக் கேள்வியைக் கேட்டவுடன் ஸ்ப்ராட் அவர்கள் ஒரு நிமிஷநேரம் மௌனமாயிருந்தார். அவர் மனம் தம் வாழ்க்கையின் ஆரம்ப காலத்துக்குப் போய்விட்டது என்பது முகத்திலிருந்தும் குரலிலிருந்தும் புலப்பட்டது. பிறகு பேசினார்:

''நான் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் பௌதிக சாஸ்திரம் படித்து வந்தபோது அறிவாற்றல் மிகுந்த சக மாணவர்கள் அடிக்கடி கூடித் தற்கால அரசியல் நிலை பற்றிப் பேசிக் கொள்வதுண்டு. பெர்ட்ராண்டு ரஸ்ஸல், க்ரஹாம் வாலஸ் போன்ற மேதாவிகளின் சொற்பொழிவுகளையும் நாங்கள் கேட்பதுண்டு. பௌதிக சாஸ்திரத்தையும் தத்துவரீதியான அடிப்படையிலேயே படித்தோம்; எனவே அரசியல் பொருளாதாரத் தத்துவங்களைப் பற்றியும் விவாதிப்பதில் எங்களுக்கு ஈடுபாடு இருந்தது. கம்யூனிஸத்தின் லட்சியமான சமதர்மக் கொள்கை காந்த சக்தியைப் போல் கேம்பிரிட்ஜ் இளைஞர்கள் மனத்தை ஈர்த்ததிலும் வியப்பில்லை. 1924ம் வருடத்தில், அதாவது நாற்பது வருடங்களுக்கு முன்பு பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி என்னை 'கோரியர்' (Courier) ஆக, அதாவது எங்களுடன் கருத்தொற்றுமை கொண்ட சில முக்கியமான இந்தியத் தலைவர்களுக்கு ரகசியக் கடிதங்களும், செய்திகளும் கொண்டு சேர்ப்பிப்பதற்காக இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது. அப்பொழுது பாரதத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி என்று தனியாக ஒரு ஸ்தாபனம் இயங்கவில்லை. கம்யூனிஸ ஈடுபாடு கொண்ட தலைவர்களும் குறைவாகவே இருந்தார்கள். அந்தச் சூழ்நிலையில்தான் நான் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டேன். கம்யூனிஸ வெறியினால் நான் பம்பாயில் தொழிலாளிகளின் இயக்கங்களில் சேர்ந்து கொண்டு, வேலை நிறுத்தம் முதலானவைகளிலெல்லாம் ஈடுபட்டுக் கம்யூனிஸத் தத்துவங்களைப் பரப்பலானேன். நான் ஓர் ஆங்கிலேயனாயிருந்தும், இம்மாதிரிச் செயல்களில் ஈடுபட்டதைக் கண்டு 'பம்பாய் க்ரானிக்கிள்' போன்ற

பிரபல ஆங்கில - இந்தியப் பத்திரிகைகள் எனக்கு மிகுந்த பிராபல்யத்தை அளித்தன. சீக்கிரத்திலேயே இந்தியாவில் நான் கம்யூனிஸ்டு தலைவர்களில் ஒருவன் என்ற நிலைமையை அடைந்து விட்டேன். பிரிட்டிஷ் கம்யூனிஸ்டுக் கட்சி என்னை வெகுவாகப் பாராட்டி, 'நீ திரும்பி இங்கிலாந்துக்கு வரவேண்டியதில்லை. அங்கேயே இருந்து தொடர்ந்து வேலையைக் கவனித்து வா' என்று எனக்கு உற்சாகமூட்டிப் பாரதத்திலேயே இருக்கச் செய்து விட்டது. இந்தியா முழுதும் இந்த வேலையில் சுற்றிவந்தேன். ரஷ்யக் கோமிண்டாங் ஸ்தாபனத்திலிருந்து வரும் கடிதங்களில் ஸ்டாலினுடையதோடு, எம். என். ராய் அவர்களின் கையெழுத்தையும் பார்த்திருப்பதால், ராய் அவர்களைக் கண்டு பேசினேன். எம். என். ராய் எனப்படும் மஞ்சுநாத்ராயுடன் சகாவாகப் பணியாற்றும் பெருமையும் பெற்றேன். ராய் இளவயதில் அதிகம் படிக்கவில்லை. கம்யூனிஸத்தினால் ஆகர்ஷிக்கப்பட்டு வேலை செய்து வந்தார். நடுத்தர வயது வந்தபோதுதான் ஜெர்மனியில் தங்கி நிறையப் படித்தார். மிகச் சிறந்த எழுத்தாளராவார். அவர் முன்னிருந்தாலே எனக்கு ஒரு பரவச உணர்ச்சி உண்டாவதுண்டு. பிறகு நான் சென்னைக்கும் வந்தேன். அந்த நாளில் மிகப் பிரபலமான தொழிலாளிகள் தலைவராக இருந்தவர் ஸ்ரீ சிங்காரவேலுச் செட்டி என்பவர். சென்னையின் முந்தையவாசிகளான மீனவத் தலைவர் சாதியில் வந்தவர். அவர்தான் தென்னாட்டில் கம்யூனிஸக் கொள்கை பரவ அடிகோலியவர். அவரோடு வளர்ந்து வந்த அவர் சகோதரரின் பேத்தியைத்தான் நான் பிறகு மணந்து கொண்டேன். அந்தச் சமயம் நான் ராமசாமிப் பெரியாரைக்கூட ஒரே ஒரு தடவை சந்தித்தேன்! அப்பொழுதே நான் ஆச்சரியப்பட்டதுண்டு. இவருக்குத் தீவிர இனப் பற்று இருந்தும் காங்கிரஸ்காரராக இருக்கிறாரே என்று! ஆனால் தமிழகத்தில் இன்றும் அவர் போல் பலர் இருக்கிறார்கள் போலிருக்கிறதே!

'' பிரிட்டிஷ் ஆதிக்கத்தைக் குலைக்கச் சதி செய்வதாக, மீரட் சதித் திட்டத்தில் நானும் சிலரும் சிறைவாசத்துக்குள்ளானோம். ஏழு வருட சிறைவாசத்தில் கம்யூனிஸ்டுகளின் வேதமாகக் கொண்டாடுகிற மார்க்ஸ், என்ஜெல்ஸ், ஹிஜெல் போன்றவர்களின் நூல்களைச் சாவகாசமாகவும், நுணுக்கமாகவும் படிக்க வாய்ப்பு ஏற்பட்டது. ஹெஜில் - மார்க்ஸுடைய 'Dialectical Materialism' எனப்படும் வாதம் ஒரே குழப்பத்தை உண்டாக்குவதா யிருந்தது. சிந்தனைத் தெளிவைப் பூரணமாக மார்க்ஸ் அடைந்திருக்கவில்லை என்று அறிந்த போது மிக்க ஏமாற்றமாக இருந்தது. கம்யூனிஸக் கொள்கையினால் மக்கள் சமூகத்துக்கு நிரந்தரப் பயன் ஏற்படுமா என்ற சந்தேகம் அப்பொழுதுதான் ஏற்பட்டது. அந்தச் சந்தேகத்துக்கு நிவர்த்தியை ஸ்டாலின் மகானுபாவர் சில காலத்துக்குள்ளேயே அளித்து விட்டார். கம்யூனிஸ ஆர்வம் கொண்ட இளைஞர்களான எங்களில் பலர் யார் யாரை வீர புருஷர்களாகக் கருதி வந்தோமோ அப்பேர்ப்பட்ட மக்கள் தொண்டர்களை ஸ்டாலின் கொன்று விட்டார்! இந்தச் செய்தி கிடைத்ததும் எங்களுக்கு ஏற்பட்ட வெறுப்புணர்ச்சியை வார்த்தைகளால் விவரிக்க இயலாது! பின்புதான், கம்யூனிஸப் பாதையைப் பின்பற்றுவதினால் நாட்டில் யதேச்சாதிகாரமும் மிருகத்தனமும் அதிகமாகின்றன; மக்கள் துன்பங்களைப் போக்கி ஒரு லட்சியக் குடியாட்சி நிர்மாணிக்க முடிவதில்லை; மனிதனின் தலைவிதி அப்படிப் போலிருக்கிறது என்ற முடிவுக்கு வந்தேன். உடனே கம்யூனிஸத்தை வெறுத்து வெளிவந்து விட்டேன். சென்னையில் வேலைக்காக அலைந்து கொண்டிருந்தபோது என்னை ரகசியப் போலீஸார்கள் இன்னும் தொடர்ந்து வந்து கொண்டு, எங்கும் வேலையே கிடைக்காதபடி தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஒரு தடவை பொறுமை இழந்து அப்பொழுது (1938) மாகாணப் பிரதமராக இருந்த ராஜாஜியிடம் இதைப்பற்றிக் கோபத்துடன் முறையிட்டேன். அவர் பிறகு என்ன செய்தாரோ தெரியாது. அன்றிலிருந்து எனக்கு இந்த ரகசியப் போலீஸாரின் தொந்தரவு இருக்க வில்லை. காந்திஜியைப் பற்றி ஒரு புத்தகம் எழுதி அதன் பிரதி ஒன்றை ராஜாஜிக்கு அனுப்பி வைத்தேன். ரொம்ப காலம் கழித்து அவர் அதனை ஒரு 'ஷெல்பி'ல் கண்டு படிக்க நேர்ந்ததும் எனக்குப்பாராட்டுரை ஒன்றும் எழுதியிருந்தார்கள்.

'' சோஷலிஸத்துக்கும் கம்யூனிஸத்துக்கும் வேறுபாடே கிடையாது. சோஷலிஸக் கொள்கையினால் மக்கள் இனத்துக்கு நன்மையைவிடத் தீமையையே அதிகம் எதிர்பார்க்கலாம் என்று தெளிவாகக் கண்டு கொண்டதனால்தான் என்னால் காங்கிரஸ் கட்சியின் சோஷலிஸக் கொள்கையை ஆதரிக்க முடியவில்லை. இந்தியாவுக்கும் மற்ற ஜனநாயக நாடுகளுக்கும் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி காட்டும் வழியே சிறந்ததென நான் நம்புகிறேன். பெரும்பாலான விஷயங்களில் எனக்கு ஸி. ஆர். அவர்களுடன் கருத்தொற்றுமை இருக்கிறது என்பது உண்மை. எண்பத்தைந்து வயதைக் கடந்தும் ஸி. ஆர். இவ்வளவு ஞாபக சக்தியும், அறிவுக் கூர்மையும், சிந்தனைத் தெளிவும் பெற்றிருப்பதைக் கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன்'' என்று கூறி முடித்தார். மக்கள் நலனில் மாறாத அக்கறை கொண்டவர்கள் எல்லோரும் ராஜாஜியுடன் ஒத்துப் போவதை நினைத்த போது, ராஜாஜியை ஈன்ற நம் நாடு பாக்கியம் செய்த நாடே என்று தோன்றியது.

ஸ்ப்ராட்டைப் பார்க்கும் முன்பே அவருடைய எளிமையான வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து வைத்திருந்தேன். பெங்களூரில் எங்கு சென்றாலும் அவர் சைக்கிளிலேயே செல்கிறார். ஸ்ரீ எம். ஏ. வேங்கடராவ் போன்ற பேராசிரியர்கள் ஸ்ப்ராட் அவர்களிடம் காட்டும் மரியாதை உள்ளத்தை உருக்குவதாக இருக்கிறது. அவரிடம் விடை பெற்றபோது, சிறந்த அரசியல் ஞானியும், எழுத்தாளரும், தியாக சீலரும் மட்டுமல்ல அவர்; உண்மையிலேயே ஒரு பெரிய மனிதர் அவர் என்ற உணர்ச்சி மேலோங்கி நின்றது.

அதிசய ஆங்கிலேயரான பிலிப் ஸ்ப்ராட் அவர்கள்தான் இவ்விதழ் அட்டையை அலங்கரிக்கிறார்.

கயல்விழி

அகிலன்

மழவச் சக்கரவர்த்தி தாம் சுட்டிக் காட்டிய இருக்கையில் அரபு நாட்டு வணிகர் தலைவன் அப்துல் அமர்ந்ததும், "எப்படி இருக்கிறது உங்கள் வாணிபம்?" என்று கேட்டார்.

"ஏதோ இருக்கிறது" என்று உற்சாகமிழந்த குரலில் கூறினான் வணிகன். "எங்களுடைய குதிரைகளுக்கும் முன் போல் இங்கு வரவேற்பு இல்லை. முத்துக்களில் நன்றாக விளைந்த பெரிய முத்துக்களையும் நீங்கள் நாட்டை விட்டு கொண்டு போகக் கூடாதென்று தடை விதித்திருக்கிறீர்கள் ஏதோ நடந்து கொண்டிருக்கிறது."

அப்துல்லின் முகத்தில் கூர்மையான விழிகளைப் பதித்தவாறே புன்முறுவல் பூத்தார் மழவச் சக்கரவர்த்தி. "எப்படித்தான் நாங்கள் தடை விதித்தாலும் உங்கள் அரபு நாட்டு அங்காடிகளில் எங்களுடைய விளைந்த முத்து உயர்ந்த விலைக்குக் கிடைக்கத் தான் செய்கிறது. எப்படியோ முத்துக்களுக்கு இறக்கை முளைத்து விடுகிறது! இல்லையா?"

வேர்த்து விறுவிறுத்துவிட்டது அப்துல்லுக்கு. மிகவும் சிரமங்களை மேற்கொண்டு, கள்ளத்தனமாகச் சில பெரிய முத்துக்களைக் கடத்திச் செல்வதற்குள், பாண்டிய நாட்டுச் சுங்க அதிகாரிகளிடம் அவர்கள் படாத பாடு படவேண்டியிருந்தது. இந்த மழவச் சக்கரவர்த்தி தன்னை என்ன செய்யப் போகிறாரோ என்ற அச்சம் அவனுக்கு.

"இனி இங்கிருந்து பெரிய முத்துக்களையும் ஏற்றுமதி செய்வதென்று தீர்மானித்திருக்கிறோம்!" என்றார் அவர்.

ஆனந்தம் தாங்கவில்லை அப்துல்லுக்கு.

"அப்படியே அரபு நாட்டுக் குதிரைகளையும் இறக்குமதி செய்யலாமா என்று ஒரு யோசனை இருக்கிறது."

"அச்சா! அச்சா!" என்று துள்ளிக் குதித்தான் அப்துல்.

"அப்துல்!" என்று மெல்லிய குரலில் அவனை அருகில் அழைத்து வைத்துக் கொண்டு கூறலானார் மழவச் சக்கரவர்த்தி. "ஆயிரக் கணக்கான வலிமையுள்ள குதிரைகள் எங்களுக்கு வேண்டும். கூடியவரையில் சற்று ஒதுக்குப்புறமாக ஒரு துறைமுகம் அகழ்ந்துவிடச் செய்கிறேன். இரவு நேரங்களில் கரைக்கு வந்து சேர்வது போல் மரக் கலங்களைக் கொண்டுவந்து சேர்க்க வேண்டும். தெரிந்ததா?" என்று கேட்டார்.

"ஓ!" என்று தலையாட்டினான் அப்துல். ஓரளவுக்கு அவனுக்கும் இந்த இரகசியம் புரிந்தது போல் இருந்தது. அவன் வணிகன். பயங்கரமான கடல் அலைகளோடு மாதக்கணக்கில் போரிட்டு, கடற்கொள்ளைக்காரர்களுக்குத் தப்பி, வீர சாகஸங்களுடன் வாணிபத்தில் இறங்கியவன். புத்துயிர் வந்துவிட்டது அவனுக்கு.

"கூடுமானவரையில் ரகசியங்களை நீ காப்பாற்றவேண்டும். ஈழநாட்டுக்கோ, சோழநாட்டுக்கோ குதிரைகள் வாங்கி வருவது போல் வாங்கி வரவேண்டும். முத்துக்களை அனுமதிக்கும் விதியும் உனக்கு மட்டுமே தளர்த்தப்படும்!"

இரு கரங்களாலும் சலாம் வைத்தவாறே விடை பெற்றுக் கொண்டு, வெளியேறினான் அப்துல். அவனுடைய குதிரை பறந்து சென்ற வேகத்தில் அவன் ஆனந்தம் தெரிந்தது.

"இனி, திருமலை நாட்டுப் பக்கத்தில் உள்ள மறவர் குடி மக்களில் பலரை இங்கு குடியேற்ற வேண்டும். அது வரையில்,......" என்றான் அமைதியாக இருந்த சுந்தர பாண்டியன். "அங்கும் விளைச்சல் இல்லை; போரும் இல்லை; இங்கே புதிய முத்துச் சலாபங்களில் வேலை கொடுக்கலாம். மலைநாட்டுக் காடுகளில் குடியேற்றி, வாசனைத் திரவியங்களைப் பயிரிடச் செய்யலாம். குதிரைகளைப் பிரித்துப் பொதிகை மலைச்சாரலுக்கும் குற்றால மலைச் சாரல்களுக்கும் அனுப்பிவிட்டால் பயிற்சிக்கும் வசதியாக இருக்கும்."

வியப்பின் மேல் வியப்பு மழவச் சக்கரவர்த்திக்கு. எவ்வளவு விஷயங்களை முன்னமே எண்ணி வைத்திருக்கிறார் இளவரசர்!

"இளவரசே! புயல் போல் பொங்கிச் சீறும் மறவர் பெரும் படைக் காட்சியை இப்போதே என் மனக்கண் முன் காட்டிவிட்டீர்கள். தங்களைச் சந்தித்த பின் இருபது வயது இளமை வந்துவிட்டது!"





சிவிகையில் புலவனைத் திருநெல்வேலிக்கு அவனுடைய இருப்பிடத்துக்கு அனுப்பி வைத்தார் மழவச் சக்கரவர்த்தி. அவனைச் சேர்ந்தவர்கள் முன்பே ஊரை விட்டுத் திரும்பி விட்டனர். நெல்லைக்கு அவன் திரும்பி வந்தபோது அவனை எங்கேயோ தனியாக அழைத்துச் செல்வதற்கு மற்றொரு ரதம் காத்திருந்தது. கயல்விழியின் முகத்தில் களையில்லை; உயிரில் உணர்வில்லை.

பன்னிரண்டாம் அத்தியாயம்

விடை கொடுத்தாள்

மறுக்க முடியாத குலோத்துங்க சோழரின் அழைப்பு பைந்தமிழ்க் குமரனுக்கு விழுப்பரையர் மூலமாகவே கிடைத்தது. குலசேகர பாண்டியருக்கு அமைச்சர் சயங்கொண்ட வல்லபரின் வாயிலாக வந்து சேர்ந்தது. அதைப் பற்றி அவர் விழுப்பரையரிடம் ஆலோசனை செய்தார். மறுப்பதற்கு வழியில்லை. மறுத்தால் அது சக்கரவர்த்தியை அவமதித்த குற்றமாகும். ஆகவே, விழுப்பரையர் அவனை அனுப்பி வைக்கும் பொறுப்பைத்தாமே மேற்கொண்டு நெல்லைக்கு வந்து சேர்ந்தார்.

பாண்டியர் கொடுத்தனுப்பியிருந்த முத்தாரத்தை வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டு கழுத்தில் அணிந்து கொண்டான் பைந்தமிழ்க் குமரன். இருவரும் தனிமையில் நெடுநேரம் உரையாடினார்கள். குலோத்துங்கரின் சபையில் அவன் மிகவும் விழிப்போடு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றிப் பன்முறை எச்சரிக்கை செய்தார் விழுப்பரையர். 'இங்கே கயல்விழியைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பைத் தாம் ஏற்றுக் கொள்வதாக வாக்களித்தார். பைந்தமிழ்க் குமரனைப் பற்றிய கவலைதான் அவருக்கு.

''ரதசாரதி முதற்கொண்டு தங்களுடன் துணைக்கு வரும் பலருமே தங்களை நேரில் அறிந்திராதவர்கள். கவனமாகத்தான் ஆட்களைப் பொறுக்கி எடுத்து வந்திருக்கிறேன். இனிமேல் அம்பலக்கூத்தனுக்குத்தான் அதிகமான வேலையிருக்கும். இப்போது அவன் தங்களுடன் வரவேண்டாம். சமயம் வரும்போது தாங்கள் எங்கிருந்தாலும் அவன் தங்களைச் சந்திப்பான்.''

கயல்விழியிடமும் ஆறுதல்கள் கூறிவிட்டு விழுப்பரையர் முன்னதாகவே அங்கிருந்து விடைபெற்றுக்கொண்டார். மறு நாள் அவன் அங்கிருந்து புறப்படுவதாக ஏற்பாடு.

நகரத்தை அடுத்தாற்போல் தாமிரவருணியாற்றங் கரையை அடுத்திருந்த மனைகளில் அவர்கள் அவ்வப்போது தங்கியிருந்தார்கள். அருகில் இருந்து ஒன்றாகவே சுற்றுப்புறத்துக் கிராமங்களுக்குச் சென்று வந்தாலும் கயல்விழியும் பைந்தமிழ்க் குமரனும் அடிக்கடி தனித்துப் பேசுவதற்கோ பழகுவதற்கோ நேரம் கிடைப்பதில்லை. இருவருமே ஒரு வகைக் கட்டுப்பாட்டைத் தங்களுக்குள் விதித்துக் கொண்டவர்கள் போல் நடந்து கொண்டார்கள். எப்போதாவது அவர்கள் சந்தித்துப் பேசினாலும் அது அவர்களுடைய கடமைகளைப் பற்றிய பேச்சாகவே யிருந்தது.

ஆற்றங் கரையில் மாலை நேரம் மயங்கிக் கொண்டு வந்தது. பைந்தமிழ்க் குமரன் பல்வேறு சிந்தனைகளுடன் மெல்ல மணலில் நடந்து சென்றான். ஆற்றுக்குள் தெரிந்த ஒரு கல் மண்டபத்துக்குச் சென்று அதன் தூணோடு தூணாகச் சாய்ந்து விட்டான். ஆற்று நீர் அமைதியாக ஒரு புறம் சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது.

இப்படி ஓர் அழைப்பை அவன் எதிர்பார்க்கவே இல்லை. இனி எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் அவன் முடிவு செய்ய இயலாதவனாக இருந்தான். புலியின் குகைக்கே போய் அதை நேருக்கு நேர் சந்திக்க வேண்டிய அவசியம் வந்து விட்டது. கிழட்டுப் புலியானாலும் ஆற்றலிலோ, வலிமையிலோ, நகங்களின் கூர்மையிலோ இளமையின் முறுக்கேறிய புலி அது.


கயல்விழியைப் பிரிந்து செல்ல வேண்டுமே என்ற ஏக்கம் ஒருபுறம் நெருப்பென அவன் உள்ளத்திலே கனிந்து அவனை வாட்டத் தொடங்கியது. அவனையறியாமலே அவள் அவனுடைய உயிரின் ஒரு பாதியாகி விட்டாள். ஒவ்வொரு மூச்சையும் அவனது எண்ணங்களைச் செயலாக்குவதற்கென்று ஆர்வத்தோடு தியாகம் செய்து வந்தாள். இவ்வளவும் அவன்தான் இளவரசன் என்பதைத் தெரிந்து கொள்ளாமலே அவள் செய்து வந்தாள். அதை நினைத்து நினைத்து அவன் உள்ளம் நன்றிப் பெருக்கால் நிரம்பியது. யாரோ ஒரு நாடோடிப் புலவன் மீது அவள் கொண்ட பற்றுதல் அவளை எப்படியெல்லாமோ மாற்றி விட்டது. கயல்விழியைப் பிரிந்து செல்வது எப்படி?

மங்கலான இரவு மயக்கம் கலந்த நிலவொளியில் கலந்து உறைந்தது. தூணில் சாய்ந்தவன் சாய்ந்தபடியே இருந்தான். நாளைக்கோ மறுநாளோ பூர்ணிமை. வளர்பிறை நிலவு வட்டப் பொன் தகடுபோல் வானத்தில் மிதந்து தாமிரவருணியைப் பொன் வருணியாக உருகியோடச் செய்து கொண்டிருந்தது.

கயல்விழி அந்த மண்டபத்தை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தாள். நடையில் வழக்கத்துக்கு மாறான பரபரப்புக் காணப்பட்டது. வீட்டில் அவனைத் தேடி விட்டு, அங்கு காணாததால் மண்டபத்துக்கு வந்து கொண்டிருந்தாள் அவள்.

அருகில் நெருங்கியவுடன், ''கயல்விழி!'' என்று குரல் கொடுத்தான் பைந்தமிழ்க் குமரன். அவள் பதிலளிக்கவில்லை. மள மள வென்று ஓடி வந்து அவன் கால்களைக் கட்டிக் கொண்டாள். தாமிரவருணி அவள் விழிகளிலிருந்து பெருக்கெடுத்தோடியது. மென்மையான தேகம் அவளுடைய துயரம் தாங்காமல் குலுங்கியது. அன்போடு அவளது கேசத்தை வருடியவாறே பேச்சு மூச்சற்றுப் போனான் பைந்தமிழ்க் குமரன். என்ன பேசுவதென்றே தோன்றவில்லை அவனுக்கு.

''நீங்கள் அங்கு போகத்தான் வேண்டுமா ?'' என்று விம்மல்களுக்கிடையே கேட்டாள் கயல்விழி. ''போகாமல்



அள்ளி அணைத்திட ஆடிவரும் பிள்ளைக் கனியமுதைக் கண்டு அகமகிழ்கிறாள் அன்னை. பள்ளிப் படிப்பில் துடியான இந்த வண்ணச் சிறுவன் என்றும் அணிவது மிகமிக வெண்மையான உடைகளே—எல்லாம் டினோபால் சலவை!



துணிகளைக் கடைசியாக நீரில் அலசுவதற்கு முன் சிறிதளவு டினோபால் சேர்த்தால் போதும்—வெள்ளை ஆடைகள், சர்ட்டுகள், கிராக்கள், புடவைகள், ஃப்ராக்குகள், படுக்கை விரிப்புகள் முதலியன எல்லாம் மிக மிக வெண்மையாக விளங்கும். இத்தனைக்கும் செலவும் மிக மிக சொற்பமே — ஒரு துணிக்கு ஒரு பைசாவுக்கும் குறைவே.

உங்கள் உடைகள் இடைபகு வெண்மையுடன் விளங்க, இன்றே டினோபால் வாங்குங்கள்—கவர்ச்சியாக இருக்க விரும்புவர்கள் எப்போதும் வாங்குவது டினோபால். டினோபால் ஒரு நவீன சலவை சாதனம்—எல்விதமான துணிகளுக்கும் அபாயமின்றி உபயோகிக்கலாம்.

டினோபால் என்பது பேஸ்ல் ஜே. ஆர். கெய்கி, எஸ். ஏ. பாஸ், ஸ்விட்சர்லாந்து ஸ்தாபனத்தாரின் ரிஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க் ஆகும்

சுஹ்ரித் கெய்கி லிமிடெட், தபால் பெட்டி 965 பம்பாய்-1 பி. ஆர்.

இருப்பதற்கு ஏதாவது காரணம் சொல்லி அனுப்ப முடியாதா?''

''போகாமல் இருந்தால் அது நம்முடைய குலசேகர பாண்டியருக்கு இழுக்காகும். அதனால் சக்கரவர்த்தியின் கோபத்துக்கு நம்முடைய அரசர் இலக்காக வேண்டிய நிலை ஏற்படும். போய் விட்டு விரைவில் திரும்பி விடலாம் என்றே நினைக்கிறேன். எனக்கு ஒரு துன்பமும் ஏற்பட்டு விடாது, கயல்விழி!'' என்று சமாதானப்படுத்தினான்.

கயல்விழியின் தோற்றம் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது.

''செய்தியைக் கேட்டதிலிருந்தே, என்னால் தாங்க முடியவில்லை. காரணம் ஏதுமில்லாவிட்டால் நான் இவ்வளவு தூரம் அச்சம் கொள்ள மாட்டேன். என்னால் வாய் விட்டுச் சொல்ல முடியவில்லை. ஏதோ ஒன்று...... ஏதோ ஒன்று..... தங்களை என்னை விட்டுப் பிரித்து இழுத்துச் செல்ல வந்திருப்பது போல் உணர்கிறேன். திடீரென்று இந்த ஆற்றில் வெள்ளம் வந்து நம் இருவரையுமே தனித் தனியாக வெவ்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று ஒதுக்கினால் எப்படி யிருக்கும்? அது போன்ற ஓர் அச்சம் என்னை வாட்டி வதைக்கிறது.''

சிரித்தான் புலவன். ''ஆற்று வெள்ளம் அடித்துச் சென்றால் என்ன? இரும்பவும் ஒருவரை யொருவர் தேடிக் கண்டு பிடித்து விட்டால் போகிறது! நீ எங்கிருந்தாலும் நான் உன்னை விட்டுவிட மாட்டேன்.''

''நீங்கள் ஆண் பிள்ளை. எதையும் துச்சமாக மதிக்கிறீர்கள். அந்த அளவுக்கு என்னிடம் துணிவில்லையே!''

''கயல்விழி! நம்மை யாராலுமே பிரிக்க முடியும் என்று நான் நம்பவில்லை; நம்பவே இல்லை'' என்று குரல் தழு தழுக்கக் கூறினான் பைந்தமிழ்க் குமரன். ஆனால் அவனுக்கே இந்த அழைப்பு ஏதோ ஒரு வகைத் திகைப்பைக் கொடுத்தது.

''தங்களோடு பழகி நான் தங்களைப் புரிந்து கொண்டிருக்கிறேன். தங்களால் குலோத்துங்க சோழரின் சபையில் ஒரு நாள்கூட அமைதியாக இருக்க முடியாது. அவருடைய வீரத்தையும் வெற்றியையும் தாங்கள் புகழ்ந்து பாட மாட்டீர்கள். அதன் விளைவுகளை எண்ணிப் பார்த்துப் பதறிக் கொண்டிருக்கிறேன் நான். வலிமை நிறைந்த பகைவர்களின் கூட்டத்துக்குள் நீங்கள் தனியே செல்கிறீர்கள்.''

''குலோத்துங்க சோழரிடம் எனக்கு நம்பிக்கை யிருக்கிறது'' என்றான் புலவன். ''அவருக்குக் கவிஞர்களின் செருக்கை மதிக்கத் தெரியும். கம்ப நாட்டாழ்வாரே அவர்மீது உலாப் பாடவில்லை. அப்படியும் அவரைத் தண்டிக்க வில்லை சக்கரவர்த்தி. என்னை ஒரு போதும் அவர் வற்புறுத்த மாட்டார்.''

''பிறகு எதை அங்கு பாடுவீர்கள்?''

''நான் கற்றவனே தவிரக் கற்பனைப் புலவனல்ல என்பதை அவரிடம் கூறுவேன். வள்ளுவருக்கு விளக்கம் கேட்டால் சொல்லுவேன். கம்பர் எழுதிய ராம காதையின் ஏட்டுப் பிரதி ஒன்று கிடைத்தால் அதையும் கற்றுக் கொள்ள வேண்டுமென்னும் ஆவலிருக்கிறது.''

''நீங்கள் பாடியுள்ள கூத்துப் பாடலைப் பாடும்படி கேட்டால்?''—அவனுடைய உள்ளத்துக்குள் எந்த வினா சுழன்று கொண்டிருந்ததோ அதையே நேரடியாகக் கேட்டு விட்டு, அவனுடைய விழிகளில் தன் விழிகளைப் பதிய வைத்தாள் கயல்விழி. பைந்தமிழ்க் குமரன் அவள் விழிகளில் தேங்கிக் கிடந்த அச்சத்தின் அளவைக் கண்ணுற்றான். அவன் கூறும் மறுமொழியில் அவள் உயிர் துடித்துக் கொண்டிருந்தது. 'பாண்டித் திருமகள் கூத்தைப் பாடும்படி கேட்டால்?'

''கேட்க மாட்டார்கள்; கூடுமானவரை நானும் விழிப்பாக இருப்பேன்.''

''கேட்டால்?'' என்று திரும்பவும் கேட்டாள் கயல்விழி.

''வற்புறுத்தினால் பாடி விடுகிறேன். பாடினால் என் தலையைக் கொய்து விடுவார்களா என்ன? நான் பாண்டிய நாட்டின் சார்பில், பாண்டிய மன்னரின் சார்பில் அனுப்பப்படும் புலவன். எனக்கு ஏதும் நேர்ந்து விடாது.''

அவனுடைய கரங்கள் இரண்டையும் பற்றிக் கொண்டு கெஞ்சினாள் கயல்விழி. கரங்களைக் கண்ணீரால் நிறைத்தாள். ''அந்த ஒரு தவற்றை மட்டும் ஒருகாலும் செய்து விடாதீர்கள். அதிலும் அந்த இளவரசன் இருக்கிறானே, அவன் இதைக் கேட்டு விட்டால் மறு கணமே உங்கள் உயிரைப் பறித்து விடுவான். புலியின் குகைக்குள் போய் அதன் வாலைப் பற்றி இழுப்பது எவ்வளவு அபாயமோ அவ்வளவு அபாயம் இது. நாகத்தின் புற்றுக்குள் சென்று அதன் தலையில் தட்டி எழுப்பி விடாதீர்கள்! உங்களைக் கெஞ்சுகிறேன்; மன்றாடுகிறேன்; இந்த ஒரே ஒரு வாக்கு எனக்குக் கொடுங்கள். இதை மட்டும்

அங்கு பாடப் போவதில்லை என்று எனக்கு வாக்குத் தாருங்கள்.''

உணர்ச்சிக் குவியலாய் மாறி விட்டாள் கயல்விழி. ஆனால் அவள் சிந்தனை செய்யாமலும் இல்லை. இளவரசன் இராஜ இராஜனுக்கு முன்னால் பாட வேண்டாமென்று எவ்வளவு தெளிவாக வற்புறுத்துகிறான்! அவனுடைய தலைமையில் நடந்த நிலைமைகள்தான் அவை என்பதைக் கயல்விழியும் தெரிந்து கொண்டிருக்கிறாளா?

வாக்குக் கொடுக்க அவன் விரும்பவில்லை. அங்கு எது வந்தாலும் ஏற்றுக் கொள்ளவே அவன் சித்தமாக இருந்தான். ஆனால் கயல்விழிக்கு ஆறுதல் சொல்ல வேண்டுமே?

''இதோ பார், இப்போதே நாம் ஒரு முடிவு செய்து கொண்டு போவது நல்லதல்ல. அங்குள்ள நிலைமையை அறிந்து கொள்ள வேண்டும். திறந்த மனத்துடன் போய் வருகிறேன். ஒரு வேளை நான் பாட மறுப்பதே எனக்கு ஆபத்தாக இருக்கக் கூடுமல்லவா?''

கயல்விழி ஏதும் சொல்வதறியாது தடுமாறினாள்.

''கயல்விழி! இந்த நாட்டை விடுவிப்பதற்காகவும் உன் கரம் பற்றுவதற்காகவும் நான் என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வது என்ற உறுதி பூண்டிருக்கிறேன். லட்சியத்துக்கு இருக்கும் சக்தி மிகவும் வலிமையானது. அது தன்னை நிறைவேற்றிக் கொள்ளும் வரையில் நம்மைக் காப்பாற்றியே தீரும். ஆகவே வீணாக இங்கு தனிமையில் கலங்கிக் கொண்டிருக்காதே! புன்முறுவலுடன் எனக்கு விடை கொடுத்து அனுப்பு!'' என்றான்.

அவள் தேம்பித் தேம்பி அழுதாள். கைத் தாங்கலில் மெல்ல அவளை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தான் பைந்தமிழ்க் குமரன். எந்த ஆறுதல் மொழிகளும் அவள் செவியில் புகவில்லை.

மறு நாள் அவன் ரதத்தில் ஏறி அமர்ந்து கொண்டு விடைபெற்ற போது கயல்விழி தன் கண்ணீரைத் துடைக்கவும் மறந்து சிலையாகி நின்றாள். ரதத்தின் சக்கரங்கள் அவளது மலரையொத்த இருதயத்தின் மேல் உருண்டு சென்றன.

பதின்மூன்றும் அத்தியாயம்

'பாண்டிய கண்டனன்'

பைந்தமிழ்க்குமரன் பாண்டிய நாட்டை விட்டுக் கிளம்பியவுடனேயே, அந்தச் செய்தியைத் தம்முடைய ஒற்றர் தலைவன் மாவலிராயன் வாயிலாகச் சக்கரவர்த்திக்கு அனுப்பி விட்டார் சயங்கொண்ட சோழ வல்லபர். குலோத்துங்க சோழர் புலவன் அங்கு வந்து சேரக் கூடிய நாளைக் கணக்கிட்டு அதற்கு ஏற்பத் தம்முடைய நிகழ்ச்சிகளில் சில மாறுதல்கள் செய்து வைத்திருந்தார்.

கங்காபுரியை அடைந்த தமிழ்க் குமரனுக்கு அதன் எல்லையிலேயே சக்கரவர்த்தியின் வரவேற்புக்கள் காத்திருந்தன. அரண்மனைச் சிவிகை அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. அதிகாரிகளும் பணியாட்களும் அவனை முக மலர்ச்சியோடு வரவேற்று அழைத்துச் சென்றார்கள். அரண்மனைக்குள்ளாகவே இருந்த விருந்தினர் மாளிகைகளில் ஒன்று அவனுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. பிரமித்துப் போனான் பைந்தமிழ்க் குமரன். நாட்டின் செல்வச் செழிப்பைக் கண்டும், சக்கரவர்த்தியின் ஆணைகள் செயலாற்றப்படுகிற வேகத்தைக் கண்டும் அவன் பிரமித்தான். 'மாபெரும் வலிமையும் கட்டுக்கோப்பும் நிறைந்த இந்த சாம்ராஜ்யத்தை வெல்ல வேண்டுமென்றா நான் சபதம் செய்திருக்கிறேன்?'

உடனே தனக்குள் சிரித்துக் கொண்டே வள்ளுவரின் குறளை ஒரு முறை சொல்லிப் பார்த்துக் கொண்டான். 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப, எண்ணியார் திண்ணிய ராகப் பெறின்!' அவனுடைய திண் தோள் விம்மிப் புடைத்தெழுந்தது.

பாண்டியரின் அரண்மனையில் இருந்ததைவிட மிகுதியான வசதிகள் அந்தச் சின்னஞ் சிறு விருந்தினர் மாளிகையில் நிறைந்திருந்தன. அகிற்புகை சூழ்ந்து அருமையான மணம் பரப்பிக் கொண்டிருந்தது. முதிர்ந்த யானைத் தந்தங்களைக் கால்களாகக் கொண்ட பஞ்சணைக் கட்டில், மிருதுவான ஆசனங்கள், குறிப்பறிந்து ஏவல் முடிக்கும் பணியாட்கள்.

நறுமணம் கமழ்ந்த நன்னீரில் குளித்து முழுகி விட்டு, அறுசுவை உணவை முடித்துக் கொண்டு ஆசனம் ஒன்றில் ஓய்வுக்காக அமர்ந்திருந்தான் பைந்தமிழ்க் குமரன். சக்கரவர்த்திகள்

அனுப்பி வைத்த அதிகாரி ஒருவர் வந்து அவனுடைய நலன்களை விசாரித்தார். ''இன்று மாலையில் அரண்மனைப் பொதுச் சபையில் ஒரு முக்கியமான பெருவிழா இருக்கிறது. கோசல நாட்டு வீர நரசிம்மருக்கு விருதுப் பெயர் சூட்டிச் சக்கரவர்த்திகள் பாராட்ட விருப்பதால், அந்தக் கடமைகளில் அவர்கள் இப்போது மூழ்கியிருக்கிறார்கள். பொதுச் சபையில் தங்களுக்கென்று ஆசனம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் வந்து தங்களை அழைத்துச் செல்கிறேன். விழா முடிந்த பின்னர் அவர்களுடைய ஓய்வை அறிந்து தாங்கள் அவர்களைச் சந்திக்கலாம்.''

''சக்கரவர்த்திகளுக்கு என் வணக்கத்தையும் வாழ்த்துக்களையும் கூறுங்கள். சோழ நாட்டுப் பெருமக்களின் அன்புக்கு என் நன்றி'' என்றான் பைந்தமிழ்க் குமரன்.

விருதுப் பெயர்கள், பரிசில்கள், பட்டங்கள் யாவும் ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்குகிறவர்களுக்கு வழங்கி அவர்களது உழைப்பைப் போற்றும் பண்பு காலம் காலமாகத் தமிழகத்தில் இருந்து வருகிறது. மென்மேலும் அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்து அவர்களது ஆற்றலை வளர்ப்பதற்காகவும், மக்கள் அவர்களது அருமையை உணர்ந்து அவர்களது உழைப்பால் பயனடைய வேண்டுமென்பதற்காகவும் மூவேந்தர்களுமே இந்தப் பழக்கத்தை ஆதரித்து வந்தார்கள். அதிகாரிகள், வணிகர்கள், புலவர்கள், வீரர்கள் முதலியோரைப் பற்றிப் புகழ்ந்து வளர்ந்த நாடு இது. ஆனால் வேற்று நாட்டு இளவரசன் வீரநரசிம்மருக்கு எதனால் குலோத்துங்கர் விருதுப் பெயர் சூட்டப் போகிறார் என்று புலவனுக்கு விளங்கவில்லை. என்ன பெயர் சூட்டப் போகிறார்?

அதிகாரி அவனை அழைத்துச் செல்ல வந்து விட்டார். அவரோடு புறப்பட்டான் பைந்தமிழ்க் குமரன். ஏற்கனவே அந்தப் பெரிய மண்டபம் முழுதும் சபையோரால் நிரம்பி வழிந்தது. சக்கரவர்த்தி, இளவரசன், விருந்தினர் முதலியோரும் வந்து விட்டனர்.

''பாண்டிய நாட்டுக் கவிஞர் பைந்தமிழ்க் குமரன்!'' என்று உரத்த குரலில் கூவினான் முகப்பில் நின்று கொண்டிருந்த அறிவிப்பாளன். சபையிலிருந்த அனைவரது விழிகளும் அவன் பக்கம் திரும்பின. வியப்போடும் அச்சத்தோடும் திரும்பின. குலோத்துங்கரும் உற்றுக் கவனித்தார். இளவரசன் இராஜ இராஜனின் முகம் இறுகியது: கோசல நாட்டு இளவரசி புன்னகை தவழும் கண்களால் ஆவலோடு கவனித்தாள்: எவ்வளவு பெருந்தன்மை குலோத்துங்கருக்கு! பகை நாட்டைச் சார்ந்தவனாக இருந்தாலும் அவன் கவிஞன் என்பதால் எவ்வளவு ஏற்றம் தருகிறார்! முக்கியமானவர்களின் பெயர்களை மட்டிலுமே அறிவிப்பாளன் கூறி அறிமுகப்படுத்துவான்.

பைந்தமிழ்க் குமாரனுடைய ஆசனம் எங்கோ ஒரு மூலையில் இருக்கவில்லை. அமைச்சர்களுக்கும் படைத் தலைவர்களுக்கும் அடுத்தாற் போல் குலோத்துங்கரின் பார்வையில் படுகிற இடத்தில், மிகவும் அருகில் போடப்பெற்றிருந்தது.

ஏறுநடை, நிமிர்ந்த குளிர்ந்த நோக்கு, புன்னகை தவழும் வதனம் இவற்றோடு வனவாசம் புரியும் ரிஷி குமாரனைப் போல் எளிமை கமழ அவன் சபைக்குள் வந்து கொண்டிருந்தான். அலை பாய்ந்த கருங்கூந்தல் அவனுடைய தோளில் சுருண்டு விழுந்திருந்தது. இளம் தாடி ஒரு தனிப் பொலிவோடு மின்னிக் கொண்டிருந்தது. பாதத்துக் குறுக்கே முடிந்த உத்தரீயத்துடன் வந்த அவன் அமைதியாகச் சக்கரவர்த்திக்கும் ஏனையோருக்கும் வணக்கம் தெரிவித்து விட்டுத் தன் ஆசனத்தில் அமர்ந்தான். எட்டுச்சுவடியும் கையுமாக, அவன் சபைக்குள் நடந்து வந்த தோற்றம் செங்கோலும் கையுமாக ஒரு புவியரசன் வருவது போலிருந்தது. விழிகளில், நடையில், கைவீச்சில் எதிலுமே அவனிடம் செருக்குத் தென்படவில்லை. ஆனால் அவனுடைய பணிவோ கம்பீரம் கலந்த கவர்ச்சி கொண்டிருந்தது.

மண்டபத்தின் மத்தியில் அரியாசனங்களில் வீரநரசிம்மனும் குலோத்துங்கரும் வீற்றிருந்தார்கள். நரசிம்மனை அடுத்து அவரது குமாரத்தி மாலினி அமர்ந்திருந்தாள்; சக்கரவர்த்தியை அடுத்து இராஜ ராஜன் செருக்கோடு சாய்ந்திருந்தான். மற்றவர்களுடைய விழிகளைப் போலவே இளவரசியின் விழிகளும் தன் முகத்தில் சுழல்வதைக் கண்ட இளம் புலவன் அவற்றைக் கவனித்தும் கவனியாதவனைப் போல், வீரநரசிம்மனை நோக்கத் தொடங்கினான். வயது நாற்பதுக்கு மேல் இருக்குமென்றாலும் கோசலநாட்டு வீரனின் உடலில் இளமை பொங்கிக் கொண்டிருந்தது. முக பாவத்தில் பண்பு சுடர் விடுவதைப் புலவனால் அறிந்து கொள்ள முடிந்தது. (தொடரும்)

புதிய பறவை



நேயர் மகாஜனங்களுக்குக் கந்தசாமி வணக்கம். நான் மெத்தப் படிச்சவனுமில்லே; கலை நுணுக்கங்களைப் பத்தி எனக்கு ரொம்பவும் தெரியாது. இருந்தாலும் 'புதிய பறவை' 'ஏதோ இங்கிலீஷ் பட விளம்பரம்மாதிரி தடபுடலா இருக்குதே'ன்னு எண்ணிக் கிட்டுத் தியேட்டருக்குள்ளே நுழைஞ்சேன். ஆரம்பக் காட்சியைப் பார்த்ததும் நெசம்மாவே ஏதோ 'ஆலிவுட்'டிலே எடுத்த இங்கிலீஷ் படம் மாதிரி தான் இருந்தது. ஆனா வயித்தெரிச்சலை என்னன்னு சொல்ல! வெகு சீக்கிரத்திலேயே நம்ம தமிழ்ப் படங்களுக்கே உரித்தான 'கோணங்கித்தன'மெல்லாம் தலைநீட்ட ஆரம்பிச்சது. கொஞ்ச நேரத்திலேயே கதை 'ஒரிஜினல்' இல்லேங்கறது புரியுது! ஒங்களுக்குக் கூட ஞாபகம் இருக்கும்னு நெனைக்கிறேன்: 'சேஸ் எ க்ருகட் ஷேடோ'ன்னு ஓர் ஆங்கிலப் படம் வந்திச்சில்ல. கிட்டத்தட்ட அதேதான் 'புதிய பறவை'யா பரிணமிச்சிருக்கு—சில மாறுதல்களோடே! 'அதுதான் வனக்கமாச்சேங்கிறீங்களா? சரி,வுடுங்க.

அது சரி, தமிழ்த் திரை உலகில் இந்தமாதிரி புதுசான கதையைப் படமாக்கிப் புரட்சி பண்ணினவங்க இன்னும் ஒரு புரட்சி பண்ணியிருக்கக் கூடாதோ? பாட்டுகள் 'சஸ்பென்ஸ்' படத்தின் போக்கையே நாசமாக்கிவிடுங்கறது ஏன் படம் எடுத்தவங்களுக்குத் தெரியாமப் போயிடுச்சு? அட, அந்தச் 'சிட்டுக் குருவி' என்ற பாடல் இனிமையாகத் தான் இருக்கு; இன்னும் ஒண்ணு ரெண்டு பாடல்கள் ஏதோ கேட்கும்படியாகத்தான் இருக்கு. ஆனால் கதையின்(!) போக்கை இவை ரொம்பவும் பாதிக்கிறதுங்களே! காதல் காட்சிகளில் விரசம் எல்லை மீறிப் போய்விடுகிறது. சில இடங்களில் நம்மையே நாணப் படும்படி வைச்சுட்டாங்களே?

நடிப்பைப் பத்திக் கேட்கிறீங்களா? சரோஜா தேவி வருது. சௌகார் ஜானகி வருது. இன்னும் யார் யாரோ வர்றாங்க; ஆனா நடிக்கும் சிரமத்தைப் பெரும்பாலும் சிவாஜிதானே எடுத்துக்கிட்டிருக்காரு! இருந்தும் படம் சோபிதமாகலையே! பாவம் நாகேசு—மனோரமா ஜோடி! அவங்க பண்ற சேட்டைகளை 'முன் வரிசை' ரசிக மகாஜனங்களால் கூட அனுபவிக்க முடியவில்லை.

படத்திலே சிறப்பான அம்சம் போட்டோகிராபி தானுங்க. சில இடங்களில் காமிராக்காரர் தம் திறமையை நல்லாக் காட்டியிருக்கார். ஆனாலும் அந்தோ! அந்தப் பாழும் ஈஸ்ட்மன் கலர் அப்படியா அவர் திறமையைக் 'கிரகணம்' பண்ணணும்!

இன்னும் ஒரு விசயம் என் மனசை ரொம்ப உறுத்துது: என்னைப் போலே படிக்காதவங்களுக்கு இருக்கக்கூடிய ரோசமும், மான உணர்ச்சியும் கூடவா படிச்சவங்களுக்கு இல்லாமல் போயிடும்? நைட் கிளப்பிலே நடனமாடுகிற ஒரு பொண்ணு என்னமாக் குடித்தனம் பண்ணுவான்னு கூடவா ஒரு அம்புளைக்குத் தெரியாமப் போயிடுச்சு? இப்படிக் கெட்டுத் திரியற பெண்டாட்டியைச் சிவாஜி காலில் விழாத குறையாகக் கெஞ்சும் கெஞ்சல் — சே, சே!

கடைசியா படத்தில் 'டமாஸ்', 'கிமாஸ்' ஏதாவது இருக்குதான்னு கேட்பீங்க. ஒண்ணும் குறைச்சல் இல்லே, போங்க. பட ஆரம்பத்திலே ஒரு பொண்ணு விடாமே தொரத்திக்கிட்டு வரும் ஒரு காருக்குப் பயந்து கொட்டற மழையிலே ஓட்டம் ஓட்டமா ஓடிக் கடைசியிலே யாராலேயோ கொல்லப்பட்டு முதுகிலே ரத்தம் சொட்டத் தேங்கிக் கிடக்கும் தண்ணியிலே செத்து விழுகிறமாதிரி காட்டறாங்க. ஆனால் முடிவிலே வேறு விதமாகக் காட்டறாங்க. கொலையாளி அவளைத் தொரத்தவே யில்லே; ஒரே அறையிலே அவளைக் கொன்னு, தூக்கிக்கிட்டுப் போய் ஓடும் ரயிலின் குறுக்கே போட்டுடற மாதிரி படம் பிடிச்சிருக்காங்க. இதை 'டமாஸு'ன்னு சொல்லாம வேறே என்னுன்னு சொல்லறது? இது மட்டுமா? கடைசியிலே சரோஜா தேவியும் அவரு 'அப்பா'வும் யாருன்னு தெரிவிக்கிறாங்க. அப்போ என்னால் பொங்கி வந்த சிரிப்பை அடக்க முடியவேயில்லே. உண்மையைச் சொல்லுங்க: நீங்களும் அப்போ விழுந்து விழுந்து சிரிச்சீங்களா, இல்லையா?

தமிழ்த் திரையுலகில் ஒரு புது முயற்சி என்று வேணுமானால் பாராட்டலாம். ஆனால் மொத்தத்தில் 'புதிய பறவை' பழைய கூட்டைச் சேர்ந்ததுதான்!


ஆர். சீனிவாசன்

ரசாயன வகுப்பு

இறுதி வருஷ மாணவன்

விவேகானந்தா கல்லூரி

சென்னை - 4





பனிமலையில் பவனி வருவோம்



"நீங்கள் இப்போது கீழே பார்ப்பது ஆல்ப்ஸ் மலை. உங்கள் இடதுபக்கம் தெரியும் சிகரம்தான் 'மான்ட் பிளாங்க்' இன்னும் சிறிது நேரத்தில் ஜினிவா நகரத்தை அடைவோம்" என்றார் எங்கள் விமான சாரதி.

கண்களுக்கு எட்டியவரை ஒரே பனி மயம்தான். விமானத்தில் இருக்கும் அனைவரும் கீழே காணப்படும் வெண்மைக் கோலங்களைப் பார்த்துக் கொண்டிருந்தோம். சீக்கிரத்திலேயே ஓர் ஏரியின் மீது பறந்து விமானம் ஜினிவாவை அடைந்தது. ஒரு பாரிஸ் போருக்கு ஓர் அதிசயம் என்று சொல்வதுபோல் ஜினிவாவில் விறுவிறுப்பான காற்றைச் சுவாசித்த பின் இந்தச் சிறிய நாட்டுக்கு இவ்வளவு பெரிய கீர்த்தி எப்படி வந்தது என்று தெளிவாயிற்று. உலகத்தில் உள்ள ஜனங்கள் ஆயிரக் கணக்கில் ஸ்விட்ஜர்லாந்துக்கு வருவதன் காரணம் என்ன, எல்லோரையும் ஆகர்ஷிக்கும் ரகசியம் யாது என்று கேட்டால் எல்லாம் இந்த ஆல்ப்ஸ் மலையின் மகிமை தான். ஸ்விட்ஜர்லாந்து மலைகளால் சூழப்பட்ட ஒரு சிறிய நாடு. நடுநடுவில் பள்ளத்தாக்கும் பீடபூமியுமாக இருக்கின்றன. கிட்டத்தட்ட ஐம்பது லட்சம் ஜனங்கள் இருக்கிறார்கள். ஸ்விட்ஜர்லாந்தின் வடக்கே ஜெர்மனியும் மேற்கே பிரான்சும், தெற்கே இத்தாலியும் கிழக்கில் ஆஸ்திரியாவுமாக இருக்கின்றன. இந்த நாட்டுக்குக் கடற்கரை கிடையாது. ஸ்விட்ஜர்லாந்தின் இயற்கையின் அழகைப் பார்க்க இரண்டு கண்களும் போதாது. பார்த்ததை வர்ணிக்கவும் இயலாது. பனியால் மூடப்பட்ட மலைச் சிகரங்களும், மரங்களால் மூடப்பட்ட சரிவுகளும், பச்சைப் பசேல் என்ற மைதானங்களும், கண்ணாடி போல் மின்னும் ஏரிகளும், ஸ்படிகம் போன்ற தெளிந்த நீரோட்டமும், கொழுகொழுவென்ற ஆடு மாடுகளும் கண்களுக்கு வெகு ரம்மியமான காட்சி அளிக்கின்றன. இந்த நாட்டின் அழகைப் பார்க்கவும், சுத்தமான காற்றைச் சுவாசிப்பதற்கும் பிரயாணிகள் வருடம் முழுதும் வந்துகொண்டேயிருப்பார்கள். ஆனால் விளையாட்டில் விருப்பமுள்ளவர்கள் குளிர் காலத்தில்தான் அதிகமாக வருவார்கள். ஏனென்றால் அப்போதுதான் பனி பெய்து ஸ்கையிங் (Skiing) விளையாட்டு வெகு மும்முரமாக நடக்கும்.






லோக சஞ்சாரம்




எல்லோரையும் கவரக்கூடிய விளையாட்டு இது.

ஸ்விட்ஸர்லாந்தின் தலைநகரமான பெர்ன் (Bern) 'ஆர்' என்ற அழகிய நதிக் கரையில் இருக்கிறது. இந்த நகரத்தின் முத்திரைச் சின்னமும் பெர்ன்தான். அதாவது கரடி. இந் நகரை ஸ்தாபித்தவர் தாம் இங்கே கட்டுக் கொன்ற முதல் பிராணி ஒரு கரடி என்பதால் நகருக்கு அப்பெயர் சூட்டி நகரின் முத்திரைச் சின்னமும் அதுவாகவே அமையச் செய்தார்.



இங்கே விசேஷமாகப் பார்க்க வேண்டியது ஒரு கடிகாரக் கூண்டு. உயர்ந்து நிற்கும் இதில் ஒவ்வொரு மணி நேரம் முடிந்ததும் மணி அடிக்கும்போது ஒரு சிறு பொம்மலாட்டம் நடைபெறும். ஸ்விட்ஸர்லாந்து தேசம்தான் விதம் விதமானதும் விநோதமானதுமான கடிகாரங்களுக்குப் பெயர் போனதாயிற்றே!

அநேகமாக எல்லாப் பெரிய நகரங்களும் ஓர் ஏரிக் கரையிலோ அல்லது நதிக் கரையிலோ இருக்கின்றன. மலைகளி



லிருந்து. பெரிய பெரிய நதிகள் உற்பத்தியாகின்றன. மேற்குப்பக்கம் ரோன் என்ற நதி பிரான்ஸ் வழியாகச் சென்று கடலை அடைகிறது. ரைன் என்ற மற்றொரு பெரிய நதி செயின்ட் கோதார்டு மலையிலிருந்து கிழக்குப்பக்கம் ஆஸ்திரிய எல்லையையொட்டி கான்ஸ்டன்ஸ் ஏரியை அடைகிறது. மலைச் சிகரங்களில் மாண்ட் பிளாங்க் என்ற சிகரம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 15,700 அடி உயரத்தில் இருக்கிறது. மாடர் ஹார்ன் என்ற மற்றொரு சிகரம் சுமார் 15,000 அடி உயரம். செயின்ட் பர்னட் என்ற புகழ் பெற்ற மலைக் கணவாய் வழி இங்கேதான் இருக்கிறது.

ஜோலாட்டீ நாராயணசாமி

இந்த நாட்டில் கோடை காலத்தில் அதிக உஷ்ணம் இராது. குளிர் காலத்தில் மலைகளில் பனி இருந்தாலும் அதிகக் குளிர் இராது. ஏரிகள் உறைவதில்லை. இந்த மென்மையான சீதோஷ்ண நிலையிலும் பல வகைப் பழங்களும், காய்கறிகளும் செழிப்பாக வளரும். திராக்ஷை, ஆப்பிள், ஆலிவ், பியர், பீட்ரூட், உருளைக் கிழங்கு முதலியவை பயிராகின்றன. திராக்ஷையிலிருந்து உயர்தர ஒயின் எடுக்கிறார்கள். மலைச் சரிவுகளில் ஓக், பீச், பைன் என்ற மரங்கள் ஏராளமாக வளருகின்றன. விதம் விதமான காட்டு மான்களும் 'ஷமோய்' என்ற மானும் காடுகளில் வசிக்கும். மைதானத்தில் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு அழகான தங்கள் நாட்டு உடையை உடுத்திக் கொண்ட ஆயர்களையும் குடியானவர்களையும் பார்க்கலாம். மாடுகளின் கழுத்தில் மணியோசை கேட்டுக் கொண்டேயிருக்கும். குடி

யானவர்கள், 'பைன்' மரத்தால் கட்டப்பட்ட வீடுகளில் வசிப்பார்கள். ஓட்டுக்கூரை புயலில் பறக்காம லிருப்பதற்காகப் பெரிய பெரிய கல்லைக் கூரைமேல் வைத்திருப்பார்கள். ஏராளமான பால் இருப்பதால் பாலடைக் கட்டி, சாக்லேட் முதலியவற்றைச் செய்து வெளி நாடுகளுக்கு அனுப்புகிறார்கள். ஓய்ந்த நேரத்திலும், பண்டிகை நாட்களிலும்—அவர்கள் ஆடிக் கொண்டு பாடுவது மிகவும் அழகாக இருக்கும். ஆல்ப் ஹார்ன் என்ற அவர்களுடைய முக்கியமான வாத்தியம் மூன்று அடியிலிருந்து பன்னிரண்டு அடி நீளம் இருக்கும். மரத்தால் செய்யப்பட்டது. மலைகளால் சூழப்பட்டிருப்பதால் இம்மக்கள் பழக்க வழக்கங்கள், நடை உடை பாவனை களில் தனித் தன்மை பெற்று விளங்குகிறார்கள். ஆல்ப்ஹார்ன் என்ற வாத்தியமும் யோடெலிங் எனப்படும் இசையும் மலைச் சாரல்களின் செல்வாக்கினால் அம்மக்களிடையே உருவாகி வளர்ந்து வருகிறது என்றுகூடச் சொல்லலாம்.

குடியானவர்கள் தம் வீட்டைக் குளிர் காலத்தில் உஷ்ணமாக வைத்துக்கொள்ள ஒரு பெரிய அறையின் மூலையில் ஓர் அடுப்பில் விறகுகள் போட்டு இரவும் பகலும் எரிய விட்டுக் கொண்டே யிருப்பார்கள். ஆட்டு ரோமங்களால் பெண்மணிகள் கம்பளி நெய்வார்கள். பூவேலை, தையல் வேலையிலும் மகா நிபுணர்கள். குளிர் காலத்தில் ஆடவர்கள் தச்சு வேலை செய்வார்கள். பொம்மை விளையாட்டுச் சாமான்களி லிருந்து மேஜை, பீரோ போன்ற பெரிய பெரிய மரச் சாமான்களும் செய்வார்கள். கடைகளில் வைத்திருக்கும் சாமான்களைப் பார்த்தால் வியப்பில் ஆழ்ந்து விடுவோம்.

ஸ்விஸ் மக்களுக்கு ஹோட்டல் நடத்துவது முக்கியமான தொழில். எங்கு பார்த்தாலும் வீடுகளைவிட ஹோட்டல்கள்தான் அதிகமாகக் காணப்படும். வருடத்துக்குச் சுமார் பதினைந்து லட்சம் மக்கள் அயல் நாடுகளிலிருந்து இந்த நாட்டுக்கு வந்து போவார்கள். சிலர் பரம்பரையாக இந்த ஹோட்டல் தொழிலை நடத்தி வருகிறார்கள். இதனால் அரசாங்கத்துக்கு நிறைய வருவாய் கிடைக்கிறது. மற்றொரு வெகு முக்கியமான தொழில் கடிகாரம் செய்வது. கடிகாரத்தில்தான் எத்தனை விதங்கள்! கைக்கடிகாரம், சுவர்க் கடிகாரம், மேஜைக் கடிகாரம், குயில் கடிகாரம், சங்கீதக் கடிகாரம் முதலியவை கிட்டத்தட்ட 2500 தொழிற்சாலைகளிலும், கடைகளிலும் ஆயிரக் கணக்கான ஆட்களும் பெண்களும் வேலை செய்கின்றனர். வெகு நுட்பமான வேலைக்குப் பெண்மணிகள் உதவி தான் வேண்டியிருக்கிறது. தேசிய கைத் தொழில் சாமான்கள், கண்ணாடி அறைகளில் அலங்காரமாக வைத்திருப்பது நம் கண்ணையும், நெஞ்சையும் அள்ளும்.

ஸ்விட்ஜர்லாந்து அமைதி நிறைந்த நாடு. சென்ற இரண்டு உலக யுத்தங்களிலும் இந்த நாடு ஈடுபடவில்லை. இந்நாட்டு மக்கள் எல்லா நாடுகளுடனும் சமாதானமாகவே இருக்க விரும்புகிறார்கள். சண்டையில் ஈடுபட விரும்பாததால் அவர்களுக்கு இராணுவப் படை இல்லை என்று நினைக்காதீர்கள். இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் ராணுவப் பயிற்சி கட்டாயமாகப் பெற வேண்டும். சமயம் நேர்ந்தால் சண்டைக்கும் தயாராக இருப்பார்கள். இந்தச் சிறிய நாட்டுக்கு ராஜாவும் இல்லை; பிரதம மந்திரியும் இல்லை. சுய நிர்ணய உரிமைகள் பெற்ற நாட்டின் பல பகுதிகளும் இணைந்த ஒரு குடியரசு இந்தத் தேசம். (Federal Republic) ஆட்சியாளர்களை மக்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். தலைவர் தேர்தல் வருஷா வருஷம் நடக்கிறது. ஏழு பேர்களுள்ள ஒரு குழு பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இவர்களுக்கு மேல் பிரஸிடெண்ட் இருப்பார். எந்தக் காரியம் நடத்தவேண்டுமானாலும் மக்களின் ஓட்டு மூலமாகத்தான் நடத்த வேண்டும். ஆனால் ஒரு விசேஷமும் அதிசயமும் என்னவென்றால், எல்லாத் துறைகளிலும் முன்னேறிய இந்த நாட்டுப் பெண்மணிகளுக்கு மட்டும் வோட்டுரிமை கிடையாது.

இந்தச் சிறிய அரசாங்கத்தில் நான்கு வித பாஷைகள் பேசுகிறார்கள். வடக்கு பாகத்தில் ஜெர்மன், தெற்கில் இத்தாலியன், மேற்கில் பிரெஞ்சு, மற்றும் சில மலைப்பிரதேசங்களில் ரோமான்ஷ் என்ற பாஷை பேசுவார்கள். ஆனால் பாஷையைப் பற்றி ஒரு சண்டை சச்சரவும் நேருவதில்லை. இயற்கையாகவே அழகாக இருக்கும் தம் நாட்டைச் செயற்கையாலும் அழகுபடுத்துவார்கள் அம் மக்கள். எல்லா வீட்டு ஜன்னல்களிலும் பூச்செடிகள் இருக்கும். பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கு ''ஆல்ப்ஸ் மலைகளைச் சுத்தமாக வைத்திருங்கள்'' என்று சொல்லிக்கொடுப்பார்கள். மாணவர்களும் அதே போல் நடந்துகொள்வார்கள். திறந்த வெளியில் நடமாடுவதிலும் விளையாடுவதிலும் இந்த மக்களுக்கு அலாதி ஆவல். ஐரோப்பாவில் உள்ள மற்ற நாடுகளிலும் ஸ்கேடிங், ஸ்கியிங் போன்ற பனி விளையாட்டுக்கள் இருந்த போதிலும் ஸ்விட்ஜர்லாந்தில் இருக்கும் விநோதமும் அழகும் வசதிகளும் மற்ற இடங்களில் காணப்படுவதில்லை. ஆகையால் ஸ்விட்ஜர்லாந்து ஐரோப்பாவின் விளையாட்டு ஸ்தலம் என்று பெயர் பெற்றது. ஏன், உலகத்திலேயே இந்த அழகிய சூழ்நிலை வேறு எங்கும் இல்லை என்று தான் அநேகர் கருதுகிறார்கள். குதிரை சவாரி, மலை ஏறுவது, வேட்டையாடுவது, மீன் பிடித்தல் இவைகளில் கூட ஜனங்களுக்கு வெகு ஆர்வம் உண்டு. சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு மலையேறக் கற்றுக் கொடுப்பார்கள். குழந்தைகளுக்குச் சாப்பிடுவதும், தூங்குவதும் போல் மலை ஏறுவதும், நீந்துவதும் கூடவே பிறந்தவை. விடுமுறை நாட்களில் ஆசிரியர்கள் தம் பள்ளிச் சிறுவர்களை மலை ஏற அழைத்துச் செல்வார்கள். பனி உடைக்கும் கோடரி, கயிறு, இன்னும் மலை ஏறுவதற்குத் தேவையான உபகரணங்களையும் எடுத்துக் கொண்டு குதூகலத்துடன் சிறுவர், சிறுமிகள் ரயில் ஏறிச் செல்வதைப் பார்க்கலாம். அரசாங்கத்திலிருந்து இவர்களுக்குக் கம்பளி அளிப்பார்கள். இரவில் தங்குவதற்

ருச் சிறிய சிறிய வீடுகளை மலை மேல் கட்டி யிருக்கிறார்கள். ஸ்விஸ் ஆல்பைன் சங்கத்தின் அங்கத்தினர்கள் எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பார்கள். நன்கு பயிற்சி பெற்றவர் களை வழிகாட்டியாக நியமிப்பார்கள்.

சிறியதாய் இருந்தாலும் ஜினீவா நகரம் தான் ஸ்விட்ஜர்லாந்தில் வெகு முக்கியமான நகரம். இது 'லெமான்' என்கிற ஏரியின் மேற்குப் பக்கம் இருக்கிறது. ஏரிக்கு மத்தியில் உள்ள ஒரு பொங்குபுனல் நானூறு அடி உயரத்துக்கு நீரைப் பீச்சி அடிப்பதை இந் நகரில் காணலாம். உலகில் உள்ள முக்கிய மான பத்து நகரங்களுள் இதுவும் ஒன்று: அவற்றில் மிகச் சிறியதான நகரமும் இதுவே. மத, அரசியல் மாறுதல்கள் காரணமாக நாட் டைத் துறந்து அகதிகளாக வந்த பலருக்குப் புகலிடம் அளித்துச் சரித்திரப்பெருமை பெற்ற நகரம் ஜெனீவா. ஹென்றிடுனன்ட் என்கிற ஸ்விஸ் நாட்டவர்தான் உலகுக்குச் செஞ்சிலு வைச் சங்கத்தை அளித்தவர்.

முதல் உலக யுத்தத்துக்குப் பிறகு சமா தான ஒப்பந்தத்தோடு லீக் ஆப் நேஷன்ஸ் உருவானதும் இந்நகரில்தான். இன்றைய ஐ. நா. சபையின் ஐரோப்பிய தலைமைக் காரியாலயமும் இந்நகரில்தான் உள்ளது.

ஸ்விட்ஜர்லாந்துக்கு வருபவர்கள் 'ஜங்பிரா' அதாவது 'இளமங்கை'யைப் பார்க்காமல் திரும்ப மாட்டார்கள். ஒரு சனிக்கிழமை பிற்பகலில் நாங்களும் இந்த உற்சாகமூட்டும் உல்லாசப் பயணத்துக்குப் புறப்பட்டோம். இயற்கை எழில் மிகுந்த பகுதியைக் கடந்து சென்றோம். அன்று இரவு ஆல்டைபின் ஹோட்டலில் தங்கி விட்டு மறு நாள் காலை யில் சின்ன மலைரயிலில் ஜங் பிரா மலை சிகரத் தைப் பார்க்கச் சென்றோம். சமுத்திர மட்டத்திலிருந்து இது 11,333 அடி உயரம் இருக்கிறது. ஆகையால், காற்றின் அழுத்தம் குறைவாக இருக்கும். சிலருக்குச் சுவாசிப்ப தற்குக் கஷ்டமாக இருக்கும். ஐரோப்பாவி லேயே ஜங் பிராவில் உள்ளதுதான் எல்லா வற்றையும்விட மிக உயரத்தில் இருக்கும் ரயில் நிலையம். இந்த ரயில் பத்தாயிரம் அடி உயரம் ஏறுவதனால் மெதுவாகத்தான் செல் லும். மலையிலிருந்து பள்ளத்தாக்கில் இருக் கும் வீடுகளையும் வயல்களையும் பார்க்க வெகு அழகாக இருந்தன. மேலே போகப் போகக் குளிர் அதிகமாகி விட்டது. எல்லாரும் கோட்டும், மப்ளரும் அணிந்து கொண்டு விட்டோம். நாலா பக்கமும் ஒரே பனி மயமாக இருந்தபடியால் கண்களுக்குக் கறுப்பு கண்ணாடியும் போட்டுக் கொண்டோம். ஆங் காங்கு ரயிலை நிறுத்திப் பிரயாணிகளுக்குப் பார்க்க வேண்டிய இடங்களைப் பார்வையிட வசதிகள் இருக்கின்றன. பனியினால் கட்டப் பட்ட ஒரு ஐஸ் மாளிகை இருக்கிறது. குகை களும், ஹோட்டல்களும் ஒரு பெரிய சர்வ தேசிய ஆராய்ச்சி நிலையமும் இருக்கின்றன. இந்த இடத்தில் ஸ்பின்க்ஸ் என்று அழைக்கப் படும் ஒரு லிப்ட் எங்களை இன்னும் அறுநூறு அடி உயரம் இழுத்துச் சென்றது. அங்குள்ள ஒரு தூரதிருஷ்டிக் கண்ணாடி வழியாக வெகு தூரத்தில் இருந்த 'இளமங்கையை'ப் பார்த்து அதன் அழகில் சொக்கிப் போய்ப் பிரமிப்பில் ஆழ்ந்தோம். எங்களை உயர ஏற்றிச் சென்ற லிப்டிலேயே ஒரு வான சாஸ்திர ஆராய்ச்சி நிலையம் உள்ளது.

இந்நாட்டில் என்னை மிகவும் கவர்ந்த விஷயம் மிகக் குறைந்த 'மூல' பொருள்களை வைத்துக் கொண்டு ஸ்விஸ் மக்கள் எத்துணை பெரிய காரியங்களை யெல்லாம் சாதித்திருக் கிறார்கள் என்பதுதான்.

இந்த நாட்டில் உலோகம் ஒன்றும் அதிக மாகக் கிடையாது. உணவுப் பண்டங்கள் சிலவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றனர். இவர்களிடம் முக்கியமாக இருப்பது மின்சார சக்தியும், கடவுள் கொடுத்த புத்தியும்தான். இருக்கிற கொஞ்ச நஞ்ச வசதிகளையும் நல்ல முறையில் பயன் படுத்துவதில் கைதேர்ந்தவர்கள் இந்நாட்டு மக்கள். இவர்களுடைய வாழ்க்கைத் தரம் உலகத்திலுள்ள எல்லா நாடுகளையும்விட உயர்வானது. ஓர் இடத்திலாவது ஓர் அப்பழுக்கு இருக்காது. சேரிகளை எங்குமே காண முடியாது. பிச்சைக்காரர்கள் என்ற பேச்சே கிடையாது. ஆனால் மலையில் வாழும் சில குடியானவர்கள் மட்டும் சற்று ஏழை யாக இருப்பார்கள். ஆனாலும் அவர்கள் மன நிறைவுடனும் மகிழ்ச்சியுடனும் வாழ் கிறார்கள்.

குட்டிக் கதை

மௌனானந்தா என்னும் பெரியார் ஒரு நாள் தமது சீடர்களை அழைத்துக் கொண்டு ஒரு வயலுக்குப் போனார். அங்கே அவர் தமது சீடர்களுக்கு நான்கு பள்ளங்களைக் காட்டினார். அவை ஐம்பது ஐம்பது முழம் ஆழம் வெட்டப்பட்டிருந்தன. அந்த நான்கு பள்ளங்களுக்குப் பக்கத்தில் வயலின் சொந்தக் காரன் ஐந்தாவது கிணறும் வெட்ட ஏற்பாடு செய்திருந்தான்.

சீடர்கள் ஒன்றும் விளங்காமல் குருவை நோக்கினார்கள். அவர்களது அறியும் ஆவலை வளர்த்தபின் குரு கூறினார்:

''வயலுக்குத் தண்ணீர் இறைப்பதற்காக இந்த மனிதன் ஐம்பது ஐம்பது முழம் ஆழ முள்ள நான்கு கிணறுகள் வெட்டியிருக்கிறான், ஒவ்வொன்றாக. ஆனால் ஒன்றிலும் தண்ணீர் வரவில்லை. எனவே ஐந்தாவது கிணறு வெட் டிக் கொண்டிருக்கிறான். இதிலிருந்து இவன் எத்தனை அறிவுக் குறைவானவன் என்று தெரி கிறதல்லவா? இப்படி நான்கு நான்கு கிணறுகள் வெட்டிப் பூமியைப் பாழடிக்காமல் ஒரே இடத்தில், இருநூறு என்ன, இருநூற் றைம்பது கஜம் ஆழம் வெட்டிப் பொருளை யும், உழைப்பையும் பயன்படுத்தியிருப்பானா னால், நீரும் கிடைத்திருக்கும், இத்தனை பூமியும் வீணாகியிராது. தான் எடுத்துக் கொண்ட காரியத்திலும் வெற்றி கண்டிருப்பான். எனவே, என் அருமைச் சீடர்காள்! இதி லிருந்து என்ன தெரிகிறது? 'தமது சிரத்தை யையும் லட்சியத்தையும் அடிக்கடி மாற்றுப வர்களின் நிலை இதுதான்' என்பதுதானே?


என்ன சொல்கிறீர்கள்! எனக்குச் சிகிச்சை செய்தாக வேண்டுமா?
ஆமாம்! ஆமாம்!! ஆமாம்!!!
கட்டாய சிகிச்சையா! ஹா. கடவுளே! நான் என்ன செய்யட்டும்? என்ன செய்யட்டும் கடவுளே நான்? செய்யட்டும் என்ன கட...
ஏன் யாராவது கூப்பிடுகிறார்களா?
இல்லை, என்ன செய்யட்டும் என்று கேட்டீர்களே? அதற்குப் பதில் வருகிறதா என்று கவனிக்கிறேன்.
நீங்கள் கடவுளை இப்படிப் பரிகசித்துப் பேசக்கூடாது!
கடவுளை ஒன்றுமில்லாததற்கெல்லாம் திடீர் திடீர் என்று கூப்பிட்டுத் தொந்தரவு கொடுப்பதுதான் பரிகசிப்பதாகும்.
தாங்கள் கீழே விழுந்து விடப்போகிறீர்கள். ஜாக்கிரதை! நகர்ந்து வந்து உட்கார்ந்து கொள்ளுங்கள்.
இல்லை. நான் போக வேண்டும்.



அவள் நல்ல பலசாலி. ஹாக்கி நன்றாக ஆடுவாள். பாரம் தூக்கும் போட்டியில் பரிசு பெற்றிருக்கிறாள்...
இருக்கிறது. அவள் இங்கே என்னோடுதான் இருக்கப் போகிறாள். அவள் பெயர் குமாரி பிரபா.
ஒரு சமயம் ஆஸ்பத்திரியில் ஒரு நோயாளி மருந்து சாப்பிட மறுத்தாள். அவள் கழுத்தைப் பிடித்துக்கொண்டு மருந்தைச் செலுத்தினாள்.


நான் இந்த மாதிரி 'ஆயின்ட்மெண்ட்'களை எப்போதும் தயாராய் வைத்திருப்பேன்.
அடிக்கடி முட்டிக்கொள்வீர்களாக்கும்?
இல்லை, இதுதான் முதல் தடவை.
அப்படியா? அப்படியா?
மருந்து போட்டாகி விட்டது.
இப்போதே இப்படிக் கூட்டமாயிருக்கிறதே. பத்துவருஷம் கழித்து வீதியைக் கடக்கும்போது பத்துபங்கு ஜனங்கள் இருப்பார்களே என்று நினைத்துக் கொண்டு வந்தபோதுதான் தாங்கள் நெற்றியும் என் நெற்றியும்...
அட, நானும் அப்படியேதான் நினைத்துக்கொண்டு வந்தேன். நமக்குள் கருத்து ஒற்றுமை பலம் இருக்கிறது!
நான் என் கடமையைச் செய்துவிட்டேன். தயவு செய்து நான் போகிறேன்.
சற்று நில்லுங்கள். என் கடமை ஒன்று இருக்கிறதே.
உங்கள் கடமையா?
ஆம்! நான் ஒரு விரப் பிரம்மச்சாரி. அந்த விரதத்தைக் கடுமையாக அனுஷ்டிப்பவன். தாங்கள் என் நெற்றியில் இடித்தது மன்றிக் கைகளால் தொட்டு மருந்தும் போட்டீர்கள். ஆகையால் என் பதிவிரதைத் தன்மை... இல்லை பிரம்மசரிய விரதம் பாழாகிப் போய்விட்டது. ஆகையால்...
தொடரும்



ஐடெக்ஸ்
கண் மை

- ★ எரிச்சலற்றது
- ★ குளுமையானது

சிறு குழந்தைகளுக்கும்
மிகச் சிறந்தது

சாஸ்திரீய முறையில்
தயாரிக்கப்பட்டது

ஐடெக்ஸ்
பிந்தி
குங்கும சாந்து


பல கவர்ச்சியான கலர்களில்
எங்கும் கிடைக்கும்

●

தயாரித்து விநியோகிப்பவர்கள் :

அரவிந்த் லாபரட்டரீஸ்

த. பெ. 1415 – மதராஸ் -17



அண்ணாவின் முன்னிலையில் ஆக்ரோஷத்தோடு வாதாடிய அன்றைய ஆயிஷாவின் போக்கு இன்றுவரை இம்மியளவும் மாறவில்லை என்பதை அறிந்த வேங்கடாத்திரிக்கு வேதனையாகத்தான் இருந்தது. அவள் தனது நெஞ்சத்திலே வஞ்சத்தை வேதனை நீரூற்றி வளர்த்து வருகிறாள் என்றறிந்தபோது வருத்தமாகவும் இருந்தது.

''அண்ணா ராமராயரின் செய்கையில் நீ குறை காணுவதுதான் அநீதியாக இருக்கிறது, ஆயிஷா!'' என்றான் வேங்கடாத்திரி அனுதாபத்துடன். ''உன் பெற்றோரின் மரணத்துக்கு என் அண்ணா எந்த விதத்திலும் பொறுப்பாளி அல்ல. நடந்ததைச் சொன்னால் நீ நம்ப மாட்டாயே என்றுதான் அவர் உன்னைத் தம் அன்பு மகளாக்கிக் கொண்டு வந்து ஆதரித்து வருகிறார்.



பாமினிப் பாவை

கௌசிகன்

அடிமையாக எண்ணி அவர் உன்னைத் தம் தேவியாரின் அந்தப்புரத்துக்கு அனுப்பவில்லை.''

அந்தி வேளையின் அமைதியே குலையும் வண்ணம் ஆயிஷா கடகடவென்று ஒரு வெறிச் சிரிப்புச் சிரித்தாள். ''இதையெல்லாம் நான் நம்ப வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களா தளபதியாரே? அது இந்த ஜன்மத்தில் இல்லை. ஆதரவும் அந்தப்புர வாழ்வும் எனக்கு அளித்திருப்பது அன்பினாலல்ல. தாம் செய்த பாவத்துக்குப் பிராயச்சித்தமாகத்தான் இவற்றையெல்லாம் எனக்கு உங்கள் அண்ணா அளிக்கிறார்'' என்றாள் ஆயிஷா.

எத்தனையோ ஆசைகளோடு வந்தவன் வேங்கடாத்திரி. பாச வேகத்தில் படபடத்துப் போயிருந்தவன். அவன் ஆசைத் தீயைக்கூட அவித்து விட்டாள் ஆயிஷா. மாறாத அவள் மனப் போக்கைக் கண்டு அவன் உள்ளத்தில் வெறுப்பும் வேதனையும்தான் குமைந்தன. இத்தனை அழகிய உருவத்தின் உள்ளம் எப்படிக் கெட்டுக் கிடக்கிறது என்று அநுதாபப்பட்டான். மாறாதவளாய், மாற்ற முடியாதவளாய் நிற்கும் ஆயிஷாவின் மதிமுகத்தையே சில நிமிஷங்கள் பார்த்துக் கொண்டிருந்தவன் மௌனமாகத் திரும்பி நடக்க ஆரம்பித்தான். பத்தடிகூடப் போயிருக்க மாட்டான். விம்மல் ஒலி கேட்டு வியப்புற்றுத் திரும்பினான் வேங்கடாத்திரி. இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக் கொண்டு ஆயிஷாதான் குலுங்கக் குலுங்க அழுதுகொண்டிருந்தாள். அவள் கையிலிருந்த சிதார் வாத்தியம் அவள் காலடியில் புல் தரையில் கிடந்தது.

அந்தப் பேச்சை இந்த அழுகையோடு ஒப்பிட்டுப் பார்த்து ஒன்றும் புரியாத நிலையில் அவள் அருகில் வந்தான் வேங்கடாத்திரி. நாணிக் கண் புதைத்து நிற்கும் நங்கையின் கரம் விலக்கி முகம் பார்க்கும் காவிய நிலை போல், கரங்களுக்குள் முகம் புதைத்துக் கதறி அழும் காரிகையின் சிரம் வருடி அவள் மனம் குளிரச் செய்யலாமென்று வேங்கடாத்திரியின் உள்ளம் துடித்தாலும் அவளது ஆத்திரப்

பேச்சையும் போக்கையும் எண்ணிய போது துணிவு ஏற்பட வில்லை. ஆகவே உருண்டு கிடந்த வாத்தியத்தை எடுத்து இலேசாக அதன் தந்திகளை மீட்டியபடியே, ''ஆயிஷா!'' என்று அன்பொழுக அழைத்தான்.

அவளிடம் விம்மல்கள் அதிகமாயின.

''உங்கள் அன்பை என்னிடம் காட்டாதீர்கள். நான் பெண்ணே அல்ல. உங்கள் முன்னிலையிலேயே உங்கள் சகோதரரை இகழ்ந்து பேசுமளவுக்கு நான் எந்தளவு கொடியவளாகி விட்டேன்.''

''ஆயிஷா! நீ கொடியவளே அல்ல....''

''இல்லை. உங்கள் புகழ்ச்சிக்கு அருகதையற்றவள் நான். அலி ஆதில்ஷாவை அன்பு மகனாக ஏற்றவர் உங்கள் அண்ணா. அகமது நகர் நிஜாம்ஷாவின் அவமரியாதையை மன்னித்து மலை போல உயர்ந்தவர் உங்கள் அண்ணா. 'மிலேச்சர்கள்' என்று நீங்கள் இழிவாகக் கருதும் எங்களிடம் இத்தனை ஈடுபாடு கொண்டுள்ள ஒருவர் மீது எனக்குப் பழிவாங்கும் வெறிதான் மேலோங்கி நிற்கிறது. ஏனோ என்னால் அவரை மன்னிக்க முடியவில்லை. மன்னிக்க முடியாது. முடியவே முடியாது.'' சட்டென்று அவளது அழுகையும் விம்மலும் அடங்கின. பழைய வெறி அவள் கண்களில் பளபளக்கலாயிற்று.

பழிவாங்கும் வெறிக் குணம்—தன் குணத்தைப் பற்றி நினைத்து வேதனைப்படும் மனம்—இப்படியாக இருவித உணர்ச்சிகளாலும் ஆட்டி அலைக்கழிக்கப்படும் ஆயிஷாவை அமைதியோடு நோக்கினான் வேங்கடாத்திரி. வைராக்கியத்தில் இறுகிப்போன அந்த இதயத்தின் ஒரு பகுதி மெழுகாக உருகும் இயல்புடையது என்பதை அறிந்துகொண்டபோது அவளைப் புரிந்து கொள்ளவும் முடிந்தது. நாளெல்லாம் இந்த இரு மனங்களின் போராட்டத்துக்கு ஈடு கொடுக்கும் அவள் இறுதியில் பழிவாங்க வேண்டும் என்ற வெறிக் குணத்தினால் வெற்றி கொள்ளப்பட்டுச் சோபை குன்றிப் போகிறாள். அவளால் சிரிக்க முடிவதில்லை. உல்லாசமாக இருக்க அந்த எண்ணம் இடம் கொடுப்பதில்லை.

ஆயிஷாவின் இந்த நிலை கண்டு நெஞ்சம் நெகிழ்ந்த வேங்கடாத்திரி, அவள் மீது கொண்ட பாசத்தோடு பரிவும் சேரவே, ''ஆயிஷா !'' என்று அமைதியாக அழைத்தான். ''எனக்காக இந்தச் சிதார் வாத்தியத்தைச் சற்று மீட்டுவாயா ?'' என்று அவளிடம் அதை நீட்டினான்.

அவனுடைய அமைதியும் பார்வையும் அவளை அடிமை கொண்டன. மந்திரத்தில் கட்டுண்டவள் போல அவனிடமிருந்து அந்த வாத்தியத்தை வாங்கி மீட்டி, அதிலிருந்து இசையை எழுப்பினாள். இல்லை, தன் இதயத்துச் சோகத்தையே பிழிந்து வடிக்கலானாள். கண்ணீரில் மிதந்த அவள் விழித் திரையிலே அவள் பெற்றோரின் உருவங்கள் வந்து விளையாடினவோ என்னவோ !

இருள் கவியும் வேளையிலே, இரவு மலரும் பூக்களின் நறுமணச் சூழலிலே, இதயத்தைத் தொடும் இசையிலே போர்க்களத்திலிருந்து திரும்பிய தளபதியின் அயர்வு நினைவை அழுத்தவே தன்னை மறந்து மயங்கினான். இசையின் வயத்திலிருந்து மீண்டு, தன் நினைவு பெற்ற ஆயிஷா, மகிழ மரத்தில் சாய்ந்தபடி உறங்கிப் போன வேங்கடாத்திரியைப் பார்த்தாள். ஏதோ ஓர் இனம் தெரியாத பரிவு பிறந்தது அவள் உள்ளத்தில். பெண் புலி பேடைப் புறாவாயிற்று. ஓசையின்றி ஒரு கொத்து மலர்களைப் பறித்துப் புல் தரையிலே விழுதென விழுந்து கிடந்த அவனது கரங்களின் மீது வைத்து விட்டுத் திரும்பிப் பார்த்தவாறே அந்தப் புரத்தை நோக்கி நடந்தாள்.

அன்பு செய்த அர்ச்சனைதானோ அது?

10. வஞ்சம் புகுந்த நெஞ்சங்கள்

அமைதி இழந்து தவித்துக் கொண்டிருந்தார் அகமதுநகர் சுல்தான் ஹுசைன் நிஜாம்ஷா. கோல்கொண்டாவின் கூட்டுறவு கிடைத்தும் கூட ஏனோ அவர் உள்ளம் குதூகலம் கொள்ளவில்லை. கைவிட்டுப் போன கலியாண் கோட்டையை மறுபடியும் கைக்கொள்ளாதவரை அவருக்கு நிம்மதி ஏது?

தோல்வி தழும்பாக மாறவில்லை. பட்ட அவமானத்தின் ரணம் பச்சையாகவே இருந்தது. வேங்கடாத்திரியும் சித்திஹானனும் விளைவித்த அழிவுகளிலிருந்தும் அல்லல்களிலிருந்தும் மக்கள் இன்னும் நிமிரக்கூட இல்லை. அதற்குள் அடுத்த போருக்கு ஆயத்தம் செய்யலானார் அகமதுநகர் சுல்தான். கோல்கொண்டாவுக்கும் தௌலதாபாத்திற்கும் தூதுவர்கள் பறந்து கொண்டிருந்தார்கள். இரண்டு ராஜ்யங்களிலும் யுத்த முஸ்தீபுகள் மும்முரமாக நடக்கலாயின. பீஜப்பூரின் எல்லையிலே நேசப் படைகள் வந்து குவிந்தன. இப்ராஹிம் குதுப்ஷாவின் பெரும் படை அகமது நகருக்கு வந்து நிஜாமின் படைகளுடன் சேர்ந்து கொண்டது. தாக்குதலை ஆரம்பிக்கு முன் ஒற்றர்கள் கொண்டு வரும் செய்திகளை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள். நிஜாம்ஷாவின் பாசறையிலோ விருந்தும், கூத்தும், கேளிக்கையுமாகத் திமிலோகப்பட்டுக் கொண்டிருந்தது. படையெடுத்துச் சென்று போரிட்டு வெற்றி காணுமுன்பே பலன் கண்டுவிட்டது போல மகிழ்ந்திருந்தார்கள் மன்னர்கள்.

ஒப்பந்தத்தை மீறி, குதுப்ஷாவுடன் ஒன்று சேர்ந்து கொண்டு தம்மைத் தாக்கத் தருணம் பார்த்திருக்கும் செய்தி அறிந்த அலி ஆதில்ஷா செய்வதறியாது திகைத்தார். ஹுசைன் நிஜாம்ஷா தாம் இழந்த பகுதியை மீட்க இத்தனை சீக்கிரத்தில் வருவார் என்று எதிர்பார்க்கவில்லை. மறுபடியும் ராமராயரின் உதவியை நாடுவதைத் தவிர வேறு வழியில்லை ஆதில்ஷாவுக்கு. தற்காப்புக்கான முதல் நடவடிக்கைகளைச் செய்துவிட்டுத் தம் தளபதி சித்திஹானனுடன் ராமராயரைச் சந்திக்கக் கிளம்பினார்.

விஜயநகரத்திலே வீரர்களின் விளையாட்டை ரசித்துக் கொண்டிருந்தார் ராமராயர். இவ்வேளைகளில் ராயர் வீரர்களைப் பாராட்டிப் பரிசில்களை வழங்குவார். தாம்பூலம் கொடுத்துக் கௌரவிப்பார். எல்லாவற்றிற்கும் மேலாக வீர விளையாட்டுக்களிலே வெற்றி பெற்றவர்களுக்கு அழகிய பெண்களைப் பரிசாகக் கொடுத்தும் மகிழ்விப்பார் ராயர்.

இத்தகையதொரு சந்தர்ப்பத்தில்தான் தூதுவன் ஒருவன், சமூகத்தைக் காண பீஜப்பூர் சுல்தான் வந்திருப்பதாக அறிவித்து வணங்கி நின்றான். வாள் வீச்சிலே வல்லமை காட்டி நின்ற காளை ஒருவனுக்குக் கண் வீச்சிலே வல்லவளான காரிகையின் கரம் பற்றிக் கொடுத்து விட்டு எழுந்த ராமராயரிடம் பீஜப்பூர் சுல்தானின் திடீர்வரவு எவ்வித வியப்பையும் ஏற்படுத்தவில்லை. எதிர்பார்த்திருந்ததொரு செய்தியேபோல அமைதியாக, "வந்தவர்களை வரவேற்று உபசரணைகள் செய்தாயிற்றல்லவா?" என்று கேட்டபடியே வெளியில் உள்ள தம் ரதத்தை நோக்கி நடக்கலானார் ராயர்.

வணங்கிநின்ற தூதுவன் வாயைப் புதைத்திருந்த கையை எடுக்கவில்லை. "தங்கள் இளவல் அமைச்சர் திருமலைராயர் விருந்தாளியைத் தக்கபடி வரவேற்று உபசரித்து விருந்து படைத்த பிறகுதான் என்னை இங்கு அனுப்பினார்கள். அவசர காரியமாம். ஆதில்ஷா தங்களை உடனே காண வேண்டுமென்று துடிக்கிறார்." அடர்ந்து செழித்து வளர்ந்து வளைந்து நின்ற தனது அழகான மீசையை முறுக்கி ஒதுக்கியவாறு மெல்ல நடந்து சென்று கொண்டிருந்த ராமராயரின் பின்னால் நகர்ந்து கொண்டே இதை அறிவித்தான் அவன். அவனுக்குப் பதிலொன்றும் சொல்லாமலே தோளிலிருந்து சரிந்த துப்பட்டாவைத் தூக்கி மேலே போட்டுக் கொண்டு தமது ரதத்தில் ஏறினார் ராமராயர். சிறு அசைவையும் தாங்காத உயர்ஜாதி அசுவங்கள் இரண்டும் ரதத்தில் ராயர் ஏறியதும் உடலைச் சிலிர்த்துக்கொண்டு ஓடத் தயாராயின. லகானைக் கையில் எடுத்ததும் அவ்விரண்டு வெள்ளைப் புரவிகளும் வில்லிலிருந்து புறப்பட்ட கணைகளாயின.

அரண்மனையை அடுத்து நின்ற கம்பீரமான கட்டிடத்தின் முன் போய் ரதம் நின்றது. விஜயநகரத்தின் செல்வச் சிறப்பையும், சிற்பச் செல்வத்தையும் அந்நிய நாட்டவர் அறிந்து கொள்ளும் வகையில் விருந்தினர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்ட அழகான அரண்மனை அது. ராமராயர் உள்ளே நுழைந்தபோது ஆடல் மங்கையர் ஒதுங்கிக் கொண்டனர். ஹுக்காவை ரசித்துக் கொண்டிருந்த ஆதில்ஷா அதை அப்படியே ஒருபுறமாக வைத்து விட்டுத் தம் இருக்கையிலிருந்து எழுந்து வந்து ராமராயரின் நீட்டிய கைகளுக்குள் புகுந்து அவரை ஆரத் தழுவிக் கொண்டார்.

"கல்யாண் கோட்டையைக் கைப்பற்ற மறுபடியும் படை திரட்டுகிறான் நிஜாம்ஷா. இந்தத் தடவை அவனுக்கு உதவியாக குதுப்ஷாவும் கூடச் சேர்ந்து விட்டான்" என்று படபடத்தார் ஆதில்ஷா.

"இது பழைய செய்தியல்லவா? இரண்டு மாதங்களுக்கு முன்பே இதை என் வேவுகாரர்கள் எனக்கு அறிவித்து விட்டார்களே!"

"அப்படியா?... தெரிந்துமா...?" என்று திகைத்தார் ஆதில்ஷா.

"இன்னும் முன்னரேயே உங்களை இங்கு நான் எதிர்பார்த்தேன். வராமல் போகவே தனித்து நின்றே பகைவனை ஓட்ட முற்பட்டு விட்டீர்களோ என்று எண்ணியிருந்தேன்." அவர் பேச்சில் ஏளனம் கலந்திருப்பதை உணர்ந்தார் ஆதில்ஷா. 'என் உதவி இல்லாமல் உன்னால் என்ன செய்துவிட முடியும்?' என்பதுதானோ இந்தப் பேச்சின் பொருள்? சிந்தனையிலும் சிறுத்துவிட்ட ஆதில்ஷாவின் முகத்திலிருந்து அவர் உள்ளத்தில் ஓடும் எண்ணங்களைத் தெரிந்து கொண்டார் மகா மண்டலேசுவரரான ராமராயர்.

"முன்பு பட்ட அடி அதற்குள்ளாகவா மறந்து விட்டது அகமதுநகராருக்கு?" என்றார்.

"அடிபட்டவனுக்குத்தானே ஆத்திரம் அதிகமாக இருக்கும்? அவமானத்தைத் துடைத்துக் கொள்ளக் கோல்கொண்டாவின் பக்கபலத்துடன் பாய்வதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறான்" என்றார் ஆதில்ஷா தன் இயலாமையை எண்ணி வேதனைப்பட்டவாறு எங்கேயோ பார்த்துக் கொண்டு.

ராமராயர் கடகடவென்று சிரித்தார். அவரது வெண்கலக் குரலில் அந்த வீடே கலகலத்தது. வெறுப்புக் கலந்த வியப்போடு திரும்பிய ஆதில்ஷாவை அநுதாபத்தோடு பார்த்தார் ராமராயர். "என்மீது கோபம் போலிருக்கிறது. அப்படித்தானே? அகமதுநகர் படையெடுக்கும் செய்தி அறிந்தவுடனேயே நான் உதவிக்கு விரைந்து வரவில்லை என்ற தாபம் போலிருக்கிறது? உங்கள் உள்நாட்டுப் பூசல்களில் நான் தலையிடுவதை உங்கள் அவையிலேயே அநேகர் விரும்பவில்லை என்பதை அறிந்தேன். அதனால்தான் நான் ஆர்வம் காட்டவில்லை" என்று ராமராயர் தம் உள்ளத்தைத் திறந்து காட்டியபோது ஆதில்ஷாவின் முகம் மலர்ந்தது.

"பீஜப்பூரின் ஆதிக்கம் அவைத் தலைவர்களின் கையில் இல்லையே. ஆதில்ஷாவின் விருப்பம் மாறுபட்டிருந்தால் அல்லவா நீங்கள் வேறுபட்டுப் போவதற்கு?" என்று ஒட்டுதலோடு பேசினான் இத்தனை நேரம் மௌனமாக இருந்த தளபதி சித்திஹாலன்.

"அது போகட்டும், கல்யாண் கோட்டை மீது பாய்வதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கிறான் இப்ராஹிம் என்று கூறினீர்களே? இது எத்தனை நாளைக்கு முற்பட்ட செய்தி?"

"ஏன்....?" என்றார் ஏதும் புரியாமல் பீஜப்பூர் சுல்தான்.

"மிகப் பழைய தகவலோடு என்னைக் காண வந்திருக்கிறீர்கள். கல்யாண் கோட்டை கைமாறியாயிற்றே. அது தெரியுமா உங்களுக்கு?" என்றார் ராமராயர்.

"என்ன..?" சவுக்கடி பட்டவனைப்போலத் துள்ளினான் தளபதி.

"எப்படிக் கூறுகிறீர்கள் இதை?" என்று கேட்டார் ஆதில்ஷா. ஆச்சரியம் அவர் விழிகளை அகலமாக்கி இருந்தது. தங்கள் நாட்டில் உள்ள கோட்டையை எதிரி ஆக்கிரமித்துக் கொண்ட செய்தி தங்களுக்குத் தெரியுமுன் அண்டை நாட்டுக்காரருக்குத் தெரிந்த அதிசயத்தை அவர்களால் நம்பவே முடியவில்லை.

"எப்படிக் கூறினேன் என்றுதானே கேட்டீர்கள்? காற்றும் புக முடியாத இடத்தில் கூட விஜயநகரத்தின் வேவுகாரர்கள் புகுந்து



செய்திகளைச் சேகரித்து வந்துவிடுவார்கள்" என்றபோது ராமராயர் முகத்தில் பெருமிதம் பளபளக்கத்தான் செய்தது. "நேற்று மாலை வந்த ஓலையின்படி உங்கள் முஸ்திபுகளை முறியடித்துக் கல்யாண் கோட்டையைக் கைப்பற்றிவிட்டான் ஹுஸைன் நிஜாம்ஷா. இதே செய்தியைத் தாங்கிக் கொண்டு உங்கள் தூதுவனும் வந்து கொண்டிருப்பான் என்று நினைக்கிறேன்."

"ஆஹா!" என்று கர்ஜித்தான் சித்திஹாஸன். பொன்னாலான பானக் கிண்ணத்தை உருத் தெரியாமல் நெளியப் பிசைந்து கொண்டிருந்தன அவன் விரல்கள். "விஜயநகரத்துக்கு நான் வரவில்லை, நீங்கள் மட்டும் போய்வாருங்கள் என்றேன். ஆதில்ஷா சம்மதிக்கவில்லை. கல்யாண் கோட்டையைக் காப்பதற்கு நான் போயிருந்தால் இந்த விபரீதம் நேர்ந்திருக்காதோ என்னவோ...?" என்று கூறினான் சித்திஹாஸன்.

"நடந்ததைப் பற்றி விசாரணை வேண்டாம். நடக்க வேண்டியதைக் கவனிப்போம்" என்றார் ஆதில்ஷா.

"நீங்கள் இன்று வருவதற்கு முன்பே நான் முடிவு செய்து விட்டேன். நம்பிக்கைத் துரோகம் செய்து நடுப் போரில் நம்மைக் கைவிட்டுச் சென்ற கோல்கொண்டாவுக்கு ராமராயர் யார் என்பதை உணர்த்த வேண்டும் என்று. ஆகவே எனக்காகவும் உங்களுக்காகவும் விஜயநகரத்துப் படைகள் அகமது நகரையும் கோல்கொண்டாவையும் முற்றுகையிடும். நீங்கள் நாளைக் காலையிலேயே இங்கிருந்து கிளம்பிப் போய் முன்னேறி வரும் நிஜாம்ஷாவின் படைகளைத் தடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். தொடர்ந்து உங்கள் உதவிக்கு விஜயநகரின் பெரும்படை வந்து சேரும்" என்று ஆதில்ஷாவுக்கு உறுதியும் தைரியமும் அளித்துவிட்டுக் கிளம்பினார் ராமராயர்.

அப்போதுதான் கல்யாண் கோட்டை பறிபோன செய்தியைத் தாங்கிய ஆதில்ஷாவின் தூதுவன் பரபரப்புடன் உள்ளே நுழைந்தான். அவன் கொண்டு வந்த லிகிதம் பிரிக்காமலே, படிக்காமலே ஆதில்ஷாவின் கைகளில் கசங்கியது. "சித்திஹாஸன்! நமது வேவுப் படைகளின் திறமையின்மையை நேற்று நாட்டாமையின் முகத்துக்கு நேரே நாம் புரிந்து கொள்ள நேர்ந்த துர்ப்பாக்கியத்தை எண்ணி வெட்கப்படத்தான் வேண்டும்" என்றார் எல்லையற்ற மனத்தாங்கலுடன்.

"இது போன்று இன்னும் பல விஷயங்களிலும் விஜயநகரின் திறமைகளைக் கண்டு நாம்



பொறுமைப்படத்தான் வேண்டி இருக்கிறது'' என்றான் பீஜப்பூரின் பிரதம தளபதி.

உதவி கேட்டு ஓடி வந்த கையோடு அதிகாலையில் அகமது நகருக்குத் திரும்பியாக வேண்டிய பீஜப்பூர் சுல்தான் அலி ஆதில்ஷா நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார் அரண்மனையில். சித்திஹாஸனுக்குத் தூக்கம் வரவில்லை, எந்த இரவில்தான் அவன் தூக்கத்தின் இனிமையைப் பூரணமாக அநுபவித்திருக்கிறான்? அழகிய விஜயநகரம் நிலவைப் போர்த்திக் கொண்டு அமைதியான உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. விடுதியிலிருந்து வெளிப்பட்ட சித்திஹாஸன் விஜயநகரின் விசாலமான வீதியிலே காலாற நடந்து கொண்டிருந்தான். தூரத்தில் எங்கோ தெருக் கூத்தில் நடிக்கும் வேஷதாரியின் வீரவாசகங்கள் காற்றில் மிதந்து வந்தன. ''டேய்! நில் அப்படியே! வீரமிருக்குமானால் எடு உன் வாளை. ஆண்மை இருக்குமானால் உரிமை யாருக்கு என்பதைப் போரிட்டு முடிவு செய்வோம்.''

தெருக் கூத்துக் கதாநாயகன் நின்றானோ இல்லையோ சித்திஹாஸன் அப்படியே நின்றான். நிலவொளியிலே நிர்மாநுஷ்யமாக நெடுந்தூரத்துக்கு நீண்டு கிடந்த கடை வீதியைப் பார்த்தான். பல வருஷங்களுக்கு முன்னால் அதே ராஜ வீதியில் நண்பகல் வேளையில் நடந்த சம்பவம் ஒன்று நினைவில் தெளிந்தது.

யாருமற்றிருந்த அந்த வீதி தொடிப்பொழுதில் மக்கள் நடமாட்டம் மிகுந்து கலகலப்பாக மாறியது. அலங்கார ஆடையணிந்த ஆரணங்குகளும் உல்லாச புருஷர்களும் வேற்று நாட்டு வணிகர்களும் சாரி சாரியாகப் போய்க் கொண்டிருந்தனர். வீரர்களும், பிரபுக்களும், அரண்மனையிலே அந்தஸ்துப் பெற்ற அதிகாரிகளும் அவரவர் தகுதிகளுக்கேற்றபடி குதிரைகளிலும் பல்லக்குகளிலுமாக ஊர்ந்து கொண்டிருந்தனர். அப்போது...

அழகியதொரு குதிரையிலே ஆடம்பரமாகப் பவனி வந்து கொண்டிருந்தான் ஒரு சுந்தர வாலிபன். கட்டுமஸ்தான உடல், கம்பீரமான தோற்றம்; காளைப் பருவம். முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த அவன் விஜயநகரின் அண்டை நாடான கோல்கொண்டாவின் இளவரசன் இப்ராஹிம். தன் அண்ணன் ஜம்ஷிட்டின் சதிக்குப் பயந்து உயிரைக் காத்

துக் கொள்ள ஓடி வந்திருந்தான். ஒளிய வந்தவனுக்கு உதவிகள் செய்து ஆதரித்து அந்தஸ்தும் அளித்துக் கௌரவித்திருந்தார் ராமராயர். தமது சொந்த உடைமைகளை நிர்வகிக்கும் பொறுப்பையும் இப்ராஹிமுக்கு அளித்து ஏற்றமுடன் வாழ வகை செய்திருந்தார். சொந்த நாட்டு அரசியலிலே அல்லல் பட்டவன் அந்நிய நாட்டிலே ஆனந்தமாக வாழ்ந்து வந்தான்.

குதிரையைத் தன் இச்சைப்படி செல்ல விட்டு ராஜபாட்டையின் நாகரிகக் கோலாகலத்தைக் கவனித்தபடி மெல்லச் சென்று கொண்டிருந்த அவன் முன்னால் திடீரென்று நாலைந்து குதிரை வீரர்கள் வந்து நின்றார்கள். அவர்களில் பிரதானமாக விளங்கியவன் பருத்த உடலும் கருத்த நிறமும் காலனைப் போன்ற தோற்றமும் கொண்டவன். பெயர் ஆம்பர்கான். வாள் வலிமையையும் தோள் வலிமையையுமே வியாபாரப் பொருள்களாகக் கொண்டு பாரதத்து மன்னர்களின் அவையிலே சேர்ந்து பணி புரிய அபிசீனியாவிலிருந்து வந்த மூன்று சகோதரர்களில் இருவர் விஜயநகரத்திலும் ஒருவன் பீஜப்பூரிலும் புகுந்தார்கள். தன் சாகஸங்களால் ராமராயரின் அன்பைப் பெற்றான் ஆம்பர்கான். பீஜப்பூரின் படையிலே சேர்ந்து ஏற்றம் பெற்றான் சித்திஹாஸன்.

இப்ராஹிமின் வழி மறித்து நின்ற ஆம்பர்கானின் முகத்தை ஆத்திரம் பள பளக்க வைத்திருந்தது. "ஊரை விட்டு ஓடி வந்து ஒளிந்து வாழும் உனக்கு என் ஜாகீரிலே என்ன ஏற்றம்? உழைத்துப் பெற்ற என் உரிமையை ஓடுகாலி நீ வந்து பறித்துக் கொண்டாயே! என் வழியிலிருந்து ஒதுங்கி விடு" என்று ஆர்ப்பரித்தான் ஆம்பர்கான்.

கோல்கொண்டாவின் வருங்கால குதப்ஷா ஆத்திரமடையாமல் அமைதியாகவே பதில் கூறினான். "மன்னர்கள் தங்கள் உடைமைகளை யாருக்கு வேண்டுமானாலும் உரிமையாக்குவார்கள். உன் உரிமையை நானா வேண்டிப் பெற்றேன்? ராமராயர் விரும்பிக் கொடுத்தால் நான் வேண்டாமென்று சொல்லவா? வீண் வம்புக்கு வராதே. வழி விடு" என்று தன் குதிரையை ஒதுக்கி ஓட்டலானான் இப்ராஹிம்.

ஆம்பர்கானின் ஆதிக்கத்தில் இருந்த உடைமைகளைத்தான் இளவரசன் இப்ராஹிமின் பொறுப்பிற்கு மாற்றியிருந்தார் ராமராயர். ஜாகீரைப் பறிகொடுத்த ஆத்திரத்தைப் பறித்துக் கொண்டவர் மீது காட்டாமல் பெற்றுக் கொண்டவன் மீது கட்டிப் பாய்ந்தான் அந்த அபிசீனிய வீரன்.

"ஏ, கோழை! ஏன் ஓடுகிறாய்? எடு உன் வாளை. வாழ்வதற்கு உரிமை யாருக்கு என்பதை முடிவு கட்டுவோம்" என்று நடு வீதியில் நின்று ஆர்ப்பரித்தான் ஆம்பர்கான்.

தன்மானத்தை இழக்க விரும்பாத இப்ராஹிம் குதிரையிலிருந்து இறங்கினான். ஆனால் அப்போதும் ஆத்திரப்படவில்லை. அமைதியாக, ஆம்பர்கானின் செயல் முறை தவறு என்பதைக் கூறித் தன் வாளுக்கு வேலை இல்லாமல் செய்யவே விரும்பினான். ஆனால் ஆத்திரத்திலே கொதிப்பேறிய அபிசீனியனோ அடாத முறையில் அத்துமீறி வார்த்தைகளைக் கொட்டவே அதற்கு மேலும் தாங்க மாட்டாத இப்ராஹிம் தன் வாளை உருவ வேண்டியதாயிற்று. நடு வீதியிலே ராயரின் ஜாகீர் யாருக்கு உரிமை என்பதைத் தீர்மானிக்க அவ்விருவரின் பட்டாக் கத்திகளும் முட்டி மோதிக் கொண்டன. உரிமையைப் பறிகொடுத்த பதற்றத்தோடு கண் மண் தெரியாமல் ஆவேசமாகத் தன் வாளைச் சுழற்றினான் ஆம்பர்கான். அவனுடைய தாக்குதல்களை அமைதியோடு லாகவமாகச் சமாளித்து அவனைக் களைப்படையச் செய்த இப்ராஹிம், இறுதியிலே தன் வாளை மின்னல் வேகத்தில் சரேலென்று அவன் இதயத்தில் பாய்ச்சி நியாயம் தன் பக்கமே இருக்கிறது என்பதை நிலைநாட்டினான்.

தன் சகோதரனின் இதயத்திலிருந்து கொப்பளிக்கும் குருதியைக் கண்டு குமுறினான் உடன் வந்த உடன்பிறந்தான். அவனும் மற்றவர்களும் தங்கள் உடைவாளை உருவித் தனித்து நின்ற இப்ராஹிமைத் தாக்க வந்தார்கள். தற்காப்புக்காக மற்றும் இருவரை மாய்க்க வேண்டிய அவசியம் இளவரசனுக்கு ஏற்பட்டது. கறை படிந்த தன் கத்தியை உயிர் துறந்த அந்த அபிசீனியனின் உடையிலேயே துடைத்துக் கொண்டு குதிரையிலேறித் தன் வழியே சென்றான் இப்ராஹிம்.

விஜயநகரத்து வீதியை ஆம்பர்கான் தன் ரத்தத்தினால் செம்மையாக்கிய அந்தக் காட்சி— குருதி வெள்ளத்திலே குப்புற விழுந்து துடிக்கும் தன் சகோதரன் ஆம்பர்கானின் காட்சி— நினைவில் எழுந்த போது சித்திஹாஸனின் கண்கள் கலங்கின. உடல் துடித்தது. ரத்தம் கொதித்தது. தன் சகோதரர்களைக் குரூரமாகக் கொன்ற அந்த இளவரசன்தான் இன்று கோல் கொண்டாவின் குதப்ஷா இப்ராஹிம். அன்றைக்கே சித்திஹாஸனின் இதயம் இதற்குப் பழிக்குப் பழி வாங்குவேன் என்று சபதம் செய்திருந்தது. நியாயம் யார் பக்கம் என்பதைப் பற்றிச் சிந்திக்கச் சகோதர பாசம் இடம் தரவில்லை.

"சரியான சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. வஞ்சம் தீர்த்து என் நெஞ்சத்தைக் குளிர்விப்பேன்" என்றான் வாய் விட்டு சித்திஹாஸன். நிலவு மேகத்துக்குள் புகுந்தது. தன் சகோதரர்களின் விதியை முடித்த அந்த விசாலமான வீதியிலே அதற்கு மேலும் நடந்து செல்லப் பிடிக்காத அவன் அரண்மனைக்குத் திரும்பி நடந்தான்.

தூக்கம் பிடிக்காமல் புரண்டு கொண்டிருந்தாள் துங்கபத்திரை. 'பெற்றோர்களைக் கொன்றதற்காகப் பழி வாங்கத் துடிக்கும் ஆரிஷா, சகோதரனைக் கொன்றதற்கு வஞ்சம் தீர்த்துக் கொள்ளக் காத்திருக்கும் சித்திஹாஸன், அண்ணனை அவமானப்படுத்திய அகமது நகர் சுல்தானுக்குப் பாடம் கற்பிக்கத் திட்டமிட்டுள்ள வேங்கடாத்திரி — அப்பப்பா! இவர்களின் இந்தப் பழி வாங்கும் மனப்பான்மை செல்லாம் இந்த நாட்டை எந்த நிலையில் கொண்டு போய் நிறுத்தப் போகின்றனவோ?' என்று பெருமூச் செறிந்தவாறு இமைகளை மூடினாள் அந்த நதிக் கன்னி.

(தொடரும்)

படித்துப் பாருங்கள்

காஞ்சியில் எழுபத்து ஒன்று

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் எழுபத்தொன்றாவது ஜன்ம தினத்தை யொட்டி காஞ்சீபுரம் ஸ்ரீ சங்கர பக்த ஜன சபையினர் இந்தப் புனிதமான நூலை வெளியிட்டிருக்கிறார்கள். காஞ்சிமா நகருக்கும், தேவி காமகோடிக்கும், ஆசாரிய சங்கரருக்கும் பேதமே இல்லை எனலாம். எனவே ஆசாரியருக்கு அஞ்சலி செலுத்து வதற்காக உருவாக்கப்பட்ட இந்நூலில் கச்சி யம்பதியின் பெருமைக்கு அதிக இடம் தந் திருப்பது பொருத்தமேயாகும். காஞ்சீபுரத் தில் உள்ள கோயில்களில் எழுபத்தியொன் றின் புகைப்படங்களும், அவற்றைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும், காஞ்சிக்கும் சங் கரருக்குமுள்ள தொடர்பு பற்றிய கட்டுரை யும், "சில்பி"யின் அருமையான சித்திரங் களும் நூலை அழகுபடுத்துகின்றன. பகவத் பாதரில் தொடங்கி குரு பரம்பரையின் வைபவத் தைக் கூறும் சுலோகங் களும் காமகோடி தர்சன தோத்திரமும் தினப்படி பாராயணத்துக்கு உரி யனவாகும். ஸ்ரீ காம கோடி பெரியவருக்கு அந்நிய நாட்டு அடியார் களில் சிலர் அளித்துள்ள அஞ்சலிகள் நெஞ்சைத் தொடுகின்றன. அவர் நடத்திய மகா கும்பாபி ஷேகங்களின் புகைப்படங் களும் ஸ்ரீ காமகோடி பீடத்துக்குத் தொடர் புடைய எழுபத்தியொரு இடங்கள்எழுபத்தியொரு கைங்கரிய கர்த்தர்கள் ஆகியோரைப் பற்றிய குறிப்புகளும் ஸ்ரீ மடத் தில் சுடுபாடுள்ள யாவரை யும் விசேஷமாகக் கவ ரும். ஸ்ரீ பெரியவாள் சென்னை நகரிலிருந்து விடைகொண்ட தினத்தில்ராஜாஜி நிகழ்த்திய உரையின் சுருக்கமும், இதைபற்றி ஸ்ரீ பெரிய வாள் சென்ற புத்தாண்டன்று வானொலியில் நிகழ்த்திய பிரசங்கமும் மலரின் இறுதிப் பகுதிகளாக அமைந்து மனத்தை நிறைவு செய்கின்றன. பி. ஜி. பால் கம்பெனி ஸ்ரீ கே. நீலகண்டய்யரவர்கள் பக்தி சிரத்தையோடு இந்நூலைச் சிறந்த முறையில் குறுகிய காலத் தில் வெளியிட்டு ஆசாரிய பக்தர்களின் நன்றியைப் பெற்றிருக்கிறார். எல்லாம் எழு பத்தொன்றாக அமைந்த இந்நூல் பிரதியை எழுபத்தியொரு ரூபாய்க்கோ, இயலாதவர்கள் எழுபத்தியொரணுவுக்கோ (நான்கு ரூபாய் நாற்பத்தி நாலு பைசா) பெற்றுப் படித்துப் பயன் பெறலாம்.

புத்தகம் கிடைக்குமிடம்: ஸ்ரீ சங்கர பக்த ஜனசபை, 4, சாலைத் தெரு, காஞ்சீபுரம்.



சுடர் - வ. உ. சி. மலர்

சென்ற பதின்மூன்று ஆண்டுகளாகத் தில்லி தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் வெளி வரும் "சுடர்" வருஷ இதழ் இவ்வாண்டும் சிறப்பாக வெளி வந்திருக்கிறது. முன்பு மகா கவி பாரதியார், திரு வி. க. போன்ற பெரி யோர்களின் நினைவாக மலர்கள் வெளியிட் டிருக்கின்றனர். இவ்வாண்டு வ.உ.சி. மலர் சிறப்பாக வெளியாகியிருக்கிறது. தேசபக்தச் செம்மல் பிள்ளையவர்களைப் பற்றி நாம் அறிந்துகொள்ள விரும்பும் அத்தனையும் இம் மலரில் அடங்கியிருக்கின்றன.

இந்தியா அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் தேச பக்திக் கனலை எழுப்பி, சுதந்திரமாகக் கப்பல் ஓட்டி, அதற்காகச் சிறையில் செக் கிழுத்துப் பல இன்னல்களுக்கானானவர் வ.உ. சிதம்பரம் பிள்ளை. இத்தகைய தேசபக்தரின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்களை யெல் லாம் அவரோடு பழகிய அறிஞர்கள் அற்புத மான கட்டுரைகளாக வடித்துத் தந்திருக்கிறார் கள், இந்தச் 'சுடர்' மலரிலே.

தேசபக்தர் வ. உ. சிதம்பரம் பிள்ளையைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள இந்த மலர் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. கி. வா. ஜ., பி. ஸ்ரீ. பரலி சு. நெல்லையப்பர், வ. உ. சி. சுப்பிரமணி யம், அகிலன், லோமாஸ், சாலை இளந்திரையன் முதலியவர்கள் இந்தச் சுடருக்குச் சுவை மிக்க கட்டுரைகள் வழங்கியிருக் கிறார்கள். கப்பலோட்டிய தமிழர் நினைவைப் போற் றும் வகையில் இம்மல ரைக் கொணர்ந்த தில்லி தமிழ்ச் சங்கத்தினர் தமிழர்களின் பாராட்டுக் குரியவர்கள்.

பிரசுரம்: தில்லி தமிழ்ச் சங்கம், புதுதில்லி; விலை: 40 காசு.

கபீர் அருள்வாக்கு


முஸ்லிம் மதத்தில் பிறந்த கபீர் தாஸர், ராமபிரானிடத்து இடையறாத பக்தி கொண் டவர். அந்த மகான் தம் கருத்துக்களை யெல் லாம் இரண்டடிப் பாடல்களாகப் பெரும் பாலும் ஒருவகை ஹிந்தியில் கூறியிருக்கிறார். அவரது பக்தி நகைச்சுவை, கோபம், பரிகாசம் முதலிய தொனிக்கும் கருத்துக்களை மொழி பெயர்த்துச் சாகித்திய அகாதமியார் தமி ழுக்கு நல்ல தொண்டு புரிந்திருக்கிறார்கள்.

மொழிபெயர்த்தவர்: இ. சேஷாத்திரி; விற்பனை உரிமை: அமுத நிலையம், சென்னை-4. விலை ரூ. 6.

முற்றும் புதியது!

3 ரம்மியமான, புகழ் பெற்ற வாசனைகள்...
கால்கேட் பெர்ப்யூம்டு கோகோனட் ஹேர் ஆயில்

உங்கள் கேசத்திற்குப் போஷாக்கும் நறுமணமும் கொடுத்து புதிய வசீகரத்தையளிக்கிறது





கால்கேட்டிலிருந்து மிகவும் பரபரப்பூட்டும் ஹேர் ஆயில் செய்தி

தினந்தோறும் கால்கேட் பெர்ப்யூம்டு கோகோனட் ஹேர் ஆயிலைக் கேசத்தில் தேய்த்துக்கொள்ளுவது நீண்ட, செழிப்பான பளிச்செனிப்பான கூந்தல் வளர்ச்சியை விருத்திசெய்ய உதவுகிறது. உங்கள் கூந்தலுக்குப் புத்துயிரும், பளபளப்பும் அளித்து அதைக் கோழிக்கச் செய்கின்றது...மேலும் உங்களுக்குப் பிடித்தமான கூந்தல் அலங்கரிப்பை எடுத்துக்காட்டும்படி செய்யும் விசேஷ காந்தியையும்,இயல்பையும் அளிக்கிறது.

3 வகை கவர்க்கும் சுகந்தங்களில் ரோஜா லவண்டர் மல்லிகை



புதியது! கால்கேட் பெர்ப்யூம்டு கோகோனட் ஹேர் ஆயில்

உங்கள் கேசத்தை அழகுபடுத்தி நறுமணமளிக்கிறது



உங்கள் கேசத்தின் உண்மையான அழகை வெளிப்படுத்த உதவுவதும்...
உங்கள் குடும்பம் முழுவதும் மிகவும் விரும்பும் நறுமணம் கொண்டதுமான

கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலுடன்

மற்றொரு சேர்த்தியான துணைத்தயாரிப்பு

COMO. 89 TAM.



சிரிக்கவும் சிந்திக்கவும்



"நான் எனது பத்தொன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடத் தீர்மானித்திருக்கிறேன். அதற்குத் தாங்கள் எனக்குப் பத்தொன்பது புத்தகங்களும், பத்தொன்பது பௌடர் டப்பாக்களும், பத்தொன்பது கொண்டை ஊசிகளும் அனுப்ப வேண்டும்'' என்று என் நண்பர் ஒருவரின் பெண் வேடிக்கையாக எழுதியிருந்தாள்.

அவள் அதைக் கொண்டாட வேண்டியது நியாயமென்று எனக்குத் தோன்றியது. ஏனெனில், அவளது வாழ்க்கையில் அது முக்கியமான நாள். அன்றிலிருந்து அவள் தனக்குக் கிடைக்கக் கூடிய சொத்துக்கு உரிமை கொண்டாடலாம்; தேர்தலுக்கு நிற்கும் ஒரு முட்டாளுக்குக் கூட வோட்டுப் போடலாம்; தான் காதலிக்கும் ஒரு வாலிபனைத் தன் பெற்றோர்கள் தயவின்றியே திருமணம் செய்து கொண்டு விடலாம். அவள் அன்று 'மேஜர்' ஆகி விடுகிறாள். அன்று அவள் சட்டப்படி பெற்றோரின் அதிகாரங்களிலிருந்து விடுபடுகிறாள்.

சில வருஷங்களுக்கு முன்னால் குறிப்பிட்ட தொழிலைச் சேர்ந்த வாலிப ஸ்திரிகள் சிலர் தமது 21வது, 22வது, 23வது பிறந்த நாளைக் கொண்டாடுவது ஒரு 'பாஷ'னாக இருந்து வந்தது. தங்களைப் பற்றி விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகவும், தங்கள் மீது பொறாமைப்படுபவர்கள் தங்களுக்கு இருபத்தெட்டாகி விட்டதென்று புரளிசெய்வது பொய் என்று நிரூபிப்பதற்காகவும் அவர்கள் அப்படிக் கொண்டாடினார்கள். அவர்கள் அன்று 'மேக் அப்' செய்து கொண்டிருப்பதைப் பார்த்தால் அவர்களுக்குப் பதினாறு வயதுக்குமேல் மதிக்க முடியாது. இவர்கள் புகழ் ஏணிப் படிகளில் ஏறிக் கொண்டிருந்த ஸினிமா நட்சத்திரங்கள் என்று நான் கூறத் தேவையில்லை. அவர்கள் தங்கள் பிறந்த நாளைக் கொண்டாடும் வழக்கம் இப்போது குறைந்துவிட்டதென்றே சொல்லலாம்.

ஃ ஃ ஃ

காரணம் அரசியல் தலைவர்கள் அவர்களோடு போட்டி போட்டுக்கொண்டு கிளம்பி விட்டதுதான் என்று நினைக்கிறேன். திராவிடக் கழகத்தினர் 'தந்தை பெரியார்' என்று கூறும் ஸ்ரீ ஈ. வே. ரா. அவர்கள்தான் பிறந்த நாள் கொண்டாட்ட விழாக்களின் 'தந்தை' என்று சொல்லலாம். தமது எடைக்கு எடை உப்பு, புளி, மிளகாய், பருத்திக் கொட்டை எல்லாம் கூட நிறுத்து வாங்கிக்கொள்ளும் பழக்கத்தைத் தோற்றுவித்தவர் அவர். இப்படியெல்லாம் வசூலித்ததில் அவரே முழுதாக ஐந்து லட்சம் ரூபாயைத் துணிந்து திருச்சியில் ஒரு கல்லூரி ஸ்தாபிக்கக் கொடுத்து விட்டதை எவ்வளவு பாராட்டினாலும் போதுமானதாகாது.

இரண்டு மாதங்களுக்கு முன்னால் காங்கிரஸ்கட்சித் தலைவரின் 62வது பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. தி. மு. க. தலைவரின் 50வது பிறந்த நாளைக் கொண்டாடினார்கள். இந்த மாதம் சென்னை ராஜ்ய முதன்மந்திரியின் 67வது பிறந்த நாளைக் கொண்டாடப் போகிறார்கள்.

சர்வாதிகாரிகளைப் பற்றிய பல மோசமான அம்சங்களே நம்மில் பலருக்கு அதிகம் தெரியும். ஆனால் அவர்களிடம் பல நல்ல குணநிசயங்களும் இல்லாமலில்லை.

இத்தாலிய சர்வாதிகாரியான முஸோலினியின் ஐம்பதாவது பிறந்த நாளை அவர் தேச மக்கள் மிகவும் பிரமாதமாகக் கொண்டாடினார்கள். அதைப் பற்றி அவர் மிகவும் கோபம் கொண்டார். உடனே "எனது பிறந்த நாள் விழாவை இனி கொண்டாடக் கூடாது. எனது பிறந்த நாளைப் பற்றிப் பத்திரிகைகளில் பிரஸ்தாபமே கூடாது... கிறிஸ்துமஸ், புது வருடப் பிறப்பு, ஈஸ்டர் போன்ற விழாக்களின்போது பாராட்டுச் செய்திகளும், ஆசிச் செய்திகளும் அனுப்புவதும் நிற்க வேண்டும். எனது நலத்தை உண்மையில் விரும்புபவர்களும் என் தயவைப் பெற விரும்புபவர்களும் அனுப்பும் பாராட்டுக்கள் லட்சக்கணக்கில் வந்து குவிகின்றன. இவற்றுக்கு நானும் என்னுடைய காரியதரிசிகளும் பதில் எழுதிப் பொழுதை வீணாக்கிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. இந்தப் பிறந்த நாள் கொண்டாட்டம், விழாச் செய்திகளுக்கு வீணாக்கும் காலத்தையும், பணத்தையும் நாட்டின் நன்மைக்கான காரியங்களில் செலவழிக்கலாம்'' என்று பொருள்பட உத்தரவு பிறப்பித்தார். அதை மீறி நடந்து கொள்ள யாருக்கும் துணிவில்லை.



ஃ ஃ ஃ

முஸோலினியைப் பற்றிய இன்னொரு நல்ல அம்சம்:

பதினொரு வயதான அவரது மூத்த மகன் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தான். ஒரு சமயம் அவர் அவனது 'ரிப்போர்ட் கார்டை'ப் பார்த்தபோது அவன், இத்தாலிய பாஷையில் நூற்றுக்கு நூறு. லத்தீனில் நூற்றுக்கு நூறு. கணக்கில் நூறு. சரித்திரத்தில் நூறு. பூகோளத்தில் நூறு - இப்படி மார்க்குகள் வாங்கி யிருந்தான். முஸோலினி இதைப் பற்றி ஆச்சரியப்பட்டார். அடுத்த ரிப்போர்ட்டிலும் நூற்றுக்கு நூறு மார்க்குகள்தான். இதைக் கண்டதும் அவர் தமது மகனது உபாத்தியாயரைக் கூப்பிட்டனுப்பினார்.

"தாங்கள் என் பிள்ளையை மற்றப் பிள்ளைகளைப் போலவே பாவிக்க வேண்டும். என்னைத் திருப்தி செய்வதற்காக இப்படி நூற்றுக் கணக்கில் மார்க்குகள் கொடுத்து

வந்தால் உங்களை லிபியாவுக்கு மாற்றிவிடுவேன்'' என்று எச்சரித்து அனுப்பினார். லிபியா என்பது ஆப்பிரிக்காவில் வனாந்தரப் பிரதேசம். அதற்குப் பிறகு பையனது உண்மையான யோக்கியதைக்கேற்ப, முப்பது நாற்பது, ஐம்பது என்று மார்க்குகள் வாங்கி வந்தான்!

* * *

தம்பட்டம், டமாரம், கொம்பு முதலிய பழைய கால வாத்தியங்களைப் பார்ப்பதற்கு நமக்குச் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதில்லை. இந்தக் குறையைச் சில பாங்குகள் நிவர்த்தி செய்து வருகின்றன. அவை, தங்கள் புதிய கிளைக் காரியாலயம் ஒன்றைத் திறக்கும் போதெல்லாம் இந்த வாத்தியங்களில் ஏதாவதொன்றின் படத்தைப் போட்டு விளம்பரம் செய்கின்றன. டமாரம் அடிப்பவர் அரசாங்கத்தின் ஒரு மந்திரியின் அந்தரங்கக் காரியதரிசியைப் போல் உடை தரித்திருப்பார்!

* * *

அராபியக் கதைகளைப் பலப் பல விதமாகப் படம் பிடிக்கிறார்கள். கதையை உள்ளது உள்ளபடியே படம் பிடிப்பது ஒருமுறை; ஒருவரின் கனவில் அந்தக் கதை நடப்பது போல் காண்பிப்பது இன்னொரு முறை. ''அலிபாபாவும், நாற்பது திருடர்களும்'' என்ற கதை பிரபல ஹாஸ்ய நடிகரான கொட்டைப்பாக்கு விழிகளுள்ள எட்டி காண்ட்டரின் கனவில் நிகழ்ந்தது! சென்ற வாரம் சென்னை ஸாஹலீஸ் கொட்டகையில் காட்டப்பட்ட ''அலாவுதீனும் அற்புத தீபமும்' கதையை அடிப்படையாகக்கொண்ட 'பிராஸ் பாட்டில்' என்ற படம் முற்றிலும் புது ரகம்.

ஒரு கட்டிடச் சிற்பி தாம் மணக்கவிருக்கும் தம் காதலியின் பெற்றோர்களுக்கு ஒரு பரிசளிக்க விரும்புகிறார். அதற்காகச் சாமான்கள் ஏலம் போடும் கடையில் ஒரு பித்தளைப் பாத்திரத்தை வாங்குகிறார். அதை வீட்டுக்குக் கொண்டு வந்து அதைத் திறந்து பார்க்கும்போது அதிலிருந்து புகை மேகங்கள் கிளம்புகின்றன. அவர் மயக்கமாக விழுந்து விடுகிறார். பிறகு கண்களைத் திறந்து பார்க்கும்போது எதிரே ஒரு 'பூதம்' நின்றுகொண்டிருக்கக் காண்கிறார்.

ஆனால் அது பயங்கரமான பூதமல்ல. ஒரு பழைய கால அராபியப் பாதுஷாவைப் போன்றிருக்கிறது. அது சாதாரணப் பூதங்களைப் போல ஹா... ஹி.. என்று பயங்கரமாகக் கூச்சலிட்டுப் பேசவில்லை. மனிதனைப் போலவே பேசி மனிதனைப் போன்றே நடந்துகொள்கிறது. சிற்பி தன்னைப் பித்தளைப் பாத்திரத்திலிருந்து விடுவித்ததால் தான் அவருக்கு உதவி செய்தாக வேண்டும், அவர் அதை ஏற்றுக் கொண்டாக வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறது. சிற்பியின் பழைய வீடு, முதல் தரமான தற்கால மாளிகையாக மாறுகிறது. ஒட்டகங்கள் கரன்ஸி நோட்டுப் பெட்டிகளைச் சுமந்து கொண்டு வருகின்றன. இந்தப் பூதம் பங்கு மார்க்கெட்டுகளில் கூடத் தலையிடுகிறது. அது செய்யும் பல காரியங்கள் சிற்பியை எக்கச்சக்கமான நிலைமைக்கு உள்ளாக்கி அவரது காதலியையும் இழக்கச் செய்து விடவிருக்கிறது. கடைசியில் சிற்பி தமது பழைய வீட்டுக்கே வந்து விடுகிறார்.

இதில் டாம் ரண்டால், சிற்பியாகவும் புரி ஈவ்ஸ் பூதமாகவும், பார்பரா எட்டி கதாநாயகியாகவும் நடிக்கிறார்கள். இந்தப் படத்தில் எனக்கு அதிகம் பிடித்திருந்தது பூதம் நகைச்சுவை ததும்பப் பேசி நடந்து கொண்டதுதான். பேச்சுக்குப் பேச்சு ஒரே சிரிப்புத்தான். அது புது விதமான பூதமல்லவா?

இந்த மாதிரி ஒரு பூதம் நான் பௌண்டன் பேனா மைப்பாட்டிலைத் திறக்கும் போது திடீரென்று கிளம்பக் கூடாதா என்று எண்ணிக் கொண்டிருக்கிறேன். எனக்கு மாட மாளிகை வேண்டியதில்லை. பெட்டி பெட்டியாகக் கரன்ஸி நோட்டுக்களும் வேண்டியதில்லை. சென்னை வீடு கட்டும் ஸ்தாபனத்தின் தயவின்றி ஒரு சிறிய வீட்டைக் கொடுத்து, மாதாவரம் பால் பண்ணையிலிருந்து பால் புட்டி கொடுப்பவன் யோக்கியமாக நடந்து கொள்ளச் செய்தாலே போதுமானது.

* * *

பழைய காலத்தில் மன்னர்கள் ஒரு குடைக் கீழ் அரசாண்டு வந்தார்கள்! அந்தக் குடை பெரியது. இப்போதும் அது போன்று பெரிய குடைகளை உபயோகிக்கும் மன்னர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கைகள் அசைந்தாலே எல்லாம் அதனதன் இடத்தில் நின்றாக வேண்டியதுதான். அவர்கள் முச்சந்தி, நாற்சந்தி மன்னர்கள். போக்குவரத்து இலாகா போலீஸ்காரர்களைச் சொல்கிறேன்.

அவர்கள் உபயோகிக்கும் குடை மரத்தாலானது. அதற்கு வெள்ளை வர்ணமும், கறுப்பு வர்ணமும் பூசியிருக்கிறார்கள். கீழேயுள்ள தட்டுக்கடியில் சக்கரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன — குடையைத் தள்ளிக் கொண்டு போவதற்காக. போலீஸ்காரர் உபயோகிக்காத போதும் இரவு நேரங்களிலும், இந்தக் குடை நடைபாதையில் கேட்பாரின்றிக் கிடக்கும். இந்தியக் குடியரசில் திருட்டுப் போகாத சாமான் இது ஒன்றுதான். அந்தப் போலீஸ் குடையின் அடியில் நாய்கள்கூடத் துணிந்து படுத்துக்கொள்ளாது.

இவை நடைபாதைப் பக்கம் எப்படிப் போகின்றன என்று ஒரு நாள் கவனித்தேன். ஒரு முச்சந்தியில் ஒரு போலீஸ்காரரே அதைத் தள்ளிக் கொண்டு போனார். இன்னொரு முச்சந்தியில் ஒரு போலீஸ்காரர் இரண்டு ரிக்ஷாக்காரர்களைக் கூப்பிட்டுத் தள்ளச் சொன்னார். என்னைக் கூப்பிட்டுத் தள்ளச் சொன்னால்கூடத் தள்ளியிருப்பேன் என்று எனக்குத் தோன்றிற்று. ஏனென்றால், நமது தேசத்தில் இப்போது 'தள்ளு தானம்' செய்ய யாரும் தயங்குவதில்லை. ஒரு பெரிய, புத்தம் புதிய மோட்டார் வண்டிக்குள் உட்கார்ந்திருக்கும் கனவான் தமது டிரைவர் வந்து கதவைத் திறந்து விட்டாலன்றி இரண்டு நாட்களானாலும் வண்டிக்குள்ளேயே இருப்பார். அப்படிப்பட்டவர்கூட வழியில் ஒரு மோட்டார் வண்டி நின்று விட்டால் அதைத் தள்ளி உதவத் தயங்குவதில்லை. —என். ஆர்.



நங்கையர் செய்யும்



கஸ்தூரிபா நிலையத்தின் நிர்வாக அங்கத்தினர்கள்.

கஸ்தூரிபா நிலையத்தில் ஒரு பெண்மணி கண்ணீரும் கம்பலையுமாக வந்து நின்றாள். காரியதரிசிகளில் ஒருவரான ஸ்ரீமதி ஜயம்மாள் அந்தப் பெண்மணியிடம், ''அம்மா! உன் கஷ்டம் என்ன? ஏன் இப்படி வருந்துகிறாய்?'' என்று கேட்டாள்.

''அம்மா! நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும். என்னையும் என் நாலு குழந்தைகளையும் நிராகரித்துவிட்டு என் கணவர் எங்கேயோ ஓடிப்போய் விட்டார். இன்று நடுத் தெருவில் பிழைக்க வழி தெரியாது நிற்கிறோம்!'' என்றாள் அந்தப் பெண்மணி கண்ணீர் மல்க.

''கவலைப்படாதே அம்மா! உங்களைப் போன்ற திக்கற்றவர்களுக்கும், ஏழைகளுக்கும்தான் கஸ்தூரிபா நிலையம் நடத்தி வருகிறோம். இதில் சேர்ந்து தொழில் கற்றுக்கொள். தொழிலில் தேர்ந்து விட்டால் உனக்கு நிரந்தர வருவாய் கிடைக்கும். அதை வைத்துப்பிழைக்கலாம்!' என்று ஆறுதல் கூறி, அந்தத் திக்கற்ற பெண்மணிக்கு வாழ்வு கொடுத்தார் காரியதரிசி ஜயம்மாள்.

பாரதப் பண்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்த அன்னை கஸ்தூரிபா மகாத்மாவின் மனம் கோணாமல் அவர் இட்ட பணிகளை மகிழ்வுடன் நிறைவேற்றி, தோட்டி வேலையையும் இன்முகத்துடன் ஏற்றுத் தொண்டின் சிகரமாகத் திகழ்ந்தவர். அன்னை கஸ்தூரிபாயின் நினைவிலே எழும்பூரில் உள்ள மாதர்கள் ஒன்று சேர்ந்து சங்கம் நிறுவித் திக்கற்ற பெண்களுக்குத் தெய்வம் போல் உதவி வருகிறார்கள்.

1953ம் வருஷம் தொடங்கப்பட்ட கஸ்தூரிபா நிலையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுத் திறம்பட நடத்தி வருபவர் ஸ்ரீ லக்ஷ்மி ராமநாதன் அவர்கள். லேடீஸ் கிளப்புகளில் மிகப் பழமையானதும், பொன் விழா கொண்டாடியதுமான எழும்பூர் லேடீஸ் கிளப்பில் 1959, 60, 61ம் வருஷங்களில் காரியதரிசியாகச் செயலாற்றிக் கொண்டிருந்த ஸ்ரீமதி ஜயம்மாளைக் கஸ்தூரிபா நிலையத்தில் சேர்த்துக் கொண்டு சமூகத் தொண்டில் ஈடுபட வைத்தவர் ஸ்ரீமதி லக்ஷ்மி ராமநாதன் அவர்கள்தான். பிரபல வக்கீல் ரங்கசாமி அய்யங்காரின் புதல்வியான ஸ்ரீமதி ஜயம்மாள் கஸ்தூரிபா நிலையத்தின் வளர்ச்சியில் மிகக் கவனம் செலுத்தி வருகிறார்.

''எனக்கு உறுதுணையாக ஒத்துழைப்பதற்கு மற்றொரு காரியதரிசி மிஸ் ராஜம்மாள் இருக்கிறார். ரொம்பச் சுறுசுறுப்பு மிக்கவர். எங்கள் சங்கத்து வேலைகளைக் கவனிப்பதோடு, நுங்கம்பாக்கம் பத்மா சேஷாத்ரி மெட்ரிகுலேஷன் பள்ளியிலும் குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பதில் கவனம் செலுத்தி வருகிறார்!'' என்று தம் சக-காரியதரிசியைப் பற்றிப் பெருமையாகச் சொன்னார் ஜயம்மாள்.

கஸ்தூரிபா நிலையத்துக்குள் அதன் காரியதரிசி ஸ்ரீமதி ஜயம்மாளுடன் பார்வையிடச் சென்றோம்.

''இந்தக் கட்டிடம் கஸ்தூரிபா நிலையத்துக்குச் சர்க்கார் கொடுத்து உதவியுள்ளதா?'' என்று கேட்டோம்.


''இல்லை. சமூகப் பணியிலுள்ள ஆர்வத்தினால் இந்தப் பெரிய கட்டிடத்தின் கீழ்த்தளத்தைக் கஸ்தூரிபா நிலையத்துக்குக் குறைந்த வாடகைக்குத் தந்திருக்கிறேன்'' என்றார் ஜயம்மாள்.

சமூகத் தொண்டு செய்யவேண்டும் என்ற ஆர்வத்தைக் காரியத்திலும் அவர் செய்து காட்டியிருப்பது பாராட்டுக்குரியது.

அந்தக் கட்டிடத்துக்குள் நுழைந்ததுமே சின்னஞ் சிறிய தொழிற்சாலைபோல் அது காட்சியளித்தது. பெண்கள் சுறுசுறுப்பாகத் தத்தம் பணிகளில் மூழ்கியிருந்தனர். நாலு பெண்மணிகள் கூடிவிட்டால் 'நயாகரா நீர்வீழ்ச்சி' போன்ற சத்தம் எழும் என்பார்கள். இருபது பெண்மணிகளுக்குமேல் உள்ள அந்த இடத்தில் தொழில் கருவிகளின் சத்தத்தைத் தவிர வேறு சத்தம் எழவில்லை. ஆச்சரியம்தான்.

சில பெண்மணிகள் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் கையுறைகளைத் தயாரித்துக் கொண்டிருந்தார்கள். அன்னமிடும் கரங்கள் அற்புதமாகத் தோலைக் கத்திரித்துத் தைப்பதில் முனைந்திருந்தன. சில பெண்மணிகள் தையல் இயந்திரத்தில், வெட்டப்பட்ட தோல்களை இணைத்துத் தைத்துக் கொண்டிருந்தார்கள். தொழிலாளிகளுக்கான

நற்பணிகள்



தோல் பொருள் தயாரிப்பில் பெண்கள்.

தோல்பாதுகாப்பு உடைகளும், சிறு பெல்ட்களும் ஒரு மூலையில் தயாராகிக் கொண்டிருந்தன.

"சென்னையிலேயே தோலினால் பொருள்கள் தயாரிக்கும் வேலையில் பெண்கள் ஈடுபட்டிருக்கும் இடம் இது ஒன்றுதான். இந்தத் தோல் பொருள்கள் தயாரிப்பில் இருபத்திரண்டு பெண்கள் பணியாற்றி வருகிறார்கள்!" என்று பெருமையுடன் கூறினார் காரியதரிசி ஜயம்மாள்.

"அப்படியா? இங்கே தயாரித்த கையுறைகளையும், தொழிலாளிகளுக்கான தோல் பாதுகாப்பு உடைகளையும் எப்படி விற்பனை செய்கிறீர்கள்? ஒருவருக்குச் சுமாராக என்ன வருமானம் கிட்டும்?" என்று வியப்புடன் கேட்டோம்.

"ஒருவருக்கு மாதம் முப்பது நாற்பது ரூபாய் வருமானமாகக் கிட்டுகிறது. இங்கே தயாராகும் ஆயிரம், இரண்டாயிரம் கையுறைகளைப் பெரிய தொழிற்சாலைகளில் கொண்டு கொடுக்கிறோம். . பல தொழிற்சாலைகளில் அதன் நேர்த்தியைக் கண்டு உடனே ஏற்றுக் கொண்டுவிடுகிறார்கள். பெண்மணிகளாகிய எங்களுக்கு வியாபார தந்திரம் அவ்வளவாகத் தெரியாதல்லவா? இந்தத் தொழிலுக்கும் பலத்த போட்டியிருக்கிறது. சில சமயம் அதிகாரிகள் நாங்கள் தயாரித்த சில சரக்குகளை நிராகரித்து விடுவார்கள். அந்தச் சமயத்தில் அவர்களை நாங்கள் இலேசில் விடுவதில்லை. 'அதில் என்ன குறை?' என்று கேட்டால் அவர்களால் குறை யொன்றும் சொல்ல முடியாது. 'இல்லை. இது அவ்வளவாக மற்ற கம்பெனிகளிலிருந்து வருவதோடு ஒப்பிட்டால் சரியாயில்லை' என்று அந்த அதிகாரிகள் மறுப்புவார்கள். ஆனால் மேலதிகாரிகள் வரை போய்ப் பார்த்து எங்கள் தயாரிப்புக்களின் சிறப்பை எடுத்துக் கூறி, அவற்றை வியாபாரம் செய்வதற்குள் சில சமயம் போதும் போதுமென்றாகிவிடும். சமூகத் தொண்டில் இத்தனை சிரமம் இருக்கிறதென்று பலருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லையல்லவா?" என்று விளக்கினார் ஸ்ரீமதி ஜயம்மாள்.

"இங்கே தோலினால் கையுறை, சிறு பெல்டுகள் தயாரிப்பது தவிர வேறு பணிகள் ஏதாவது இந்தப் பெண்கள் செய்கிறார்களா?"

"ஓ! பாய் முடைதல் வேலை சில காலம் செய்து கொண்டிருந்தார்கள். பாய்க்குக் கோரை வந்தவாசியிலிருந்து வர வேண்டும். இந்தப் பாய்கள் தயாரிப்பில் நிறையச் செலவாயிற்று. அது எங்களுக்குக் கட்டிவரவில்லை. மாதர் சங்கத்தினால் அதன் நஷ்டத்தைத் தாங்க முடியுமா? ஆகவே இந்தப் பணியை நிறுத்தி வைத்து விட்டோம்!" என்று கூறினார் அவர்.

எழும்பூர் கஸ்தூரிபா நிலையம் இந்திய மாதர் சங்கத்தின் ஒரு கிளையாகச் செயலாற்றி வருகிறது. இந்தச் சங்கத்தில் இருநூற்றைம்பது மாதர்களுக்கு மேல் அங்கத்தினராக இருக்கிறார்கள். அவர்களுக்காகத் தையல் வகுப்பும், ஹிந்தி வகுப்பும் நடத்தப்படுகின்றன. நிலைய அங்கத்தினர்களே நாடகம் நடத்தி அதில் வரும் தொகையை ராணுவப் பாதுகாப்பு நிதிக்கு வழங்கி யிருக்கிறார்கள். வருஷத்துக்கு ஒரு முறை சங்க அங்கத்தினர்கள் 'பிக்னிக்' போய் விட்டு வருவது கஸ்தூரிபா நிலையத்து மாதர்களுக்குப் பொழுதுபோக்காகும். ஏழைக் குழந்தைகளுக்கு இலவச நர்ஸரி வகுப்பும் அவர்களுக்கு இலவச மதிய உணவு அளிப்பதும் இவர்களது மற்றொரு சேவையாகும்.

கஸ்தூரிபா நிலைய மாதர் சங்கத்தினர் ஏழைகளின் . கண்ணீர் துடைக்கும் பணியையே தங்கள் தலைசிறந்த தொண்டாகக் கருதுகின்றனர். சமூகத் தொண்டுகளில் இதைவிடச் சிறந்ததுண்டா?


— காமு

தையல் வேலை நடக்கிறது இங்கே!



சகுனம்

ஆர். பத்மா




காலை மணி பத்துதான் ஆகியிருந்தது. எனினும், வெளியே வெய்யில் தலைகாட்ட முடியாதவாறு தவித்துக் கொண்டிருந்தது. மாடி வராந்தாவில் வெட்டி வேர்த்தட்டியை இறக்கி ஜில்லென்ற நீரை வாரியிறைத்தாள் மராட்டி வேலைக்காரி ஜீஜீ பாய். தலைப்பை இழுத்து முக்காடிட்டுக் கொண்டவள், "நமஸ்தே ஜீ!" என்றவாறு விடை பெற்றுக் கொண்டாள். வேலைக்காரிகள் கூட வரும் போதும், போகும் போதும் 'நமஸ்தே' சொல்லும் இந்த டில்லி வழக்கம் ஆரம்பத்தில் எனக்குச் சற்று வியப்பாகத்தான் இருந்தது. அவளை அனுப்பிவிட்டு ஓய்வாகப் படுத்துக் கொண்டேன்.

விநயக நகரில் ஒரு பெரிய மாடி வீட்டின் ஒரு பகுதியில் நானும், என் மகன் ராஜூவும் குடியிருந்தோம். ராஜூ ஓர் ஆங்கிலேயக் கம்பெனியில் வேலையாக இருந்தான். நானும் டில்லி பார்த்திராதவளாகையால் லீவுக்குச் சென்னை வந்திருந்தவனுடன் கிளம்பிவிட்டேன். இதோ, நான் டில்லி வந்து மூன்று மாதங்களும் ஓடிவிட்டன.

அன்று அவர், என் கணவர், 'சென்டிரல்' ஸ்டேஷனில் கூறியது இன்னும் எனக்கு மறக்கவில்லை. மகனிடம், "டேய் ராஜூ! உங்கம்மாவை நன்றாகக் கவனித்துக்கோடா. இங்கே இவ்வளவு பேசுறாளே தவிர, அங்கு போய்ப் பார்த்தால் தானே தெரியப் போகிறது? அந்த ஊரும், வெயிலும், ஜனங்களும் இவளோட ஆசாரத்தோடும், கொள்கையோடும்..." எனக் கேலியாகக் கூறி 'ஓஹோ...ஹோ' வெனச் சிரித்தார்.

ராஜூவும் அதற்கேற்றாற் போல் "அப்பா! நீங்க என்னவோ அம்மாவுக்கு ஒன்றுமே தெரியாதென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். அம்மா வெளியிடங்களுக்கு ரொம்பப் போனதில்லை. என்றாலும் உங்களுக்குத் தெரிந்திருக்கும் விஷயங்களைக் காட்டிலும் அதிகமாகவே தெரியுமாக்கும்! 'ஜெனரல் நாலட்ஜ்' ஜாஸ்தி. ம்... பாருங்களேன். அடுத்த மாதம் ஹிந்தியிலேயே கடிதம் வரும் உங்களுக்கு. பாவம் நீங்கள்தான் படிக்கத் தெரியாமல் சிரமப்படுவீர்கள்" என்று கூறிக் கடகடவெனச் சிரித்தான்.



ஆமாம். அப்பா, பின்னே இருவருமே சளைத்தவர்கள் இல்லை என்னைக் கேலி செய்வதில்.

தடதடவெனக் கதவு தட்டப்படும் ஒலியைத் தொடர்ந்து, ''மாதாஜீ. தர்வாஜா கோலோ ஜீ!'' என்ற மென்குரல் என் சிந்தனையைக் கலைத்தது. ''சே, என்ன அவசரம், இந்தப் பெண்ணுக்கு, துளிக்கூட அடக்கமில்லாமல்!'' என்று நினைத்தவாறே தாழை நீக்கினேன்.

வெய்யிலினால் முகம் ஜிவ்வெனச் சிவந்திருக்க, நெற்றி வியர்வையைக் கைக்குட்டையால் துடைத்தவாறு நின்றிருந்தாள் பஞ்சாபிப் பெண் கமலேஷ் குமாரி. எங்களுக்கு அடுத்த பகுதியில் தன் தந்தையுடனும், தங்கையுடனும் வசித்து வந்தாள் அவள். தாய் நான்கு வருடங்களுக்கு முன் காச நோயால் இறந்து விட்டதாகக் கண்ணீரிடையே கூறியிருந்தாள். நைலான் துப்பட்டாவை இழுத்து மாலை போல் போட்டுக் கொண்டவள், பளீரென்ற முத்துப் பற்கள் தெரியச் சிரித்தவாறே, ''ஸாரி மாதாஜீ! தூங்கிக் கொண்டிருந்தீர்களா? நான் ஒரு 'டெய்லி நியூஸன்ஸ்' இல்லையா?'' எனக் கூறிக் கொண்டே தன் அறைக்குச் சென்றாள்.

வெள்ளை உடலைப் போலவே உள்ளமும் வெள்ளை கமலேஷ்குமாரிக்கு. வாட்டசாட்டமாய் வளர்ந்திருந்தவளுக்கென்றே அமைந்தாற்போல் சல்வாரும் கம்மீஸூம் அவ்வளவு பொருத்தமாய் இருந்தன.

அழகோடு அறிவும் பொருந்தியவள் கமலேஷ். இந்தப் பதினெட்டு வயதில் கல்லூரியில் பட்டப் படிப்பும் படிப்பதோடல்லாமல், சுருக்கெழுத்து வகுப்பு, தையல் வகுப்பு ஆகியவற்றுக்கும் சென்று வந்தாள். தாய் இல்லாக் குடும்பத்துக்குத் தாயைப் போல் வீட்டு வேலைகளையும் பொறுப்புணர்ச்சியுடன் செய்து வந்தாள். தாய் இல்லாக் குறையைத் தங்கை உணராதவாறு அன்புடனும், வாஞ்சையுடனும் பேணி வந்தாள்.

கமலேஷ் ஓய்வாகவோ, அலுத்துச் சலித்தோ உட்கார்ந்து நான் பார்த்ததில்லை. பிற்பகல் கல்லூரி விட்டு வந்தவள் ஒரு டம்ளர் நீர் மட்டும் பருகிவிட்டு ஒரு மூட்டை அழுக்குத் துணியுடன் குளியல் அறையை நோக்கிச் சென்றாள்.

அவளைப் பார்க்க எனக்குப் பரிதாபமே மேலிட்டது. என் மகள் கமலியோடு கூடக் கமலேஷ் குமாரியை ஒப்பிட்டுப் பார்க்கையில் 'அடேயப்பா! என்ன வித்தியாசம்?' என வியக்காமல் இருக்க முடியவில்லை.

நம் குழந்தைகள் கல்லூரியோ, பள்ளியோ விட்டு வந்ததுமே, ஏதோ பிரமாதமாய்ப் பெரிய காரியம் செய்துவிட்டு வந்தவர்கள் போல் ஓய்ந்து போய்க் களைத்துப் படுத்துவிடுவார்களே! ஏன், நம் தாய்மார்கள் நன்கு கவனித்துப் பராமரிப்பதால் வந்த சலுகையா?

அதே வயதுக் குழந்தையான கமலேஷ் தன் தந்தையையும், தங்கையையும் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாக்கிறாள். வீட்டுக்குத் தேவையான கடைச் சாமான்கள் வாங்குவது, துணிமணிகளை வாங்கி அதைத் தானே தைப்பது, சமைப்பது, வரவு செலவு கணக்குப் பார்ப்பது... அப்பப்பா! எல்லாவற்றுக்கும் அவளேதான். இவையனைத்தும் நான்கு வருடங்களாகவே அவள் தலை மீது விழுந்து விட்ட சுமைகள். தாய்மைப் பொறுப்பும், குடும்ப நிர்வாகத் திறனும் இந்தச் சிறு வயதிலேயே எவ்வாறு வந்ததோ? கமலேஷ் ஓர் அதிசயப் பிறவிதான்.

அதிகப் பாதுகாப்பும், கண்காணிப்பும் அவசியம் தேவையாக இருக்க வேண்டிய இந்த வயதில் தனக்குத்தானே ஆசானாகவும், தாயாகவும், உள்ளத்தளவில் சேயாகவும் இருக்கும் இந்தப் பெண் என்ன முற்றும் துறந்த ஞானியா? இந்த வினா என்னுள்ளே எழுந்தது.

ஒரு நாள் கமலேஷைப் பற்றிப் பெருமையாய் அவள் தந்தையிடம் கூறினேன். கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டவர், ''அம்மா! கமலேஷுக்கு அவள் தாய் மறைந்த அன்றைக்கே அதோ அந்தப் 'பிரபு ராமச்சந்திரன்' சக்தியையும் மனோ பலத்தையும் கொடுத்து விட்டான்'' என ஸ்ரீராமர் படத்தைச் சுட்டிக் காட்டினார்.

'டங்'கென மணியடித்து நேரம் நாலரை என்பதை அறிவித்தது. ராஜுவுக்குச் சிற்றுண்டி தயாரிப்பதில் ஈடுபட்டேன். கமலேஷ் துணிகளைத் துவைத்துக் கஞ்சி போட்ட பின் உலர்த்த மொட்டை மாடிப் படியேறியவள், ''மம்மீ! பாய் சாஹேப்புக்கு என்ன டிபன் செய்கிறீர்கள்? நெய் வாசனை மூக்கைத் துளைக்கிறதே'' என்றாள் கலகலவெனச் சிரித்தபடியே.


ஆமாம்! எப்பொழுதும் அதே சிரிப்புத்தான், வெண்கல மணியடித்தாற்போல. என்னை 'அம்மா'வென்றும், ராஜுவை 'அண்ணா'வென்றும்தான் அழைப்பாள். வந்த புதிதில் இலக்கணப் பிழையாக நான் பேசும் ஹிந்தியைக் கேட்டு விழுந்து விழுந்து சிரிப்பாள். பின், ''நான் குருவாம், நீங்கள் தான் சிஷ்யையாம்'' எனக் கேலி மொழி பேசியபடி எனக்கு ஹிந்தி கற்பிப்பாள்.

மனத்தில் நினைத்ததைப் பட்டெனச் சொல்லிவிடும் அவள் கள்ளமற்ற தன்மை என்னை மிகவும் கவர்ந்தது. கல்லூரி நேரம், வேலை நேரம் போக மற்ற நேரம் முழுவதும் என் அறையிலேயேதான் அவளுக்கு வாசம். சதா கும்மாளமும், குதியுமாய் இருக்கும் கமலேஷை நினைக்கையில் எனக்கு ஆச்சரியமாக இருக்கும்.

ஒருநாள் என்னைப் பார்க்கக் கரோல்பாக்கிலிருந்து மதராஸ் தோழி சரளா வந்திருந்தாள். ஹாலில் கமலேஷ் வெகு சகஜமாக ராஜுவுடன் அரட்டை அடித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். ஆம்! ராஜு அலுவலகத்திலிருந்து வந்து விட்டானானால் அவனுடன் சரிக்குச் சரியாக உட்கார்ந்து கொண்டு அரட்டை அடிப்பாள். இருவருமாய்ச் சேர்ந்து கொண்டு தென்னிந்திய, வட இந்தியப் பழக்க வழக்கங்களைப் பரஸ்பரம் கேலி செய்து சிரிப்பது, அன்றாட நிகழ்ச்சியே.

அன்றும் அப்படித்தான். ராஜு ஏதோ கூறக் கலகலவென நகைத்தபடி கைதட்டினாள் கமலேஷ். பார்த்துக் கொண்டேயிருந்த சரளா பட்டெனத் தோளில் முகத்தை

டபிள் டயமண்ட்



பாங்காக அணிவோர்க்கு ஏற்ற ஒரு பாப்ளின். பின்னி தயாரிப்பு

டபிள் டயமண்ட் ஒரு புதிய தரமான பாப்ளின்; உயர்ந்த எகிப்திய பருத்தியிலிருந்து தயாரானது. அணிவதற்கு இதமாயும் குளுமையாகவும் இருக்கிறது. பார்வைக்குப் பாங்காக இருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேல், பின்னி துணிகளுக்கே உரித்தான, நீடித்து-உழைக்கும்-தன்மை வாய்ந்தது.

SANFORIZED

BINNY'S FABRICS

BINNY & CO. LIMITED, MADRAS

உங்களுக்குத் தேவையான பின்னி துணிகளை இந்த அடையாளம் காணும் எங்கள் அனுமதிபெற்ற விற்பனையாளரிடமிருந்து கண்ட்ரோல் விலைக்கு வாங்குங்கள்.

பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட், பின்னி & கம்பெனி லிமிடெட், மதராஸ், ஸ்தாபனத்தின் ஒரு கிளை



"இது என்ன? பெண்ணின் படம்னு போட்டிருக்கே. ஒண்ணுமே புரியலியே!"
"கலியாணம் பண்ணிண்டு இருபது வருஷமாச்சே. உன்னை நான் புரிஞ்சுண்டேனா?"

இடித்துக் கொண்டாள். பின் என்னிடம் "நான் சொல்கிறேனே என்று கோபித்துக்கொள்ளாதே கல்யாணி. இவ்வளவு பெரிய பெண் இப்படித் துளிக்கூட வெட்கமில்லாமல்........" என்றவள் தொடர்ந்து, "நாம் தான் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இந்தப் பக்கத்திலெல்லாம் கொஞ்சம் ஏமாந்தால் போச்சு! நம் பிள்ளைகளுக்கு அவ்வளவாகச் சாமர்த்தியம் போதாது!" என்று பொடி வைத்துப் பேசுவதைப் புரிந்து கொண்டேன்.

"சரளா! அப்படியெல்லாம் வாயில் வந்தபடி பேசாதே. பாவம். அந்தப் பெண் கவடில்லாமல், 'அம்மா', 'அண்ணா' என்று எவ்வளவு பாசத்தோடு பழகுகிறது. அந்தப் பால் வடியும் முகத்தைப் பார்த்துமா உனக்கு...." நான் முடிக்கவில்லை. "ச்சூ..." என அலட்சியமாய்ச் சூள் கொட்டினாள் சரளா. "சரிதான் போ! நீயே ஏமாந்து விட்டாயா, 'அது' உன்னை அம்மாவென்றும் ராஜுவை அண்ணாவென்றும் அழைப்பதைப் பார்த்து? ம்...... கெட்டிக்காரப் பெண். பெரியவர்களைக் கையில் போட்டுக் கொண்டால்தானே காரியம் விரைவில் கைகூடும்! சரி, சரி. நீயே ஒப்புக்கொண்டு விட்டாய். பரவாயில்லை நாட்டுப் பெண்..."

சாட்டையால் யாரோ அடித்தாற்போல் சுரீரென்றது மூளையில். "நாட்டுப் பெண்ணா? கமலேஷா?" மனம் இதே கேள்வியில் தட்டாமாலை ஆடத் தொடங்கியது.

வந்த வேலை முடிந்ததென்று விடைபெற்றுக்கொண்டாள் சரளா. அவள் வைத்த தீயும் சிறிது சிறிதாகப் பற்றத் தொடங்கியது. சந்தேகப் பேய் பிடித்து என்னை உலுக்கலாயிற்று.

அடிக்கடி என் அறையை நாடி வந்தவளை, 'பரீக்ஷை வருகிறது போய்ப் படி' என்றோ, 'எனக்கு ஒரே தலைவலியாய் இருக்கிறது படுத்துக் கொள்ளப் போகிறேன்' என்றோ கூறித் தவிர்க்க முற்பட்டேன்.

தள்ளத் தள்ளக் காலடியிலேயே விழுந்து அழும் குழந்தையைப் போல் மேலும் மேலும் என்னிடம் வந்து ஒட்டிக் கொள்ளும் அப்பதினெட்டு வயதுக் குழந்தையை எவ்வாறு சந்தேகிப்பது எனப் புரியாது விழித்தேன்.

ஆனால், 'பெரியவர்களைக் கையில் போட்டுக் கொண்டால்தானே காரியம் விரைவில் கைகூடும்" என்ற சரளாவின் குரல் தெளிவாகக் கேட்டது. மனமோ, 'எல்லாம் உனக்காகவல்ல, உன் மகனின் அழகுக்காக; அந்தஸ்துக்காக. வேஷக்காரி கமலேஷ் போடுவதெல்லாம் நாடகம்' என்றது.

மறு கணமே, "ஏன்டீ கமலேஷ்! இந்த வயதில் உனக்கே இவ்வளவு சாமர்த்தியம் இருந்தால், எனக்கு எவ்வளவு இருக்க வேண்டும்! ம்.... என்னையா ஏமாற்றப் பார்க்கிறாய்? 'பாய் சாஹேப், பாய் சாஹேப்' என்று குழைவதெல்லாம் இதற்குத்தானா? இரு இரு." உள்ளம் கொந்தளித்துக் கறுவியது.

"மம்மீ! மம்மீ!" எனக் கூவிக் கொண்டே வந்தவள் கெஞ்சிய படியே என் தோளைப் பற்றிக் கொண்டு, "இன்று ஒரு சந்தோஷ சமாசாரம் சொல்லப் போகிறேன்" என்று தலை குனிந்து கொண்டாள், என் உள்ளம் புரிந்து கொள்ளாதவளாய். ஆம்! பரீட்சையில் வெற்றியடைவதிலிருந்து, அவள் வீட்டில் பூனை குட்டி போடுவது வரை எல்லாமே சந்தோஷ சமாசாரம் தான் அவளைப் பொறுத்தவரை.

"சொன்னால் என்ன தருவீர்கள் இந்தக் கமலேஷிற்கு?" நெருங்கி வந்து கேட்டவளை உற்று நோக்கினேன்.

அவ்வளவுதான்;

கனன்று கொண்டிருந்த தீ குப்பெனப் பற்றிக் கொண்டது. எரிமலை வெடித்தே விட்டது. நான் கத்தவில்லை. கூச்சலிடவில்லை. தணிந்த குரலிலேயே, ஆனால் அழுத்தம் திருத்தமாய் நேரடியாகவே கூறி விட்டேன்.

"இதோ பார் கமலேஷ், நீ இங்கு அடிக்கடி வருவதைப் பற்றி எனக்கொன்றும் ஆட்சேபணையில்லை. ஆனால் ராஜு... வயது வந்த பிள்ளை வீட்டில் இருக்கும்போது... நாலு பேர்கள் நாலு விதமாகப் பேச இடம் கொடுக்கவேண்டாம் என்று நினைக்கிறேன்." எவ்வளவு சுருக்கமாய்க் கூற முடியுமோ அவ்வளவு சுருக்கமாய்க் கூறி முடித்தேன்.

ஒரு கணம் பேயறைந்தவள் போல் மரமாய் நின்றவள் முகம் குபீரெனச் சிவந்தது. தாமரை மலர் போன்ற கண்களிலிருந்து மளமளவென்று கண்ணீர் பெருகி மென் கன்னங்களின் வழியே பெருகியோடியது. ஆழ்ந்து என்னை அரைக்கணமே நோக்கியவள் சுட்டபட்டாற் பறக்கத் தடதடவென்று மாடிப் படியில் இறங்கி ஓடினாள்.

பூனைக் குட்டி போல் காலைச் சுற்றிச் சுற்றி வந்தவள் நான்கு நாட்களாய்க் கண்களிலேயே தென்படாதது எனக்கே என்னவோபோல் இருந்தது. ராஜு கூட, "என்னம்மா! அந்த ஒலிபெருக்கியை நாலு நாட்களாய்க் காணோம்?" என்று கேட்டுவிட்டான்.

ஐந்தாம் நாள் கமலேஷின் தங்கை மது மதி கையில் மருந்துப் பாட்டிலுடன் மாடிக்கும் கீழுக்குமாய் அலைந்துகொண்டிருந்தாள். விசாரித்துப் பார்த்ததில் கமலேஷுக்குத் தான். நான்கு நாட்களாய் ஜுரமென்றும் தெரிந்தது. என் பெண் மனம் குற்ற உணர்ச்சியால் பதைபதைத்தது.

மறு கணமே வருவது வரட்டுமென அவள் அறைக்குள் நுழைந்தவள் திடுக்கிட்டு விட்டேன். ஆம்! எப்பொழுது பார்த்தாலும் ஓர் இடத்தில் நில்லாமல் துள்ளியோடிக் கொண்டிருக்கும் அப்புள்ளி மான் சோர்ந்து படுத்திருந்தது. ரோஜாக் கன்னங்கள் வெண்மையாகிக் கண்ணீர்க் கறையோடு காட்சியளித்தன. கண் மூடிப் படுத்திருந்தவள் கோலம் என் கண்களில் நீரை வரவழைத்து விட்டது.

'கமலேஷ்' என மெதுவாகக் கூப்பிட்டபடி வாடிய அல்லித் தண்டு போன்ற அவள் கரத்தைத் தொட்டேன். எவ்வளவு வேலை செய்தாலும் அலுத்து, சலிக்காதவள் உழைப்பாளிக் கரமா இது?

கர ஸ்பரிசம் பட்டுத் திடுக்கிட்டுக் கண் மலர்ந்தவள் என்னைக் கண்டதும் திடீரென்று, "ஐயோ, மாதாஜீ... ஏன் இங்கு வந்தீர்கள்? அம்மா! இந்தத் தாயில்லா, தமையனில்லா அனாதையைப் பார்க்கவா அம்மா? நான் உங்கள் மகளில்லை. மகளில்லை" எனக் கூவினாள். கண்கள் அருவியென நீரைப் பொழிந்தன.

நான் சிலை போல் அமர்ந்திருந்தேன்.

பாய்ந்து வந்து என்னை அணைத்துக்கொண்டு "தாயற்ற எனக்குத் தாய் போல நீங்களும் பாசமுள்ள அண்ணாவும் கிடைத்துவிட்டீர்களே என்று கர்வம் கொண்டிருந்தேன். உங்கள் அன்பு மனம் திடீரென்று ஏனம்மா மாறியது? உங்கள் தென்னிந்தியாவில் அம்மா, அண்ணா, தங்கை என்று பாசத்தோடு இருந்தால் இப்படித்தான் நாலு பேர்கள் நாலுவிதமாய்..." என்று குரல் அடைக்கக் கமலேஷ் விம்மினாள்.

"என்னை மன்னித்துவிடு கமலேஷ். உன்னைப் புரிந்து கொண்டு விட்டேன்" என்று மட்டுமே கூற முடிந்தது என்னால்.

"அப்படி யெல்லாம் சொல்லாதீர்கள், மம்மீ!" என்று தன் துப்பட்டாவினால் என் கண்ணீரைத் துடைத்தாள். மேலும், "இப்பொழுதுதான் நீங்கள் சமர்த்து... அச்சி மம்மீ" என்று கொஞ்சியவாறே பழையபடி கலகலவென நகைத்தாள்.

அன்று மாலை அலுவலகத்திலிருந்து சீக்கிரமே திரும்பி விட்ட ராஜு, "அம்மா! என்னைக் கல்கத்தாவுக்கு மாற்றி விட்டார்கள். பத்து நாட்கள் லீவு கிடைக்கும். உன்னைச் சென்னையில் கொண்டு விட்டு விட்டு நான் கல்கத்தா போக வேண்டும்" என்று கூறிய செய்தி ஒரு புறம் மகிழ்ச்சியையும், ஒருபுறம் வருத்தத்தையும் அளித்தது.

இது விஷயம் அறிந்த கமலேஷ், "ஒரு முறை இழந்த தாயை மறு முறை பெற்றிருக்கிறோம் என உங்களை முதன் முதல் பார்த்த மாத்திரத்தில் நினைத்தேன். இப்பொழுது இரண்டாம் முறையாக என் அன்புத் தாயை இழக்கிறேன்" என்று கண்ணீர் விட்டபடியே கூறினாள்.

அவள் தகப்பனார்கூட, "அம்மா! கமலேஷின் தாய் மறைந்ததிலிருந்து அவள் ஒரு நாள்கூட மகிழ்ச்சியுடனோ, சிரித்தோ நான் பார்த்ததில்லை. ஆனால் நீங்கள் இவ் வீட்டுக்கு வந்த நாளே அவள் மலர்ந்த முகத்தைக் காணும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. நீங்கள் மறுபடியும் உங்கள் தேசம் போகிறீர்கள். பாவம்.... கமலேஷுக்குத்தான்..." என்று தம் மகளை நினைத்துப் பெருமூச்சு விட்டபடி போய் விட்டார்.

என் நெஞ்சில் பாறாங்கல் ஏறியது.

எங்களை வழியனுப்ப ரயிலடிக்கு வந்தவள் தன் கூட வந்த இளைஞனைச் சுட்டிக்காட்டினாள். "அம்மா! இவர்தானம்மா, மிஸ்டர் மதன கோபால். என் தூரத்து உறவினர். நேற்று தான் பம்பாயிலிருந்து வந்தார். அடுத்த மாதம் எனக்கும் அவருக்கும்....." சட்டென்று தலை குனிந்தவாறே துப்பட்டா நுனியை முறுக்கலானாள்.

'அடிக் கள்ளி! என்னிடம் கூறினாயா, இது விஷயம் பற்றி?" என்று இலேசாக அவள் கன்னத்தைக் கிள்ளினேன்.

இலேசாகத் தலை நிமிர்ந்தவள், "இல்லையம்மா. இந்த சந்தோஷ சமாசாரம் கூறப் போய்த்தான் அன்று ஏதேதோ ஆகி விட்டதே" என்றதும் கண்கள் கலங்கி விட்டன.

திக்கென்றது எனக்கு. அவளைத் தேற்றுபவள் போல், "சே! அசடு. இப்பொழுது போய் அதை நினைத்துக் கொண்டு அழுவார்களா? விடு" என்றேன்.

"இல்லையம்மா ! உங்களைப் பிரிய வேண்டுமே : அன்பு அம்மாவை....." நாத் தழுதழுத்தது அவளுக்கு.

இதற்குள் வெகு நாட்கள் பழகியவர்கள் போல் ராஜுவும், மதனகோபாலும் பேசிக் கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். ராஜு உரக்க, "ஏய்! கமலேஷ். இனி உனக்கு இந்த மம்மீ, பாய் சாஹேப் நினைவெல்லாம் வருமா?" என்றவன் அவ்விளைஞனிடம், "மிஸ்டர் மதன்! இந்த வாயாடியிடம் அகப்பட்டுக் கொண்டு.... உங்களைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாயிருக்கிறது" என்றான் கடகடவெனச் சிரித்தபடியே.

"இனி இவ்வாறெல்லாம் கேலி செய்ய யார் இருக்கிறார்கள்?" என்றவள் கண்ணீரைத் துடைத்தேன் நான்.

'கூ'வெனக் கத்திக் கொண்டே மெதுவாக ரயில் புறப்பட்டது. ஜோடியாக நின்று கொண்டே, "மம்மீ! என்னை மறக்க மாட்டீர்களே?" என்றாள் கமலேஷ். "நீயும் நினைவு வைத்துக் கொள்" என்றேன் நான். சட்டெனக் கைப் பையைத் திறந்து நானும் ராஜுவும் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப் படத்தைக் காட்டியவள் அதைத் தன் நெஞ்சோடு வைத்துக் கொண்டாள்.

என் கண்களில் நீர் நிறைந்து அவர்களை மறைத்தது. 'டாடா' காட்டும் அப் பதினெட்டு வயதுக் குழந்தையை நினைத்துப் பெருமூச்சு விட்டேன். ரயிலும் என்னைப் புரிந்து கொண்டாற்போல் பெருமூச்செறிந்தது.

குண்டு மல்லிகை

அரு. ராமநாதன்

அத்தியாயம் 59

இளமையின் விரக்தி

மேஜர் ராமதுரையின் பங்களாவுக்கு டாக்டர் ஜகந்நாதன் அவசரமாக அழைக்கப்பட்டார். அவர் வந்து மேஜருக்குத் தேவையான வைத்திய சிகிச்சைகளையெல்லாம் அளித்துவிட்டு, "ம்! இனிமேல் பெரியவர் இந்தப் படுக்கையிலேயே பூரண ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும்! பேரனும் இனிமேல் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்!" என்று ஒரு புன்முறுவலுடன் கூறிவிட்டுப் பிச்சுமணியைத் தம் கடைக் கண்ணால் ஒரு முறை குறும்புத்தனமாகப் பார்த்து விட்டுப் புறப்பட்டுப் போனார்.

கிழவரின் உடம்பில் சிறிது தெம்பு ஏறியதும் அவர் பட்லரை நோக்கி, "டேய், இருதயசாமி! அந்தப் பயல் ராத்திரியெல்லாம் பட்டினி கிடந்திருக்கிறான். அவனை இழுத்துப் போய்ச் சாப்பாடு போட்டு மறுபடியும் இங்கே தள்ளிக் கொண்டுவா!" என்று கட்டளை பிறப்பித்தார்.

அதற்குமேல் அப்பீல் கிடையாதாகையால் பிச்சுமணி நகர்ந்து சென்று தன் சாப்பாட்டுக் கடமையை முடித்துக் கொண்டு திரும்பி வந்து தன் தாத்தாவின் அறைக்குள் தலை குனிந்தபடி மௌனமாக நின்றான். ஏதோ அதிசயம் நடக்கப் போகிறது என்று பார்ப்பது போல் பட்லர் இருதயசாமி வெகு சுவாரசியமாகத் தன் பெரிய விழிகளை உருட்டி உருட்டி விழித்தபடி ஒருபுறம் நின்றான்.

"டேய், இருதயசாமி! நீ இந்த அறையைவிட்டு வெளியே போ! ஆனால் வெளியே போவது போல் பாவனை காட்டிவிட்டு நீ ஏதாவது ஒட்டுக் கேட்க முயன்றால் உன்னைச் சுட்டுக் கொன்று விடுவேன்!" என்று மேஜர் தம் பீரங்கிக் குரலையும் ஈட்டி முனை போன்ற பார்வையையும் பட்லரின் பக்கம் திருப்பினார்.

உடனே பட்லர் இருதயசாமி அந்த அறையிலிருந்து பறந்தோடி விட்டான்.

"பிச்சுமணி! கதவைச் சாத்தி உட்புறமாகத் தாழிட்டுக் கொண்டு வந்து இப்படி என் பக்கத்தில் உட்கார். ஏனென்றால் நான் இரைந்து கத்த முடியாது!" என்றார் மேஜர்.

தாத்தாவின் கட்டளைப்படியே பிச்சுமணி நிறைவேற்றி விட்டு வந்து தாத்தாவின் அருகிலேயே கட்டிலின் மீது உட்கார்ந்து கொண்டான்.

"ம்! நேற்றிரவு நீ நடந்து கொண்டதைப் பற்றி அப்புறமாகச் சொல்லுகிறேன் என்றாயே? அதையெல்லாம் இப்போது சொல்!" என்றார் மேஜர் ராமதுரை.

பிச்சுமணி ஏதோ துயர நினைவின் கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோல், "அதெல்லாம் ஒன்றுமில்லை, தாத்தா! ஒன்றுமேயில்லை!" என்று வறட்சியுடன் பலஹீனமாகச் சிரித்தான்.

"ஒன்றுமேயில்லையா? நேற்றிரவு நீ ஏன் ஏதோ பெரிய மனுஷன் மாதிரி என்னையே எதிர்த்து நின்றாய்! பிறகு ஏதோ பைத்தியம் பிடித்தவன் மாதிரி வீட்டை விட்டு வெளியே ஓடினாய்! ராத்திரி முழுதும் வெளியே எங்கோ



தங்கியிருந்தாய்! பிறகு மறுநாள் காலையில் வந்து ஒன்றுமே இல்லை என்கிறாய்! இதன் அர்த்தம் என்ன?''

''அதெல்லாம் இப்போது அர்த்தமற்றதாகி விட்டது தாத்தா!'' என்ற பிச்சுமணியின் குரல் ஜீவனற்று ஒலித்தது.

''புரியும்படி சொல்! நேற்றிரவு நீ ஏன் போனாய்? என்ன செய்தாய்? இப்போது ஏன் திரும்பி வந்தாய்? அதைப் பளிச்சென்று சொல்!'' என்றார் மேஜர் கணீரென்ற குரலில்.

பிச்சுமணி மெல்லத் தலை குனிந்து தன் தாத்தாவின் இரு கைகளையும் மிருதுவாகத் தூக்கித் தன் முகத்தின் மீது ஆதரவாக வைத்துப் பொத்திக் கொண்டு, ''தாத்தா, என்னை.... என்னை..... மிஸ் உமா ஏற்றுக்கொள்ள முடியாதென மறுத்து விட்டார்கள், தாத்தா!'' என்று ஒரு விம்மலுடன் சொன்னான். அந்த விம்மல் அவனுடைய இருதயத்தின் கடைசி வெடிப்பாகவே கிழிந்தது.

''என்ன? அந்த வாத்தியாரம்மாவைத் தேடிக்கொண்டா போனாய்?'' என்று மேஜர் கூவினார்.

பிச்சுமணியின் புருவங்கள் சுருங்கின. 'ஆமாம்' என்று தலையாட்டினான்.

''ராத்திரி யெல்லாம் அவள் வீட்டிலேயா இருந்தாய்?''

''இல்லை! பொழுது விடிந்த பிறகு தான் மிஸ். உமாவைப் பார்த்துப் பேசினேன்...!''

''அப்போ ராத்திரி யெல்லாம் எங்கே இருந்தாய்?''

''அவர்கள் வீட்டு வாசற்படியிலேயே உட்கார்ந்திருந்தேன்!''

''மழையில் நனைந்து கொண்டு....?''

''ஆமாம்!''

கிழவரின் முகம் பிச்சுமணியின் முகத்தைவிட அதிகமாகச் சவம் போல் வெளிறியது. அது இறுகுவதற்குள் அவர், ''உனக்குச் சைத்தான்தான் பிடிச்சிருக்கு!'' என்று பற்களைக் கடித்துக் கொண்டு கத்தினார்.

பிச்சுமணி பைத்தியம் போல் சிரித்தான்.



"அவள்.... அவள்..... உன்னை ஏற்றுக் கொள்ள மறுத்தாளா?"

"ஆமாம் தாத்தா; ஆமாம்!" என்று பிச்சுமணி சொல்லி விட்டு அப்படியே தன் தாத்தாவின் கழுத்தைக் குழந்தை போல் கட்டிக் கொண்டு விம்மி விம்மி அழுதான். ஒரு நிமிஷம் கழிந்த பிறகு அவனுடைய அழுகையும் விம்மலும் திடீரென்று நின்றன.

உடம்பைச் சிலிர்த்து எல்லா உணர்ச்சிகளையும் உதிர்த்து விட்டவன் போல் அவன் மறுபடியும் ஒரு புன்சிரிப்பால் தன்னையும் தன் தாத்தாவையும் சாந்தப்படுத்த முயன்றான்.

"எனக்கு உமாதான் எல்லாம் என்று நினைத்து அவர்கள் வீட்டுக்கு ஓடினேன்! என் மனசையெல்லாம் பிளந்து என்னென்ன வெல்லாமோ சொல்லிப் பார்த்தேன்! கடைசியில்..... கடைசியில்... என்னை உமா மணந்துகொள்ள முடியாதென ஒரே தீர்மானமாகக் கூறி என்னைப் புறக்கணித்து விட்டார்கள்! அந்த விஷயம் தீர்ந்து போய் விட்டது! இனி அதைப் பற்றிப் பேசுவதற்கு ஒன்றுமில்லை! நினைப்பதற்குக்கூட ஒன்றுமில்லை!" என்று பிச்சுமணி விரக்தியாகக் கூறினான்.

அவனைக் கிழவர் ஒருகணம் வெறித்து நோக்கினார். பிறகு அவர், "உன்னை அந்த வாத்தியாரம்மா மணந்து கொள்ள மறுத்தாளா? அது ஏன்? என் சம்மதம் இல்லாத குறையாலா? பணப் பெட்டியின் சாவி என் கையில்தான் இருக்கிறது என்று நினைத்தாளா?" என்று குமுறியபடி தம் புருவங்களை நெரித்தார்.

"இல்லை தாத்தா, இல்லை! பணத்தை மிஸ் உமா மதிக்கவே யில்லை!"

"பின் வேறு எதைத்தான் அவள் மதிக்கிறாள்?"

"எதையுமே மிஸ் உமா விரும்புவதில்லை! அவர்கள் சுபாவம் அப்படிப் பட்டது! என்னை அவர்கள் விரும்பவில்லை! மணக்க முடியாது என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார்கள். அவ்வளவுதான்; எல்லாம் முடிந்து விட்டது!"

"அவள் வேறு யாரை விரும்புகிறாளாம்? வேறு யாரைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறாளாம்?"

"இனி உமா தன் வாழ்க்கையில் வேறு யாரையும் கலியாணம் செய்து கொள்ளப் போவதே யில்லையாம்!"

"அது போல் உன் வாழ்க்கையில் நீ வேறு எவளையும் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது என்று சொல்லியனுப்பினாளா?"

"இல்லை தாத்தா! என் கல்யாணத்துக்கு இன்விடேஷன் அனுப்பினால் அவர்கள் நிச்சயம் வருவார்களாம்!" என்று பிச்சுமணி சொல்லி விட்டு 'ஓ'வென அழாத குறையாய்த் தன் தாத்தாவின் நெஞ்சில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டான்.

ஒரு கணம் மௌனம் நிலவியது.

மேஜர் தம் மார்பில் கிடக்கும் பேரனின் தலையைத் தம் இரு கைகளாலும் தூக்கித் தம் முகத்தருகில் இழுத்து வைத்து அவனுடைய கண்களை ஊடுருவிப் பார்த்தார்.

பிறகு அவர், "நீ அவளால் திருப்பி அடிக்கப்பட்ட பந்து போல் ரோஷம், மானம் எதுவும் இல்லாமல் என்னிடம் திரும்பி வந்தாயா?" என்று கேட்டார்.

"இல்லை, தாத்தா! உங்களிடம் என்னைத் திருப்பிப் போகும்படி மிஸ் உமாதான் சொன்னார்கள்!"

"என்ன! என்னிடம் என் பேரனை அவளா திருப்பி அனுப்பி வைத்தாள்?"

"அது மட்டுமல்ல, தாததா! உங்களுக்கும் உமா ஒரு விஷயம் சொல்லி அனுப்பியிருக்கிறார்கள்! அதாவது உங்கள் மன நிலையை அவர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார்களாம். என்னைப் பற்றியும் என் எதிர்காலத்தைப் பற்றியும் நீங்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை அப்படியே ஆமோதிக்கிறார்களாம்! உமா வேறு யாரையும் கலியாணம் செய்துகொள்ளப் போவதில்லையாதலால், அவர்களைப் பொறுத்த வரை என் விஷயமாக நீங்கள் கவலையோ மனக்கசப்போ, என் மீது மனஸ்தாபமோ கொள்ள வேண்டிய இல்லையாம்."

"கல்யாண நோக்கம் இல்லாதவள் எதற்காக ஓர் ஆண் பிள்ளையோடு தொடர்பு வைத்துக் கொண்டாள்? கொஞ்சம் விளையாடிப் பொழுது போக்குவதற்கா? அதற்காகத்தான் வெகுளிப் பையனைப் பார்த்துப் பிடித்திருக்கிறாளோ?"

பிச்சுமணிக்கு உடம்பெல்லாம் கூசியது. அவன் முகத்தைச் சுளித்துக் கொண்டு துயரத்தோடு, "இல்லை, தாத்தா! உமாவை அப்படிப்பட்ட பெண் என்று நினைக்காதீர்கள். உமா நெருப்பைப் போல் யாராலும் நெருங்க முடியாதவர்கள். மிகவும் உயர்ந்த பண்பு உள்ளவர்கள். மிகவும் நல்லவர்கள்! மிகவும் நல்லவர்கள்!" என்று உணர்ச்சிவசமாகி விம்மினான்.

"நல்லவளாகவே இருந்தாலும் பெண் பெண்தானடா! சமயத்துக்குத் தக்கபடி நடிப்பதிலும், தந்திரமாகப்



பேசுவதிலும், கடைசியில் ஏமாற்றுவதிலும் கைதேர்ந்தவர்கள்! வேண்டுமென்றால் பிடித்துக் கொள்ளவும் வேண்டாம் என்றால் விட்டு விடவும் தெரிந்தவர்கள் அவர்கள் !''

''இல்லை, தாத்தா! உமாவின் மீது ஒரு பிசகும் இல்லை. அவர்கள் அன்புள்ளம் கொண்டவர்கள். அதை நான் தவறாக அர்த்தம் செய்து கொண்டு நானாக வலியச் சென்று உமாவைக் காதலித்து இப்படியெல்லாம் முட்டாள்தனமாக நடந்து கொண்டேன். அவர்கள் மனத்தில் எந்த நினைப்பும் இல்லை! எந்த நினைப்புமே இல்லை!'' என்று தன் நெஞ்சே கிழிவது போல் சொன்ன பிச்சுமணி தன் கண்களில் நீர் மல்க, ''தாத்தா! நீங்கள் என் மீது வைத்திருக்கும் அன்பை நினைக்கும்போது உமாவுக்குக் கண் கலங்குகிறது. நம் இருவரின் அன்புக்காக உமா தன் உயிரைக் கூடத் தியாகம் செய்வார்கள் !'' என்று கூறினான்.


சில விநாடிகள் மௌனம் நிலவியது. அது பாரமான நிசப்தமாகவே இருந்தது. சுவர்க் கடிகாரத்தின் 'டிக்டிக்' என்ற ஒலிகள் சோக இசைக்குச் சுருதி கூட்டின. பிச்சுமணி ஏதோ ஒரு சூன்ய உலகில் சஞ்சரிப்பவன் போல் எதையோ வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான்.

கிழவர் தம் பலஹீனமான கையை ஒரு நடுக்கத்துடன் தூக்கித் தம் பேரனின் தோள் மீது பரிவுடன் வைத்து, ''பிச்சுமணி! நீ உலகம் தெரியாத சின்னப் பையன். சிறுசிறு உணர்ச்சிகள் கூட இப்போது உனக்குப் பிரமாதமாகத் தோன்றும். ஆனால் பிற்பாடு சிந்தித்துப் பார்த்தால் இவையெல்லாம் அர்த்தமற்றதாகி விடும். மேலும் பைத்தியக்காரனாகும் அளவுக்கு எந்தப் பெண் மீது தீவிர ஆசை கொள்கிறாயோ அந்தப் பெண்ணோடே வாழ்க்கை முழுவதும் பிணைந்து கிடக்கும்படி நேர்ந்தால் அதுவே இந்த உலகத்தில் பெரிய நரகம் ! இதை நீ தெரிந்து கொள்!'' என்றார்.

''இல்லை தாத்தா! அது சொர்க்கமாகவும் மாறுவது உண்டு!''

''ஆனால் அது முட்டாளின் சொர்க்கமாகத்தான் இருக்கும்! கடைசியில் அது ஒன்றும் இல்லாமல் சாம்பலாகி மறைந்து விடும்.''

பிச்சுமணியின் முகம் சவம் போல் வெளிறியது. அந்த முகத்தைக் கிழவர் கூர்ந்து பார்த்ததும் ஏதோ ஒரு பயம் அவரைப் பிடித்துக்கொண்டது. அந்தப் பயத்திலேயே ஒரு கணம் மௌனமாகப்



டிரான்ஸ்போர்ட் அதிகாரி:

சும்மாத்தானே நிற்கிறீர்கள்? இங்கே கம்பம் நடும்வரை இந்தப் போர்டைப் பிடித்துக் கொண்டு நில்லுங்களேன் !

படுத்திருந்த கிழவர் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராய்த் தம் சட்டைப் பையிலிருந்து ஒரு சாவிக் கொத்தை எடுத்து, அதைப் பிச்சுமணியிடம் கொடுத்து, ''அதோ, அந்த அலமாரியைத் திற !'' என்றார்.

பிச்சுமணி அந்த அலமாரியைத் திறந்தான்.

''அதில் மேல் டிராயரில் ஒரு சின்ன கைத் துப்பாக்கி இருக்கும். அதை எடு!'' என்றார் மேஜர்.

பிச்சுமணி அந்தக் கைத் துப்பாக்கியை எடுத்தான்.

''டேய், பையா! அந்தத் துப்பாக்கியில் ஒரு குண்டு கெட்டிக்கப்பட்டிருக்கிறது! பல வருஷங்களாகவே அந்தக் குண்டு கெட்டிக்கப்பட்டிருக்கிறது! ஆனால் அதை நான் உபயோகப்படுத்தவே இல்லை. டேய், பிச்சுமணி! இங்கே வா ! உன்னைப் போல் நானும் இள வயதுப் பயலாக இருந்த போது, ஒரு பெண்ணைக் காதலித்தேன். கொஞ்சம் தீவிரமாகவே காதலித்தேன். அந்தப் பெண் என் வாழ்க்கையை விட்டே போய் விட்டாள். நான் ஒரு நாள் துயரம் தாங்காமல் தற்கொலை செய்து கொள்வதற்காகவே அந்தத் துப்பாக்கியில் ஒரு குண்டைக் கெட்டித்தேன். ஆனால் அந்தத் துப்பாக்கியை உபயோகப் படுத்துவதற்கு முன்னால் கொஞ்சம் சிந்தித்தேன்.

ஒரு நாள் இரவு முழுதும் அதை என் கையில் வைத்துக் கொண்டே பலவற்றையும் யோசித்தேன். என்னை நானே சுட்டுக் கொண்டு என்னை அழித்துக் கொள்வதால் யாருக்கு என்ன லாபம்? என்னுடைய அந்த அகாலச் சாவைப் பற்றி எங்கோ இருக்கும் அந்தப் பெண் எப்போதாவது கேள்விப்பட்டால் ஒரு பெருமூச்சு விடுவாள்; அவ்வளவுதான்! அந்த ஒரு பெருமூச்சுக்காக என் இறுதி மூச்சை ஏன் விட வேண்டும்? அப்போதுதான் நான் செய்ய நினைத்த முட்டாள்தனம் எனக்குப் புரிந்தது. உடனே துப்பாக்கியைத் தூக்கிப் போட்டு விட்டேன். என்னையே அழித்துக் கொள்ளும் அளவுக்கு எந்தப் பெண்ணின்மீதும் தீவிரமாகக் காதல் கொள்ளக் கூடாது என்றும் தீர்மானித்துக் கொண்டேன். இப்போது எல்லாப் பெண்களும் எனக்கு ஒரே மாதிரித்தான்! அது இப்போது எனக்குத் தெரிகிறது. உனக்கும் அது தெரிய வேண்டும். பிச்சுமணி! பெண் என்பவள் ஆண்களுக்குத் தோழியாகவோ, வேலைக்காரியாகவோ இருக்கத் தகுதியானவளே தவிர, நம் எண்ணங்களை யெல்லாம் அடிமை கொண்டு நம்மை ஆட்டும்படியாகவோ நம் தலை மீது ஏறி உட்கார்ந்து கொள்ளும்படியாகவோ விடக் கூடாது. அவள் இல்லா விட்டால் நமக்கு வாழ்வே யில்லை என்ற நினைப்புக்கும் இடங் கொடுக்கக்கூடாது."

பிச்சுமணி விசித்திரமாகச் சிரித்தான். துப்பாக்கியை ஒரு முறை உற்றுப் பார்த்து விட்டு, அதை மறுபடியும் அலமாரியில் வைத்துப் பூட்டினான்.

"பிச்சுமணி! அந்த அலமாரிக்குள் தான் நம்முடைய வரவு செலவு கணக்குகள், பாங்க் செக் புஸ்தகங்கள், ரொக்கப் பணம் எல்லாம் இருக்கின்றன. இனி மேல் அந்தச் சாவிக் கொத்தை நீயே வைத்துக் கொள்! இனி மேலாவது நீ புத்திசாலித்தனமாக நடந்து கொள்!" என்றார் மேஜர் சகலத்தையும் தம் பேரன் கையில் அப்போதே ஒப்படைத்து விடுவது போல.

பிச்சுமணி தன் தாத்தாவின் கட்டில் மீது வந்து உட்கார்ந்து அவரது இரு கைகளையும் எடுத்துத் தன் மார்பில் அழுத்திக் கொண்டான். தன் நெஞ்சு வெடித்து விடாதபடி அழுத்திக் கொள்வது போலவே தோன்றியது.

"பையா! உனக்காகவே நான் வாழ்ந்தேன். நீ நம் பரம்பரைக்காக வாழ வேண்டும். நீ இப்போது சின்னவன். உன் முன்னால் இன்னும் எத்தனையோ வருஷத்திய வாழ்க்கை இருக்கிறது. அந்த வாழ்க்கையில் எத்தனையோ பெண்கள் குறுக்கிடுவார்கள். அவர்களில் எவளாவது ஒருத்தி உனக்கு ஏற்றவளாகவும் உன்னை ஏற்றுக் கொள்ளக் கூடியவளாகவும் கிடைப்பாள்...."

"அதைப் பற்றி யெல்லாம் இப்போது என்ன தாத்தா?"

"பிச்சுமணி! நம் பரம்பரைக்கு இருப்பதெல்லாம் நீ ஒருவன்தான். நீ என்றாவது ஒரு நாள் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். உனக்கும் குழந்தைகள் பிறக்க வேண்டும். நம் வம்சம் தழைக்க வேண்டும். உன் கல்யாணத்தை என் கண் முன்னால் காண முடிந்தால், உன்னை எவளாவது ஒரு நல்ல பெண்ணின் கையில் ஒப்படைத்து விட்டுப் போக முடிந்தால் எவ்வளவோ திருப்தி அடைவேன். அப்புறம் உன் இஷ்டம்!"

பிச்சுமணியோ தன் வாழ்க்கையெல்லாம் எப்போதோ அழிந்து விட்டது போல விரக்தியாகச் சிரித்துவிட்டு, "நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் தாத்தா!" என்று மட்டும் சொன்னான். (தொடரும்)

இருமலை நிறுத்த
வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

சாப்பிடுங்கள் சிவப்பு லேபில்






விடாது தொடர்ந்து தொல்லை கொடுக்கும் இருமலைப் பற்றி அசிரத்தையாக இருக்கக் கூடாது. அது உடலைப் பலவீனப்படுத்தி, நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைத்து, நோய்கள் எளிதில் பீடிக்கும் நிலையை ஏற்படுத்துகிறது. வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் மூன்று விதங்களில் அளிக்கும் பலன் ஒப்பற்றது. அதிலுள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால் இருமலை குணப்படுத்துகிறது. இரும்பு சத்து, பலமளிக்கும் சத்துக்கள், மால்ட் மற்றும் ஸ்ப்ரீன் சாரங்கள், பசியைத் தூண்டுகின்றன, இழந்த சக்தியை ஈடு செய்கின்றன, குணமான நோய் மீண்டும் வராமல் தடுக்கும் சக்தியை யூட்டுகின்றன.

எல்லாக் கால நிலைகளிலும் நோய்களை எதிர்க்கும் சக்தி பெற சிவப்பு லேபிலுள்ள வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிடுங்கள்.





வாட்டர்பரீஸ் காம்பவுண்டில் கலந்துள்ள கிரியோஸோட் மற்றும் க்வயகால், சுவாசக் குழாய்களில் கிருமிகளால் அபாயம் ஏற்படாமல் பாதுகாக்கின்றன. கபத்தை 'இளக்கி வெளியேற்றி சுவாசப்பைகளை சுத்தமாக வைக்கின்றன. இருமல், ஜலதோஷம், சுவாசக்குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கவும் மீண்டும் வராமல் தடுக்கவும் உதவுகின்றன.

வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

இருமல், ஜலதோஷம், சுவாசக் குழாய்களில் கபம் கட்டுதல், காச சம்பந்தமான உபாதைகள் முதலியவற்றை எதிர்க்கும் சக்தியை உடலுக்கு அளிக்கிறது

வார்னர் - இந்துஸ்தான் லிமிடெட், பம்பாய் JWT-WH-2394 (R)



பிரமுகர் பேசுகிறார்

சியாமா

நாடகத்தில் வருவோர்:

தந்தை: பிரமுகர், வியாபாரி.
மனைவி: பிரமுகர் மனைவி
வள்ளி: அவர் மகள், கல்லூரி மாணவி
மகன்: பள்ளிப் பையன்
கணக்குப்பிள்ளை

காட்சி – 1

[ஒரு பிரமுகரின் வீட்டு வரவேற்பு அறை. காட்சியின் ஆரம்பத்தில் பிரமுகர் தம் குடும்பத்துடன் சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்.]

மகள் வள்ளி: யாரப்பா சற்று முன் வந்து போனது? வாசலிலே அவங்க காரிலே ஏர்றப்போ பார்த்தேன். கலைவாணி பெண்கள் கல்லூரி தலைமை ஆசிரியை மாதிரி இருந்திச்சே?

பிரமுகர்: அவங்களேதான்.

மனைவி: அவுங்களுக்கு இந்தனை காலங் கார்த்தாலே இங்கே உங்ககிட்டே என்ன வேலை?

பிரமுகர்: என்ன கணக்குப்பிள்ளே! கம்மா நின்னு? நீ சொல் ஐயா, நான் சொன்னாலும் அவன் நம்ப மாட்டான்.

க.பிள்ளை: நம்ப ஐயாவை அவங்க கல்லூரியிலே பேச அழைக்க வந்திருக்காங்க அத்தம்மா. அதுக்காகத்தான் இந்நேரம் ஐயாவோட மன்றாடிக்கிட்டிருந்தாங்க.

மனைவி: ஐயாவாவது, பேசறதாவது! நீங்க ஒண்ணும் அதுக்கெல்லாம் ஒத்துக் கிடலியே?

பிரமுகர்: என்ன கணக்குப்பிள்ளே! நான் அப்பவே என்ன சொன்னேன்?

வள்ளி: ஏம்பா, நீ எதைப் பத்திப் பேசனு மாம்?

பிரமுகர்: 'கல்வியும் ஒழுக்கமும்' என்பது பற்றி வர்ற சனிக்கிழமை இறுதி வகுப்பு மாணவிங்களுக்குப் பேசணும்னுங்க.

வள்ளி: நீ ஒத்துக்கிடலியே!

பிரமுகர்: ஏன் ஒத்துக்கிடலே? சரியாகச் சனிக்கிழமை நாலாவது மணிக்கு அங்கே ஆஜராகி இருக்கேன்னு சொல்லி அவங்களே அனுப்பி வைச்சிருக்கேன். கணக்குப் பிள்ளே! பேரேட்டிலே தேதியையும் நேரத்தையும் குறிச்சு வைச்சுக்கும். மறந்து தொலைச்சு டாதிங்க.

மகன் சிறுவன் (வந்து கொண்டே): என்னப்பா! எதை மறந்து தொலைச்சுடக் கூடாதுன்னு சொல்லிக்கிட்டிருக்கே?

வள்ளி: அப்பா வர்ற சனிக்கிழமை கலைவாணி கல்லூரியிலே, 'கல்வியும் ஒழுக்கமும்' என்பது பத்திப் பேசப் போறாங்களாம்.

மகன்: என்னப்பா இது! உனக்கென்னப்பா பேசத் தெரியும்?

மனைவி: அப்படிக் கேளுடா, என் தங்கக் கட்டி. வியாபாரத்திலே ஏதோ நாலு காசு கௌரவமாகச் சம்பாதிச்சுக் காலத்தைக் கடத்திக்கிட்டிருக்கிற நமக்கேன் இந்த வம்பு தும்பெல்லாம்? அந்தப் பொம்பளையோட தளுக்கு குலுக்கிலே மயங்கி இவங்க சரின்னு சொல்லியிருக்கணும். இது நல்லதுக்கில்லே.

பிரமுகர்: என்ன கணக்குப்பிள்ளே! இவ இப்படிப் பேசுவான்னு நான் மாடியிலேயே சொன்னேனு, இல்லையா?

க. பிள்ளை: அப்படி இல்லீங்க அம்மா, அந்த மீட்டிங்குக்கு கலெக்டர் ஐயாவும் வராரும். அங்கே போறதினுலே ஐயாவுக்கு அவுங்க பழக்கம் ஏற்படலாம். அதனுலே நம்ம வியாபாரமும் பெருக வாய்ப்புண்டு. மேலும் இப்பல்லாம் எல்லாப் பத்திரிகைகளிலுமே இதுக்குன்னு ஒரு பத்தி ஊர்வாரியாக ஒதுக்கி வச்சிருக்காங்களே. ஐயா பேர் பத்திரிகைகளிலே வந்தால் நம்ப எல்லாருக்குமே சந்தோஷந்தானே.

பிரமுகர் (மகிழ்ச்சியுடன்): அப்படிச்சொல் ஐயா. இன்னொருவாட்டி அவளுக்குப் புரியும் படி சொல்லு. அந்த இரும்புக்கடை நாயுடு, பட்சணக்கடை ஐயரு, இவங்க பேரு பத்திரிகையிலே வராத நாளே கிடையாதே. திருக்குறள் சங்கம், சேவா சங்கம், செஞ்சிலுவை சங்கம், சினிமா விசிறிகள் கூட்டம்னு எங்கேனுச்சியும் தினம் அவங்க பேச்சு அடிபடுதே. அவங்களுக்கு நான் என்ன கொறைஞ்சு போயிட்டேன்?

க. பிள்ளை: அது மட்டுங்களா? இப்படிப் பேச ஆரம்பிச்ச பிறகுதானே அவங்களெண்டு பேராளுமே புதுசா இன்னும் இரண்டு கடைங்களைத் திறக்க முடிஞ்சிச்சு? அதுவும் கலெக்டர் ஐயா கையாலே?

மகன்: அதெல்லாம் கிடக்கட்டும் அப்பா. உனக்கு முன்னே பின்னே பேசிப் பழக்க மில்லையே? போன இடத்திலே கைகாலெல்லாம் உதறி மயக்கம் போட்டு விழுந்தால் என்ன பண்ணறது? வீட்டிலே வெறும் பத்திரிகையைப் படிக்கவே நீ தடுமாறுவியே.

பிரமுகர் (கோபத்துடன்): ஏண்டா! உன்னைக் கடையிலே போடாமல் போகுப் போவுதுன்னு நாலு க்ளாஸ் படிக்க வைச்சதுக்கு என் பேரிலேயே பாயறயா? சனிக்கிழமை நீயுங்கூட வந்து கேளேன், எப்படிப் பேசறேன்னு.

மகன்: கேக்கத்தான் போறேன்.

வள்ளி: எனக்குக்கூடப் பயமாத்தான் இருக்கப்பா.

பிரமுகர்: சரி, சரி. நீ வேறே உன் திருவாயைத் திறக்க வேண்டாம். கணக்குப் பிள்ளே! நீ உடனே போய் நான் ஏற்கனவே சொன்ன அந்தத் தமிழ் வாத்தியார்கிட்டே விஷயத்தைச் சொல்லி ஒரு ஏழெட்டுப் பக்கங்களுக்குக் குறையாமல் எழுதிக்கிட்டுப் பொழுது சாஞ்சதும் கடையண்டை வரச் சொல்லும்.

க. பிள்ளை: சரிங்க.

மகன்: அந்தத் தமிழ் ஐயாவை விட்டு இங்கும் அங்குமா ஏழெட்டுக் குறள்களைப் பேச்சிலே தூவி வைக்கச் சொல்லுங்க. அது தான் இப்போவெல்லாம் 'பாஷன்'.

மனைவி: எனக்கென்னவோ பயமாக இருக்குங்க. ஏதாவது ஒன்னுக்கொன்னு பேசிக் கடைசியிலே கலெக்டர் மனஸ்தாபத்திலே வந்து முடியப் போவுது.

பையன்: உனக்கு அந்தப் பயமே வேண்டாம் அம்மா. என் கவலை யெல்லாம் சரியான சந்தர்ப்பத்திலே அப்பாவோட வாய் திறக்கணுமேங்கிறதுதான்.

பிரமுகர்: ஏலே, நீ சும்மா இருக்க மாட்டே? (கணக்குப் பிள்ளையிடம்) அடே! நீ ஏனய்யா நிக்கிறே? சீக்கிரம் அவர் பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பறதுக்கு முந்தி அந்தத் தமிழ் ஐயாவைப் போய்ப் பிடியும். அவசியமானும் இன்னிக்கு லீவு போட்டுட்டு விஷயத்தை எழுதச் சொல்லும். சாயங்காலம் மறக்காமல் மார்க்கெட்டிலே மண்டியண்டை வரச் சொல்லும்.... என்ன மனசிலே வாங்கிக்கிட்டீங்களா ?

க. பிள்ளை: இதோ கிளம்பிட்டேனே...

(போகிறார்.)

காட்சி – 2

[ஞாயிற்றுக்கிழமை காலை. வீட்டில் பல பத்திரிகைகளின் நடுவே வெற்றிப் பெருமிதத்துடன் பிரமுகர் தோற்றமளிக்கிறார். பின்புறம் அவர் மனைவி காப்பியை ஆற்றிக் கொண்டிருக்க, கணக்குப் பிள்ளை உள்ளே நுழைகிறார்.]

பிரமுகர் (நிமிர்ந்து): அடேடே, வாப்பா, வா. உன்னைத்தான் விடிஞ்சதிலேருந்து எதிர் பார்த்துக்கிட்டிருக்கேன். அநேகமாக எல்லாப் பத்திரிகைகளிலுமே நம்ம பிரசங்கம் பற்றி வந்திருக்கு. .

க. பிள்ளை: பின்னே வராமா? வர்ற வழியிலே ஐயர் கிளப்பிலேதான் காப்பி சாப்பிட்டேன். அங்கே இரும்புக் கடைக்காரரையும் சந்திச்சேன். ஐயரு, அவரு இரண்டு பேர் முகத்தையுமே பார்க்கச் சகிக்கல்லே.

பிரமுகர்: ஏதாவது சொன்னாங்களா?

க. பிள்ளை: ஏன் சொல்றாங்க? என்னைப் பார்க்கல்லே போல வேறு பக்கம் திரும்பிக்கிட்டாங்க.

பிரமுகர்: கிடக்கிறாங்க. குப்பைப் பயலுக. ஆமாம்! தினசரிப் பத்திரிகையிலே நம்ம போட்டோ வரும்னே, காணுமே?

க. பிள்ளை: நாளைக்கு வருதாம். நீங்க பேசினதே நேற்று ராத்திரிதானே போட்டோ எடுத்திருக்காங்க. இன்னிக்கி 'பிளாக்' தயார் பண்ணி நாளைக் காலையிலே ஜாம் ஜாம்னு வரப் போவுது.

பிரமுகர்: (வியப்புடன்) எப்போ போட்டோ எடுத்தாங்க?

க. பிள்ளை: அதை அவங்களுக்கு விட்டு விடுவேனா? ஐயாவுக்குக் கலெக்டர் மாலை போடறப்போ எடுக்கச் சொன்னேன். அந்தப் போட்டோதான் வரப்போவுது.

பிரமுகர்: எல்லாம் இவகிட்டே சொல்லப்பா. என்னாலே பேச முடியாது. மயக்கம் போட்டு விழப்போறேன்னு இவளும் பிள்ளைங்களும் என்ன கலாட்டா பண்ணியிருப்பாங்க, தெரியுமா?

க. பிள்ளை: இல்லேயம்மா! ஐயா அமர்க்களமாப் பேசினாங்க. கலெக்டர் ஐயாவே அசந்து போய் மூக்கிலே கைவச்சாங்கன்னு பாருங்களேன். அதோ தம்பி வருதே, வேணும்னா அதையே கேளுங்களேன்.

மகன்: ஆமாம், அம்மா! நாம பயந்தது போல் கூச்சம் கீச்சம் இல்லாமல் அப்பா வெளுத்து வாங்கிட்டார். ஆனால் ஒன்னே, ஒன்னு. மூக்குக் கண்ணாடியை இழுத்து மாட்டிக்கிட்டு அத்தனை அப்பட்டமாக வாசிக்கிறப்போல் காட்டிக்கிட்டு இருக்க வேண்டாம்.

க.பிள்ளை: முதல் தடவைதானே தம்பி! அடுத்த தடவை ஐயா ஏன் எழுதிப் படிக்கிறாரு. எழுந்து நின்னு மழை பொழியறாப் பிலே பொழிஞ்சுட மாட்டாரா!

வள்ளி (வந்துகொண்டே): ஆமாம், ஏம்பா நேற்றே கேக்கணும்னு எண்ணிக்கிட்டிருந்தேன். மறந்து போயிருச்சு. பிரசங்கம் முடிஞ்ச பிறகு அந்தத் தலைமை ஆசிரியை அம்மா என்ன குசுகுசுன்னு ஒங்கிட்ட பேசிக்கிட்டிருந்தா?

மனைவி: குசுகுசுன்னு பேசினாளா?

பிரமுகர்: ச,ச, அப்படியெல்லாம் ஒன்னுமில்லே, நல்லாப் பேசினேன்னு பாராட்டினா.

மகன்: அப்பா அவளுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தார் அம்மா.

மனைவி: என்னங்க இது? எனக்கு ராத்திரி இதெல்லாம் நீங்க சொல்லலீங்களே?

பிரமுகர்: என்னடி தத்துப் பித்துன்னு உளர்றே. பணம் அவளுக்கா கொடுத்தேன்? ஏதோ கட்டிட நிதிக்கு வேணும்னு கலெக்டர் ஐயா கையாலே ஒரு கடுதாசைக் கொடுத்தாங்க. நானும் வழியில்லாமல் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறதாக ஒத்துக்கிட்டேன்.

மனைவி: ஒத்துக்கிட்டதானே செஞ்சீங்க, இன்னும் கொடுக்கல்லியே? அந்தப் பணத்தை நீங்க கொடுக்கிறதை நான் பார்த்துடறேன்.

மகன்: அப்பா! வாசல் கேட்டுக்குள்ளே ஏதோ டாக்ஸி நுழையுதே.

பிரமுகர்: போய், வர்றவங்களைக் கூட்டிக்கிட்டு வா... என்ன கணக்குப்பிள்ளை! யாராக இருக்கும்?

க. பிள்ளை (சிறு தாமதத்துக்குப் பின்): கருவேப்பிலைப்பட்டி பஞ்சாயத்து பிரஸிடெண்ட் மழவராயர் மாதிரியல்ல இருக்கு.

மழவராயர் (வந்துகொண்டே): வணக்கங்க. ராத்திரி ரொம்பப் பிரமாதங்க. பிச்சுப் பிச்சுன்னு பிச்சுப்பிட்டீங்களே. நேரே பார்த்துப் பாராட்டி விட்டுப் போகணும்னு ராத்திரி ஊருக்குப் போகிறதைக் கூடத் தள்ளிப் போட்டுட்டேன்.

பிரமுகர் (பொய் அடக்கத்துடன்): அட நீங்க ஒன்னு. ஏதோ அந்த அம்மா வந்து கூப்பிட்டுச்சு. கலெக்டர் வேறே வருவதாகச் சொல்லிச்சு. தட்ட முடியல்லே. ஒத்துக்கிட்டேன்.

மழவராயர்: இப்போ அதே மாதிரி எனக்கும் தட்டாமல் ஒத்துக்கிடணும். வர்ற புதன்கிழமை நம்ம பஞ்சாயத்திலே பொலி

காளைகள் தினம் கொண்டாடறோம். நீங்க தான் அதுக்கும் வந்து தலைமை தாங்கணும்.

பிரமுகர்: என்னங்க இது! நான் ஒரு வியாபாரி. அங்கெல்லாம் வந்து பேச ஏதுங்க நேரம்? இது உள்ளூர் விவகாரம், தட்டிக்க முடியல்லே.

மழவராயர்: அப்படிச் சொல்லக் கூடாது. நேற்று ராத்திரி நீங்க பேசினதைக் கேட்டப் போவே முடிவு கட்டிட்டேன். நீங்க வந்தால் விழாக் கொண்டாடறது. இல்லாட்டி வேண்டவே வேண்டாம்.

பிரமுகர்: சேச்சே அப்படியெல்லாம் செஞ்சுடாதீங்க.

மழவராயர்: அப்ப நீங்க வரணும். அநேகமாகக் கலெக்டர் ஐயாவும் வரலாம். நேரே இங்கேயிருந்து அவரைக் கூப்பிட அவர் பங்களாவுக்குத்தான் போறேன்.

பிரமுகர்: சரி, சரி. நீங்கதான் விடமாட்டேங்கிறீங்களே.

(மழவராயர் போகிறார்)

வள்ளி: சரி, அப்பாவோட இரண்டாவது பிரசங்கம் புதன்கிழமையன்று?

பிரமுகர்: இரண்டாவது பிரசங்கமா? மூணாவது பிரசங்கம் ஒண்ணும் புதன்கிழமையன்றே இருக்கு. எல்லாம் அந்தத் தலைமை ஆசிரியை அம்மா செஞ்ச வேலை.

மகனும், மகளும்: என்னப்பா இது! சொல்லவே இல்லையே!

பிரமுகர்: உள்ளூர் மாதர் சங்கத்திலே குடும்பக் கட்டுப்பாடு பற்றிப் பேசணும்னு அதோட தலைவி கேட்டாங்க. சரின்னு ஒத்துக்கிட்டேன். அந்தம்மாவைத்தான் அந்தத் தலைமை ஆசிரியை அம்மா நேற்று பிரசங்கத்துக்குப் பிறகு அறிமுகம் செய்து வைச்சாங்க.

மனைவி: ஐய, உங்களுக்கு வெட்கம், கிட்கமில்லே. போயும், போயும் பொம்பளைங்க கூட்டத்திலே போய்க் குடும்பக் கட்டுப்பாடு பற்றிப் பேசப் போறாராம். இந்த ஆம்பிளை!

பிரமுகர்: சரி, சரி. உன்னை ஒருத்தரும் கேட்கல்லே. உன் திருவாயை மூடு.

க. பிள்ளை: அப்போ நான் போய் அந்தத் தமிழ் வாத்தியாரைக் கூட்டியாரட்டுங்களா? இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமையாக இருக்கு. ஒருவேளைச் சோறும், டிபனும் கொடுத்துக் காரியத்தை முடிச்சக்கலாம்.

பிரமுகர்: கணக்குப்பிள்ளை! உம்ம ஐடியா நல்ல ஐடியா. உடனே போய் அவரை அழைச்சிக்கிட்டு வாரும்.

(கணக்குப்பிள்ளை போகிறார்.)





"ஏன் இப்படி மாப்பிள்ளை மேலே எரிஞ்சு விழுறேள்?"

"பின்னே என்னவாம்? எங்கிட்டே பஸ்ட் கிளாஸ் ரயில் டிக்கெட்டுக்கு பேட்டா வாங்கிக் கொண்டு விட்டு, மூணும் கிளாஸிலே வந்திருக்கானே! என்னையும் ஒரு ஆபீஸ்னு நெனச்சுண்டாளு என்ன?"

காட்சி — 3

[பிரமுகர் வீடு. புதன்கிழமை எட்டு மணி. ஈஸிசேரில் சாய்ந்துள்ளபிரமுகர், சோர்ந்து தோற்றமளிக்கிறார். அவர் மனைவி மகன், மகள் மூவருமே பரபரப்புடன் தோற்றமளிக்கின்றனர்.]

மனைவி (பரிவுடன்): அப்போலே இதெல்லாம் வேண்டாம்னு சொன்னேன். கேட்டீங்களா?

பிரமுகர்: என்ன பண்றது போ. போறாத வேளை. இப்படி வரும்னு கண்டேனா?

மகன்: நீ சும்மா அப்பாவைத் தொந்தரவு பண்ணாதே வள்ளி, நான் சொல்றேன். இரண்டு இடங்களுக்குப் போக வேண்டி யிருந்தபடியால் இரண்டு சொற்பொழிவுகளின் பிரதிகளும் அப்பா கையிலே இருந்திருக்கு. முதலிலே போன மாதர் சங்கத்திலே அப்பாவை வரவேற்று மாலே போட்டாங்க அந்தத் தலைவி அம்மா. வரவேற்பு உரைக்குப் பின் அப்பா பேச ஆரம்பிச்சாரு. கொஞ்ச நேரம் ஒருத்தருக்கும் ஒண்ணுமே புரியல்லே. எனக்கும் கூடத்தான். நடுவிலே ஓர் இடத்திலே அப்பா பொலிகாளேங்கன்னு சொன்னபோதுதான் நான் திடுக்கிட்டு விழிச்சுக்கிட்டேன். ஆனாலும் என்ன செய்வேன்? தானோ கூட்டத்துக்கு மத்தியிலே ஹாலில் மாட்டிக்கிட்டிருக்கேன். அப்பாவோ மேடை மேலே பேசிக்கிட்டு இருக்காரு. கடைசியிலே ஒரு தினுசா பேச்சு முடிஞ்சு காரிலே ஏறறப்போதான் அப்பாவை விவரம் கேட்டேன். விஷயம் தெரிஞ்சதுதான் தாமதம். அப்பாவுக்கு மூர்ச்சையே போட்டுட்டுது. கருவேப்பிலேப்பட்டி போகிறதை ரத்துச் செஞ்சுட்டு, வீடு வந்து சேர்ந்தோம்.

வள்ளி: எப்படியப்பா, நீ கடைசிவரையில் தெரிஞ்சுக்காமல் பேசிக்கிட்டிருந்தே!

பிரமுகர் (ஹீனஸ்வரத்தில்): இனிமேல் உண்மையை மறைப்பானேன்? போன சனிக்கிழமை அந்தக் கல்லூரியிலும் சரி, நேற்றும் சரி எனக்கு எழுந்திருக்க நின்னதுதான் தெரியும். பிறகு ஏதோ ஒரு வெறி உந்த நான் பாட்டுக்குப் படிச்சுக்கிட்டே இருந்திருக்கேன். எதிரே இருந்த கூட்டம் மேலேயும் கீழேயும் ஆடறாப்பிலே ஒரு தோற்றம். இரண்டுநாளுமே என்ன படிச்சேன், எப்போ முடிச்சேன் ஒண்ணுமே எனக்குத் தெரியாது.

வள்ளி: அப்போ, ஆரம்பத்திலேயே பின்னுடிப் பேசவிருந்த சொற்பொழிவைத் தம்பி கையிலே கொடுத்திருக்கணும்.

மனைவி: ஏ வள்ளி! நீ சும்மா தொண தொணத்து அவங்க மனசைப் புண்படுத்தாதே.

வள்ளி: ஏன் தம்பி, அந்தம்மா இது பத்தி ஒண்ணுமே சொல்லல்லியா?

மகன்: சொல்லாம என்ன? அவுங்க முடிவுரையில் இன்று பேசிய நம் தலைவர் தமது சொற்பொழிவில் குடும்பக் கட்டுப்பாட்டைக் காட்டிலும் பொலி காளேங்களைப் பற்றித்தான் அதிகம் பேசினார். ஆனால் இரண்டு விஷயத்துக்கும் ஒரு தொடர்பு இருக்கத்தான் இருக்கு. உயர்ந்த ரகப் பொலி காளேங்க இல்லாமல் கால்நடை அபிவிருத்தி செய்யறது எப்படி மதியீனமோ அதே போலத்தான் போதிய வசதி இல்லாதவங்க குடும்பத்தைப் பெருக்குகிறதும் என்று சொல்லி முடிச்சாங்க.

மனைவி: அடி விவஸ்தை கெட்டவளே!

பிரமுகர் (விம்மி): அவமானம், அவமானம்!

வள்ளி: (கவலையுடன்) ஏம்பா, பத்திரிகைகளில் இது பற்றி எக்கச்சக்கமாக ஏதாவது வருமோ?

பிரமுகர்: அதைச் சமாளிக்கத்தான் கணக்குப்பிள்ளையைப் பத்திரிகைக்காரங்க பின்னுடி அனுப்பி வைச்சிருக்கேன்.

மனைவி: ஏதோ தலைக்கு வந்தது தலைப் பாகையோடு ஒழியட்டும். இனிமேலே இதுக்கெல்லாம் முழுக்குப் போட்டுட்டு வியாபாரத்தை ஒழுங்காகக் கவனியுங்க.

பிரமுகர்: அதிலே உனக்கென்ன சந்தேகம்? நாளைக் காலே ஏழாவது மணிக்குக் கடையிலே குந்தியிருக்க மாட்டேனா?

வள்ளி: அப்பா! பாவம், கருவேப்பிலேப் பட்டியிலே நீ வராமல் மழவராயர் என்ன பண்ணினாரோ?

மகன்: எனக்குக் கூடக் காரிலே வர்றப்போ தோணிச்சு. இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டுப் பேச்சை வீணாக்காமல் அங்கே பொலி காளேங்களுக்கு அனுப்பி வைத்திருக்கலாம்னு.

வள்ளி: போடா போக்கிரி!

[சிரிக்கிறாள். சிறிது தயங்கிவிட்டுப் பெற்றவர்களும் சிரிப்பில் கலந்து கொள்கிறார்கள்.]

வசீகரத்தையும், பெருமிதத்தையும் கொடுக்கும் நறுமணம் உங்களுக்கு

பாமாலிவ் லவண்டர் டால்க்

உபயோகிப்பதால்.





உங்களுக்கு மிகவும் பிடித்தமான லெண்டுகள்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!

ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களின் [illegible] இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான லெண்டுகளின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்... இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் மட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினுலும், பெருமிதத்தினுலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக்கொண்டு, சூழ்ந்து கிறங்கும் அதன் இனிய வசீகர நறுமணத்தினுல் களிப்படையுங்கள்.

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.

புதிய, நவீன காஸ்மெடிக் டின்!






மற்றும் கிடைக்கும் பாமாலிவ் டால்க் டின்கள்—
மயக்கும் 17 லெண்டுகளின் அற்புதமான கலவை

PW.8.Y TAM

நாரதரும் இசையும்



நாரதர் ஒரு சமயம் கிருஷ்ணனைச் சந்தித்துத் தம்மைப் பரமசிவனிடம் அழைத்துச் சென்று தமது சங்கீதத்தைக் கேட்கச் செய்யும்படி வேண்டினார். அதற்குக் கிருஷ்ணன் சொன்னார்:

"சாமகானப் பிரியனான பரமசிவன் இசையிலே மிகச் சிறந்த வல்லுநர். அவரை இசை பாடித் திருப்தி செய்வது என்பது சாமான்ய காரியமல்ல. எவராலும் எளிதில் முடியாது. அதனால் நீங்கள் இன்னும் நல்ல தேர்ச்சி பெற்றபின் அவர் முன்னால் பாடலாம். அப்போது நானே உங்களை அவரிடம் அழைத்துச் செல்கிறேன்."

"கிருஷ்ணா.........இதென்ன விந்தை? என்னை நீங்கள் அறியாதவரா? நாரத கானம் என்றால் உயிர்களெல்லாம் உருகாதா? இது தங்களுக்குத் தெரியாததா? என்னை ஒரு சாமானியப் பாடகனாக நினைத்து விட்டீர்களா? என்னைவிட சங்கீதத்தில் தேர்ச்சி பெற்றவன் ஒருவன் இந்த மூவுலகிலுமில்லை யென்று உறுதியாகச் சொல்வேன். சங்கீதத்தில் பூரண ஞானம் பெற்றவன் நான்...."

"நாரதரே! சங்கீதம் என்பது ஓர் எல்லையற்ற கடல். வளர்ந்து கொண்டிருக்கும் அந்தக் கலையை அறிவதற்கு வரம்பே கிடையாது. கொஞ்ச நாட்கள் கழித்துப் பார்க்கலாம்" என்று கூறி நகர்ந்து விட்டார் கிருஷ்ணன்.

புல்லாங்குழலினால் தெய்வீக கானம் எழுப்பி உயிர்களை யெல்லாம் தன் வசமாக்கும் கண்ணனையும், வேதத்தையும், பிரணவத்தையும் நாத மயமாய் வீணையிலே ஒலிக்கச் செய்யும் சரஸ்வதி தேவியையும் மறந்து நாரதர் பேசியது கண்ணனுக்கு அவருடைய அறியாமையையும், கர்வத்தையும் தான் சுட்டிக் காட்டின. கண்ணன் புன்சிரிப்புச் சிரித்துக் கொண்டார்.

* * *

சில நாட்களுக்குப் பிறகு நாரதரைப் பரமசிவன் முன்னிலையில் பாடுவதற்காக அழைத்துச் செல்ல வந்தார் கிருஷ்ணன். கந்தர்வ உலகத்தின் வழியே நாரதரைக் கிருஷ்ணன் அழைத்துச் சென்று கொண்டிருந்தார். அங்கே பல கந்தர்வர்களும், தேவதைகளும் கைகால் முகங்களில் காயங்களோடும், புண்களோடும் அழுது கொண்டு வருந்தியபடி காணப்பட்டனர்.

நாரதருக்கு அவர்களைக் கண்டதும் வியப்பாக இருந்தது. "கண்ணா! இவர்களெல்லாம் யார்? ஏன் இப்படி அவதியுறுகின்றனர்?" என்று கேட்டார்.

"நீங்களே கேளுங்கள் அவர்களை" என்றார் கண்ணன் புன்முறுவல் பூத்தபடியே. நாரதர் அவர்களது துயரத்துக்கான காரணத்தைக் கேட்டதற்கு அவர்கள், "நாங்களெல்லாம் ராக தேவதைகள்...கல்யாணி, வசந்தா, ஜகன்மோகினி என்று பலர் இருக்கிறோம். ராகங்களை சாஸ்திரீய முறைப்படி சரியாகப் பாடாவிட்டால் எங்களைப் புண்படுத்தி விடும். சுருதி, ஸ்வரம், கிரமம், மூர்ச்சனை, அலங்காரம் என்றபடி சுத்தமாகப் பாட வேண்டும். நாரதன் என்றொரு பாடகன் எங்களுக்கான ராகங்களைச் சரியாகப் பாடாததால் நாங்கள் இத்தகைய சித்திரவதைகளுக்குள்ளானோம்...... கிருஷ்ணா! எங்களைக் காப்பாற்றுவீர்களா?" என்று கிருஷ்ணனிடம் சரண் புகுந்தனர்.


நாரதர் கண்ணனைப் பார்த்தார். கண்ணன் தமக்கே உரித்தான ஜகன்மோகனப் புன்னகையை உதிர்த்தார். உடனே குழலை எடுத்துக் கல்யாணி, வசந்தா முதலிய ராகங்களை முறையோடு வாசித்தார். பிரும்ம லோகத்திலிருந்து கலைவாணியும் சில ராகங்களை வீணையில் இசைத்தாள். ராக தேவதைகள் காயங்கள், புண்கள் குணமாகி, பூரண அழகோடும் பொலிவோடும், புது பலத்தோடும் விளங்கினர்.

"கண்ணா! இப்போது புரிந்து கொண்டேன் நான்.... மமதையால் மதியிழந்து மயங்கியிருந்த எனக்குப் புத்தி புகட்டி விட்டீர்கள். தங்கள் வேணுகானத்தையும் கலைவாணியின் வீணை இசையின் சிறப்பையும் அனுபவிக்கும்போது எனது இசை எம்மாத்திரம்.....தங்களிடம் தேர்ச்சி பெற்று ஓரளவு பூரணத்துவம் பெற்றபின்தான் பரமசிவனிடம் பாடிக் காண்பிக்கப் போவேன். இப்பொழுதே திரும்பலாம்" என்றார் நாரதர்.

டாக்டர் (தம்மிடம் அடிக்கடி வந்து வைத்தியம் பார்த்துக் கொண்ட நோயாளிப் பெண்மணியிடம்): ரொம்ப நாட்களாக நீங்க கொடுக்க வேண்டிய 'பில்' பாக்கியாயிருக்கு! நீங்க உடனே கொடுக்கலேன்னா உங்கள் வயது, உங்கள் நிறை, உங்கள் வியாதி எல்லாவற்றையும் உங்கள் பக்கத்து வீட்டுக்காரிக்குச் சொல்லி விடுவேன்!

ஸ்டாண்டர்ட் ஹெரால்ட்

கார் சவாரியில் ஒரு புது அனுபவம்



கீழ்க்கண்ட போற்றத்தக்க வசதிகளுடன் கூடியது

- 25 அடி வட்டத்திற்குள் திருப்ப முடியும்
- ஒவ்வொரு சக்கரத்திற்கும் தனித்தனி சஸ்பென்ஷன் (Suspension) இணைப்பு இருக்கிறது (சுலபமாக அபாயமின்றி திருப்பலாம். ஸ்தானில் நல்ல பிடிப்பு உண்டு. முன் சக்கரத்திற்கு ஏற்படும் அதிர்ச்சி, முன் சக்கரத்தின் ஸ்ப்ரிங்குகளிலேயே தாங்கிக்கொள்ளப்படுவதால், வண்டியின் பின்புறம் அதிர்ச்சியோ, ஆட்டமோ அடையாது.)
- ஃகு கட்டிறுவான சாஸிஸ் (Chassis) (மிக உறுதியான கார் அமைப்பு)
- 93% வெளிப்பார்வை வசதி.

STANDARD herald

ஸ்டாண்டர்ட் ஹெரால்ட்

உறுதியான, எழில் மிகுந்த கார்


STANDARD


தயாரிப்பாளர்கள் :

ஸ்டாண்டர்ட் மோட்டார் ப்ராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்
சென்னை-2

விநியோகஸ்தர்கள் :

யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) பிரைவேட் லிமிடெட்
சென்னை — உதகை
யூனிகான் (பெங்களூர்) பிரைவேட் லிமிடெட், பெங்களூர்





கலியாணக் கடிதம்

பத்மாவதி

அன்புள்ள ஜக்கு,

உனக்கு இந்த அக்காவின் ஆசீர்வாதம் என்றும் உண்டு. புண்ணியமாகப் போகட்டுமப்பா... இனிமேல் உன் கலியாணப் பேச்சை நான் எடுக்கவே மாட்டேன்.... இதென்ன இந்தத் திடீர் மாற்றம் என்று விழிக்கிறாயா ? சொல்லுகிறேன்; கேள். உனக்கோ பெரிய வேலையாகி விட்டது. வயதும் கலியாண வயது. இருபத்தி ஏழு! பெண்ணைப் பெற்றவர்கள் வலை வீசுகிறார்கள். தவறாக அவசரப்பட்டு ஏதாவது ஒரு தூண்டிலில் மாட்டிக் கொள்ளப் போகிறாயே என்று அனுதாபப்பட்டதுடன் நிறுத்திக் கொண்டேனா! "அப்பா அம்மா இல்லா விட்டால் என்னடா? அக்கா நான் இருக்கிறேன். உனக்குக் 'கிளி' மாதிரி ஒரு பெண்ணைப் பார்த்துக் கலியாணம் செய்துவைக்க" என்று சவால் விட்டேனல்லவா? இப்பொழுது மாட்டிக் கொண்டு விழிக்கிறேன்.

அடேய்..... ஜக்கு! உனக்கு நான் பெண் தேடப் புறப்பட்டதே ஒரு பெரிய புராணம். உன் அத்திம்பேரும் என் சபதத்தை நிறைவேற்ற ஆவன செய்வதாக உறுதிமொழி கூறியிருக்கக் கூடாதா? நான் எது சொன்னாலும் எதிரிடையாகச் சொல்லிச் செய்ய மாட்டேன் என்று மறுப்பவர், மச்சினனுக்குக் கல்யாணம், பெண் பார்க்க வேண்டும் என்றதும் என்னவோ தமக்குத்தான் பெண் பார்க்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டவர் போல மிகுந்த உற்சாகத்துடன் கிளம்பி விட்டார்.

அன்றிலிருந்து தினமும் தவறாமல் கடற்கரைக்கு அழைத்துக் கொண்டு போக ஆரம்பித்து விட்டார். அங்குதான் விதம் விதமாகப் பெண்கள்.... காலேஜ் குமாரிகள் வருவார்களாம். பார்த்துக் கண்ணுக்கு அழகாக இருக்கும் பெண்ணைத் தேர்ந்தெடுக்கலாம் என்று காரணம் சொல்லி, கடற்கரை நடைபாதைத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு குறுக்கும் நெடுக்குமாக நடை பயிலும் பெண்களை யெல்லாம் உற்று உற்றுப் பார்க்க ஆரம்பித்தார். கண்றாவி ! என்ன செய்வது ? எல்லாம் உனக்காக நான் பொறுத்துக்கொண்டேன், போயேன்! ஒரு மாதமாக இப்படி உற்றுப் பார்த்ததில் ஓர் அழகான பெண்ணைத் தேர்ந்தெடுத்தோம். "தினமும் அவள் ஓர் அடுக்குப் புத்தகங்களுடன் கல்லூரியிலிருந்து நடந்து வரும் அழகே தனி அழகு." இது இவருடைய வாக்கு. பிறகு அந்தப் பெண்ணின் வீட்டு விலாசம் கண்டுபிடிக்க நான் செய்த யுக்திகளைப் பற்றி இங்கே விவரிக்கப் போவதில்லை. உன் அத்திம்பேர் பேச்சைக் கேட்டு முந்திரிக்கொட்டை மாதிரி பிள்ளை வீட்டுக்காரியான நான் வலுவில் சென்று பெண்ணின் ஜாதகம் கேட்டு, அதனால் அடைந்த அவமானத்தை உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்? வெட்கக்கேடு. அந்தப் பெண்ணுக்குக் கலியாணமாகி ஒரு குழந்தையும் இருக்கிறதடா! வீட்டில் குழந்தையைப் பார்த்துக் கொள்ள ஆள் இருப்பதால் இவள் கல்லூரியைப் பார்க்கக் கிளம்பி விட்டாள். போதுமா தலை இறக்கம் ! எனக்குத் தாங்கவில்லை. "நல்ல யோசனை கூறினீர்கள்" என்று பொரிந்து தள்ளி விட்டேன், இவரிடம்?

கலியாணமாகாத பெண்களைத் தேர்ந்தெடுக்க அடுத்த யோசனை.... 'தினப் பத்திரிகையில் விளம்பரம் கொடுப்போம். பிறகு பாரேன், வேடிக்கையை?' என்று சொன்னவர் அதன்படி பத்திரிகையில் விளம்பரமும் கொடுத்து விட்டார். வேடிக்கையா? அடடே! அதுவே ஒருபெரிய பிரளயக் கூத்தாக அல்லவா போய் விட்டது! அடே, பதறுதேடா! கேள், சொல்லுகிறேன். விளம்பரம் போட்டாரா? இரண்டு நாட்கள் கழித்துத் தபால்காரர் ஒரு பையைக் கொண்டு வந்து வீதியில் இறக்கி அதிலிருந்து பொறுக்கி நான்கு கடிதங்களைக் கையில் எடுத்துக் கொண்டு, "சீக்கிரம் இந்தப் பையிலுள்ள கடிதங்களைக் கொட்டிக் கொண்டு பையைக் கொடுங்கள். அதற்குள் இந்த நாலு கடிதங்களையும் அடுத்த தெருவில் கொடுத்து விட்டு வருகிறேன்" என்று கிளம்பி விட்டார். நான் என்னடா செய்வேன் ஜக்கு? ஒண்டி ஆள். உன் அத்திம்பேருக்கு நாலு கடிதங்கள் முழுசாக வந்து பார்த்ததில்லை. ஒரு பை நிறையக் கடிதாசுகள் என்றதும் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. அவசரத்தில் மேஜைக்கடியில் இருந்த குப்பைக் கூடையை எடுத்து அதனுள் கடிதங்களைக் கொட்டிக் கொண்டு பையைக் காலி செய்தேன். குப்பைக் கூடையில்தான் கொட்டினேனே, உடனே ஒழுங்காக அதை அதன் இடத்தில் வைக்க மாட்டேனோ! பதற்றத்தில் அதைத் தூக்கி மேஜை மேல் வைக்க....வந்தது வினை ! சாயந்திரம் இவர் வந்ததும் பக்கத்து வீட்டுச் சாம்புவையும் ஒத்தாசைக்கு வைத்துக் கொண்டு அவ்வளவு கடிதங்களையும் பிரித்துப் படிக்க வேண்டியதாயிற்று. 'கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது' என்ற கதையாகி விட்டது. நான் முதலில் எடுத்த கடிதத்தில் என்ன எழுதியிருந்தது என்கிறாய்? வெட்கக்கேட்டை உன்னிடம் எப்படிச் சொல்ல? சொல்லாமல் விடவும் மனம்

வரவில்லை. சரி, சொல்லித் தொலைக்கிறேன். அதில் ஒரு பெண்ணைப் பெற்றவர் உருக்கமாக உன் அத்திம்பேரின் பெயர், வேலை விவரம் எல்லாம் சரியாகக் குறிப்பிட்டுத் தம் பெண்ணை அவருக்கு மணம் செய்து கொடுக்கத் தயாராக இருப்பதாக எழுதி யிருந்தார்!

'ஓஹோ! இப்பொழுதுதானே புரிந்தது உங்களுடைய உற்சாகத்துக்குக் காரணம்' என்று சத்தம் போட்டேன் பார்.... உன் அத்திம்பேர் நடுநடுங்கி விட்டார். எனக்கு வந்த ஆத்திரத்தில் இரண்டு கைநிறைய கடிதங்களை அள்ளி வீதிச் சாக்கடையில் வீசி எறிந்தேன். அவை அடித்துக் கொண்டு போவதைப் பார்த்துச் சினிமாவில் பைத்தியம் பிடித்த கதாநாயகி 'சிரிப்பது போல, ஹா!.....ஹா!.....ஹ.....ஹா... என்று சிரித்தேன். மற்றக் கடிதங்களுக்கும் அந்தக் கதி ஏற்பட்டிருக்கும். அதற்குள் அந்தச் சாம்புப் பயல் குறுக்கே வந்து விட்டான். பிறகு இவர் என் கையிலிருந்த கடிதத்தைப் பிடுங்கிப் படித்து விட்டு, இதில் ஏதோ தவறு இருக்கிறதென்றும், அந்தக் கடிதம் விளம்பரத்தைப் பார்த்து வந்ததல்ல என்றும், யாரோ இரண்டும் கெட்டான் மனுஷன், கலியாணத்துக்குப் பிள்ளை இருக்கிறான் என்று கேள்விப்பட்டு விவரமாக விசாரிக்காமல், தம்மை மணமகனாக எண்ணிக் கொண்டு கடிதம் எழுதியிருப்பதாகவும், என்னவெல்லாமோ சமாதானம் சொன்னார். அதை நிரூபிக்கிறேன் என்று மற்றக் கடிதங்களைக் காட்டினார். நல்லவேளையாக அதிலெல்லாம் உன்னைத்தான் வரனாக எண்ணி எழுதப்பட்டிருந்தன. என்னுடைய சந்தேகத்தினால் நல்ல நல்ல ஜாதகங்களெல்லாம் சாக்கடையில் அடித்துக் கொண்டு போய் விட்டதாகப் புலம்பினார். எனக்கென்னமோ இன்னும் சந்தேகம்தான். அடித்துக் கொண்டு போன கடிதங்களெல்லாம் இவருக்கு வந்ததாகத்தான் இருக்கும் என்று எனக்குத் தெரியாதாடா. இந்த ஆண்களின் சபல புத்தி..... அடடா! நீயும் ஓர் ஆண் என்பதை மறந்து உனக்கு இப்படி எழுதுகிறேனே.... சரி, சரி! அதை இத்துடன் விட்டு விடுவோம்.

ஒரு விதமாக இந்தப் பிரளயம் அடங்கியதும் மற்றக் கடிதங்களைப் பார்த்து ஜாதகங்களைப் பொறுக்கி, ஜாதகம் பொருத்தமிருப்பவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு தேதியைக் குறிப்பிட்டு நாங்கள் பெண் பார்க்க வருவதாக எழுதி விட்டோம்.

உள்ளூரில் பத்துப் பெண்களையும், வெளியூரில் எட்டுப் பெண்களையும் இது வரையில் பார்த்து விட்டோம். எல்லாம் ஒவ்வொரு கதை போலத்தான் நடந்தது. எதை எழுத? எதை விட்டு விட? எனக்கு ஒரே குழப்பமாக இருக்கிறது. மாதிரிக்கு நான்கு எழுதிவிட்டு நிறுத்திக் கொள்ளுகிறேன்.

ஒரு பெண் கிளி என்றால் அசல் கிளி போல் இருந்தாள். இன்னொரு பெண், 'பறவைகளில் அவள் வெண் புறா'' என்று சினிமாக் கதாநாயகன் எவனோ பாடுவானே, அது போல, 'பறவைகளில் அவள் காக்காய்'' என்று நீ பாடும்படி இருந்தாள். நாங்கள் பார்த்த மற்றொரு பெண் மகா அதிருஷ்டக்காரியடா. எப்படித் தெரியும் என்று கேட்கிறாயா? அதுதான் ஒன்னரைக் கண்ணாக இருந்தாளே! எங்களுக்குச் சிறிது சந்தேகம் இருந்தாலும், அவள் தகப்பனார் ஒன்னரைக் கண் மிகவும் 'அதிருஷ்டம்' என்று சொல்லியதும் ஊர்ஜிதமாகி விட்டது. இவருக்கு அதிர்ஷ்டத்தை விட மனமில்லை. நான் ஒரே படியாக, ''என் தம்பி அதிர்ஷ்டக் கட்டையாயிற்றே. இந்த அதிருஷ்டக்காரி கிடைப்பாளா?'' என்று சொல்லிச் சமாதானம் செய்து வைத்தேன்.

இன்னொர் இடத்தில் நடந்த கூத்தைக் கேளேன்! அந்தப் பெண்ணுக்குத் தந்தை தம் மனைவி, பெண்ணிடம் 'கலியாணப் பையன் வரவில்லை. அவனுடைய அக்காவும் அத்திம்பேரும்தான் வந்திருக்கிறார்கள்' என்று சொல்லியிருக்க மாட்டாரோ? சமர்த்து! சொல்லவில்லை. பாவம், அந்தப் பெண்ணும் அந்த அம்மாவும் 'உன் அத்திம்பேரைத்தான் கலியாணப்பிள்ளை' என்று எண்ணிக்கொண்டு உற்று உற்றுப் பார்த்தார்கள். எல்லோருக்கும் பித்தளை டம்ளரில் காப்பி கொடுத்து விட்டு அவருக்கு விசேஷமாக வெள்ளி டம்ளரில் கொண்டு வந்து வைத்து விட்டுப் பெண், கடைக்கண்ணால் பார்த்தாளே ஒரு பார்வை! எனக்குத் 'திக்' என்றது. இவரும் அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டு சட்டைக் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டார். எனக்கு வந்ததே ஆத்திரம். மெதுவாகப் பெண்ணைக் கூப்பிட்டு, ''இவர் வந்து..... என்....'' என்று சொல்லி முடிப்பதற்குள் அந்த அசட்டுப் பெண் அவசரமாக, ''தெரியும். அம்மா சொன்னாள்'' என்று சொல்லி விட்டு நான் வாயைத் திறப்பதற்குள் ஆர்மோனியப் பெட்டியை இழுத்து வைத்துக் கொண்டு, 'உன்னைக் கண்டு மயங்காத பேர்களுண்டோ?' என்று பாட ஆரம்பித்துவிட்டாள். 'நெற்றிக் கண் இல்லையே' என்று அன்றுதான் முதல் தடவையாக வருத்தப்பட்டேன். நான் உருட்டி விழித்ததைப் பார்த்த பிறகுதான் உன் அத்திம்பேர் மெதுவாக எழுந்து அந்த அசட்டு மனிதரின் காதில் விஷயத்தைப் போட்டார். பிறகு அவர் உள்ளே ஓடி அந்த அம்மாள் காதில் குசுகுசுக்க.... அம்மாள் வில் போலப் புறப்பட்டு 'கண்டு மயக்கத்தில்' இருந்த பெண் காதில் கிசுகிசுக்க....நான் ஏதோ பெரிய குற்றத்தைச் செய்து விட்டதைப் போல் பெண் என்னைப் பார்த்து முகத்தை ஒடித்துக் கொண்டு எழுந்து உள்ளே ஓட..... நாங்கள் எழுந்து வெளியே ஓடினோம்.

இவருக்கு உள்ளுக்குள் ஒரே பெருமை, தம்மைப் பார்த்து ஒரு பெண் மயங்கிற்று என்று!.... 'ஏமாந்து போய் மயங்கி விட்டது என்னைப் போல. இனி மேல் மயங்கச் சொல்லுங்கள். பார்க்கலாம்' என்று சொன்னேன். ஏன் பதில் பேசுகிறார் !

இன்னொரு பெரிய இடம். மிகவும் நாகரிகமான பங்களா. கார் வசதி உண்டு. குறிப்பிட்ட நேரத்தில் போய்ச் சேர்ந்தோம். பங்களாவுக்கு வாசலில் கூர்க்கா. தோட்டத்தில் அல்சேஷியன் நாய்...... நாய் என்று சொன்னேன்..... இல்லை நாய்கள். உள்ளே வெல்வெட் சோபாக்கள். ஆனால் அதில் யாரும் உட்கார முடியாது. ஏனென்று கேட்கிறாயா? சோபாவுக்கு இரண்டோ அல்லது மூன்றோ வரிசையாக எண்ணவில்லை..... குண்டு குண்டாக 'பொமரேனியன்' நாய்களும்,

குண்டு குண்டாகப் பூனைகளும் சோகுசாகப் படுத்திருந்தன. நாங்கள் உள்ளே நுழைந்ததும் ஓரக்கண்ணால் பார்த்து விட்டுத் திரும்பவும் தூங்க ஆரம்பித்து விட்டன. நாங்கள் ஒரு மூலையில் போட்டிருந்த பெஞ்சியில்... நாய்கள் தீண்டாத மர பெஞ்சியில்.... உட்கார்ந்து கொண்டோம். வேலைக்காரன் வந்து, 'அம்மா வருவார்கள்' என்று அறிவித்து விட்டுப் போனான். அரை மணி நேரம் கழித்து. ''ஹல்லோ! ஹவ் டூ யூ டூ?'' என்று கேட்டுக் கொண்டு ஓர் ஒடிசலான பெண் நைலான் புடவையுடன் வெளியே வந்தாள். அப்படியே நவநாகரிகத்தின் அவதாரம்! எனக்கு நமஸ்தே சொன்னவள் நேராக அவ..ம் போய்க் கையைப் பிடித்துக்கொண்டு குலுக்க ஆரம்பித்து விட்டாள். பெண் பார்க்க வருபவர்களுடன் நேரிலே பேசிப் பழக வேண்டும் என்று அவள் அப்பாவும் அம்மாவும் வெளியில் போய் விட்டார்களாம்.... சாதாரணமாகப் பிள்ளை — அதாவது கலியாணப் பிள்ளை மாத்திரம் வருவது வழக்கமாம். இதுதான் முதல் தடவை பிள்ளையைத் தவிர்த்து, பிள்ளைக்கு உறவினர்கள் பெண் பார்க்க வருவதாம். 'அதனால் என்ன, பரவாயில்லை. நீங்கள் போய் வேறு ஒரு நாள் பிள்ளையை மட்டும் தனியாக அனுப்புங்கள்' என்றாளே! ஏண்டா, ரகு! நிஜமாகக் கேட்கிறேன். நான் அனுப்பினாலும் நீ தனியாகப் போவாயாடா? அவ்வளவு தைரியம் உனக்கு உண்டாடா? அப்புறம் கேளடா, பீடிக் கதையை! 'பெண் பார்க்க வருபவர்களுக்குச் சொஜ்ஜி...பஜ்ஜி கொடுப்பது சுத்த நான்சென்ஸ்' என்று சொல்லி, 'பாய்...!' என்று கையைத் தட்டினாள். ஒரு பட்லர் கேக்கும் ஐஸ் கிரீமும் கொண்டு வந்தான். அவள் பேசிய விதமும், சிரித்த சிரிப்பும், அடித்த கொட்டமும்......அடடா! சகிக்க முடியவில்லை.


''ஆமாம், உன்னைப் போல் கட்டுப்பெட்டியாக இருக்க வேண்டுமாக்கும்? சகஜமாகப் பழகினால் உங்களுக்குப் பொறாமை...... அதை விடப் பொறாமை பெண் உன்னைவிட அழகாக இருக்கிறாள் என்பதால்'' என்று என்னவெல்லாமோ உளறினாரடா. சொன்னதெல்லாம் தப்பு என்று அவர் மன்னிப்புக் கேட்கும் வரை நான்கு நாட்கள் நான் அவருடன் பேசவே இல்லை போயேன்! உன் கலியாண விஷயம் வந்தாலும் வந்தது. பொழுது விடிந்து பொழுது போனால் எங்களுக்குள் சண்டைதான்.

இன்னொரு வீட்டில் தகப்பனார் பாவம், ''தன் பெண் கச்சேரி செய்யும் விதத்தில் பாடுவாள்'' என்று சொல்லி இரண்டு மணி நேரம் பெண்ணைப் பாடச் சொல்லி எங்களைத் தலையாட்ட வைத்து விட்டார். கழுத்துச் சுளுக்கிக் கொண்டு இரண்டு நாட்கள் இரவு இவர் தூக்கமில்லாமல் கஷ்டப்பட, நானும் தூக்கம் கெட விழித்திருந்து தைலம் தடவ வேண்டியதாயிற்று.

பாவம் ஒரு பெண்! நாங்கள் வீட்டில் நுழைந்ததுமே அவசரமாக என்னிடம் வந்து ரகசியமாக ஒரு காகிதத்தைக் கையில் திணித்தது..... மெதுவாகப் பிரித்துப் பார்த்தால், 'தயவுசெய்து தன்னைப் பார்த்துச் சம்மதம் தெரிவிக்க வேண்டாமென்றும், தான் தனது அத்தானையே காதலிப்பதாகவும்' எழுதியிருந்தது. என்ன கண்றாவிடா இது! இவளைப் பார்த்து யாராவது சம்மதம் தெரிவிப்பார்களோ? 'பாவம் அவள் அத்தான்' என்று பரிதாபப்பட்டுக் கொண்டு வெளியில் வந்து விட்டோம்.

இன்னோர் இடத்தில் நாங்கள் போனதுமே பெண்ணின் தாயார் பெட்டி பெட்டியாகத் திறந்து பெண்ணுக்குச் செய்து வைத்திருக்கும் வைர நகைகளைக் காட்ட ஆரம்பித்து விட்டாள்! அப்பப்பா! கண்ணைப் பறிக்கும் ஜொலிப்பு! நான் மயங்கியே விட்டேன். வெகு நேரம் பெண்ணை எங்கள் கண்ணில் காட்டவேயில்லை. நான் மிகவும் வற்புறுத்திக் கேட்ட பிறகு பெண்ணைக் கூப்பிட்டனர். ஏன் நகைகளை முதலில் காட்டினார்கள் என்று புரிந்து விட்டது.

ஒரே ஒரு இடம் எனக்கு ரொம்பப் பிடித்



திரைத் துணுக்குகள்

தந்தையும் நானே, தனயனும் நானே !

தனக்குத் தானே தந்தையாக நடித்துக் கொண்ட பெருமை இந்த நடிகர்களுக்கு உண்டு. அப்படி நடித்த படம் எதுவெனக் கூற முடியுமா ?

1 சிவாஜி கணேசன்
2. எம். ஜி. ராமசந்திரன்
3. ஜெமினி கணேஷ்
4. பி. யூ. சின்னப்பா
5. என். எஸ். கிருஷ்ணன்
6. நாகேஷ்

விடை:
1. அன்னையின் ஆணை
2. அரசிளங்குமரி
3. ஆடிப்பெருக்கு
4. மங்கையர்க்கரசி
5. ..
6. பணக்காரக் குடும்பம்

சொல்லுங்கள் பார்க்கலாம் ?

1. ஒரு நடிகரின் பெயரும், நடிகையின் பெயரும் ஒன்றே! அவரும் இருவரும் ஒரு திரைப் படத்தில் நடித்திருக்கின்றனர் ! யார் இந்த நடிகை—நடிகர்?
2. மாஜி லெப்டினன்ட் கவர்னர் பெயரில் ஒரு திரைப் படம் வெளியாகியுள்ளது. அப்பெயரென்ன ?
3. ஒரு திரைப் படத்தின் பெயரில் மற்றும் இரு திரைப் படங்களின் பெயரும் ஒளிந் துள்ளது. அது என்ன ?

விடை: 1. எம். ஆர். ராதா, குமாரி ராதா
படம்: நீதிக்குப்பின் பாசம்
2. சந்தானம்
3. மாமியார் மெச்சிய மருமகள்

திரை வாகனங்கள்

திரைப் படங்களில் நகைச்சுவை ததும்பும் வண்ணம் கீழ்க் கண்ட பாடல்களில் வாகனங் களைப் பற்றிப் பாடியுள்ளனர். இப்பாடல்கள் எந்தப் படத்தில் வருகின்றன என்று கண்டு பிடிக்க முடியுமா?

1. வண்டி போகுது — வண்டி போகுதே ஏறுகள் பூட்டி...........
2. ஓடி வரதும் ரயில் — உங்கள் ஊரில் நிற்காது மெயில்......
3. சைக்கிள் ஓட்டும் ஆசை மச்சான் சாலே நமது இல்லே மச்சான்.....
4. காரு — சவாரி ஜோரு....

விடைகள் :
1. காலம் மாறிப் போச்சு
2. வள்ளியின் செல்வன்
3. முதலாளி
4. விடிவெள்ளி

இருந்ததடா ஜக்கு! பணம், சொத்து, அழகு, படிப்பு எல்லாம் அமைந்திருந்தன. ஆனால்... ஆனால்.... அட! அவசரக் குடுக்கை. கொஞ்சம் பொறுத்துக் கொள்ளேன், சொல்லு கிறேன். நீ ஆசையாக மனைவியை அழைத்துக் கொண்டு போவதற்கென்று ஸ்கூட்டர் வாங்கி யிருக்கிறாயே! அதில் பின்னால் அவள் ஏறினால் குறைந்தது இரண்டு செகண்ட் போதும்; ஒன்று நீ தூக்கி எறியப்படுவதற்கு. அல்லது சக்கரங்கள் பூமியில் அமிழ்ந்து சிக்கிக் கொள்வ தற்கு; அல்லது ஸ்கூட்டர் தரை மட்ட மாவதற்கு !

பெண்ணின் தகப்பனார், 'பெண் சிறிது செல்லமாக வளர்ந்து விட்டாள். தேகப் பயிற்சி செய்தால் சரியாகி விடுவாள்' என்று சமாதானம் சொல்லுகிறார். நீ என்ன சொல்லுகிறாய் ? முதலில் நீ இருக்கும் வீட்டில் ஒரு கிணறு வெட்ட உன் மாமனா ரிடம் பணம் கேட்க வேண்டும்.' கிணறு ! எதுக்கு என்று கேட்கிறாயா?..... அதாவது தினம் நூறு குடம் வீதம் தண்ணீர் இழுத் தால் போதுமானது. ஐந்தே வருடங்களில் அவள் உடல் பாதியாக இளைத்து விடும். அதற்கு நான் உத்தரவாதம்.

பெண்ணைப் பிறந்து விட்டு மற்றப் பெண் களைப் பழிப்பது பாவமடா, ஜக்கு! உன்னால் எனக்கு இந்தப் பாப மூட்டையும் சேர்ந்திருக் கிறது. இதற்கு எந்த நதியில் போய் ஸ்நானம் செய்வேனோ, தெரியவில்லை!

மொத்தத்தில் நான் வந்த முடிவு என்ன தெரியுமோ? பிரமன் அவசரத்தில் உனக் கென்று ஒரு பெண்ணைப் படைக்க மறந்து விட்டான் என்பதே — உனக்குப் பெண் தேடப் போய் துக்கம், வெட்கம், பொல்லாப் பும் வாங்கிக் கட்டிக் கொண்டாகி விட்டது. இது போதும் ஏழேழு ஜன்மங்களுக்கு!

இத்துடன் எங்களுக்கான செலவுக்கு—அதா வது ரயில் சார்ஜ், டாக்ஸி சார்ஜ்...சொஜ்ஜி, பஜ்ஜி சாப்பிட்டு ஏற்பட்ட வயிற்று வலிக்கான மாத்திரை..... தூக்கமின்மை மாத்திரை முத லியவைகளுக்கான 'பில்லை' அடக்கம் செய் திருக்கிறேன். பதில் பேசாமல் அனுப்பி விட்டு மறு காரியம் பார் !

ஜக்கு! என்னைத் தவிர உனக்கு யாரடா இருக்கிறார்கள்? நானே உனக்கு முழு சம்மதம் தருகிறேன். இந்த உலகத்தில் எந்த மூலையில் உனக்குப் பிடித்தவள் இருந்தாலும் அழைத் துக் கொண்டு வந்து கல்யாணம் செய்து கொள். ஏன் என்று ஒரு வார்த்தை கேட்க மாட்டேன். ஒரு கடிதம் போடு. நாத்த னார் லட்சணமா தாலி முடியறதுக்கு வந்து சேருகிறேன் — அதாவது தாலி முடியவ தாக இருந்தால் !

இப்படிக்கு,
உனக்குப் பெண் தேடி
அலுத்துச் சலித்துப்போன
உன் அக்காள் அம்புஜம்

பி. கு. : அடேய், ஜகந்நாதா! உனக்குக் கல்யாணம் நிச்சயமாகி விடும் என்று நிச்ச யித்துக் கொண்டு புடவைக்கு ஆர்டர் கொடுத்திருந்தேன். அதுவும் வந்து விட் டது. எப்படித் திருப்பிக் கொடுப்பது? அதற்கான பில்லையும் இத்துடன் வைத்தி ருக்கிறேன். மறக்காமல் உடனே பணம் அனுப்பு. அம்புஜம்.

‘அசௌகரியமான நாட்களில்’ ராதா வலியால் அவதிப்பட்டாள்



உலகப் புகழ் பெற்ற வலி நிவாரணியான ஸாரிடான் துரிதமாக, கெடுதல் எதுவுமின்றி, நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. தலைவலி, பல்வலி, உடம்பு வலி, ஜலதோஷம், ஜுரம் வரும்போலிருப்பது மற்றும் பொதுவான உபாதைகளிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். எப்போதும் ஸாரிடானை நம்புங்கள்.

ஒரே ஒரு

ஸாரிடான் ‘ரோஷ்’

ஸாரிடான் ஒரே வில்லை போதும்
ஒரு வில்லை 13 பைசா


வலியைப் போக்குகிறது, ஆசுவாசப் படுத்துகிறது, புத்துணர்ச்சி யூட்டுகிறது

‘ரோஷ்’ தயாரிப்பு   ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்   JWT-VT-1049 A

லண்டனில் ஒரு மூர்மார்க்கெட்

ஜூன் ஜூலை மாதங்களில் சென்னை மூர் மார்க்கெட்டை ஒட்டி மேற்குப் பகுதியில் உள்ள மைதானத்தில் மாலை வேளைகளில் போகிறவர்கள் அங்கு ஏதோ மாணவர் மகாநாடோ, சம்மேளனமோ நடக்கிறது என்று நினைத்துக் கொள்ளும் அளவுக்குச் சிறுவர்கள் தலைகள் அங்கு காணப்படும். அந்தக் கூட்டத்தில் புகுந்து கவனித்தால் அங்கு பழைய புஸ்தக வியாபாரம் மும்முரமாக நடந்து கொண்டிருப்பதைக் காணலாம். ஒவ்வொரு மாணவனும் தன் கடந்த வருடப் புத்தகங்களைக் கொண்டு வந்து கடை பரப்பிக் கொண்டு உட்கார்ந்து விடுவான். அவைகளை விற்றுத் தனக்கு வேண்டிய இந்த வருடப் புத்தகங்களை வாங்க வேண்டுமே! பழைய புத்தகங்களை வாங்க விரும்பும் மாணவர்களும், பெற்றோர்களும் குழுமியிருப்பார்கள்.

ஏறத்தாழ இந்த ரீதியில் ஆரம்பமானது தான் உலகத்திலேயே இன்று பெரிய பழைய புதிய புத்தகக் கடை என்று பெயர் பெற்று விளங்கும் ஃபாயில் ஸ்தாபனம் (W. C. Foyle Ltd.) நாற்பது லட்சங்களுக்கு மேலான புத்தகங்களைக் கொண்ட இந்த ஸ்தாபனம் ஆரம்பமான விதமே விசித்திரமானது.



1904ம் ஆண்டில் ஒரு மளிகைக் கடைக்காரரின் குமாரர்களான வில்லியம் ஃபாயிலும் கில்பர்ட் ஃபாயிலும் சர்க்கார் உத்தியோகங்களில் புக விரும்பி அதற்கான பரீட்சைப் புத்தகங்களை வாங்கிப் படிக்க ஆரம்பித்தார்கள். பரீட்சையும் எழுதினார்கள். பரீட்சை கோவிந்தா வாகி விட்டது. அதற்காக வாங்கிய புத்தகங்களை விற்கக் கல்வித்துறை சஞ்சிகை ஒன்றில் மலிவான விளம்பரம் ஒன்று கொடுத்தார்கள். அதன் விளைவாக அவர்களிடமிருந்த புத்தகங்கள் கொஞ்சம் லாபத்துடனேயே கைமாறின. உடனே இந்த வியாபாரத்தில் இறங்க முடிவு செய்தனர்.


அவ்வளவுதான்! கைக்குக் கிடைத்த பழைய புத்தகங்களை வாங்கி விற்க ஆரம்பித்தார்கள். அவர்கள் வீட்டுச் சமையலறையில் 'உலகத்திலேயே சிறந்த புத்தகக் கடை' என்ற போர்டும் கையால் எழுதி மாட்டப்பட்டது. நாளடைவில் வீட்டில் எல்லா இடங்களிலுமே பழைய புத்தகங்களின் நெடி வீசத் தொடங்கியது. இனி வீட்டில் இடமில்லை என்ற நிலை வந்தபோது கவனிப்பாரற்றுக் கிடந்த ஒரு காலி கொட்டகையை வாடகைக்குப் பிடித்தார்கள். கடைசியாக இந்த ஸ்தாபனம் இரண்டு பிரதான தெருக்களை இணைக்கும் பகுதியில் லண்டன் நகரில் பதினொரு சொந்தக் கட்டிடங்களைச் சேர்த்தாற்போல் கொண்டதாக விளங்குகிறது. உள்ளே இருக்கும் அத்தனை பகுதிகளையும் புத்தக ஷெல்புகளையும் ஒரு நபர் விடாமல் பார்க்க வேண்டுமானாலும் சுமார் நாற்பது மைல் தூரம் சுற்றி நடந்தாக வேண்டும். ஆயிரக்கணக்கான பழம் புத்தக வேட்டைக்காரர்கள், சில புத்தகத் திருடர்கள், ஒரு கண்காணிப்பாளர், அறுநூறு விற்பனை சிப்பந்திகள் எல்லோருமாகப் பகல் நேரம் முழுவதும் இந்த ஸ்தாபனக் கட்டிடங்களில் வியாபித்திருக்கிறார்கள்.

ஃபாயில் ஸ்தாபனம் உள்ளே வருபவர்கள் ஏதாவது புத்தகம் வாங்க வேண்டுமென்று வற்புறுத்துவதில்லை. ஆகையால் கல்லூரி மாணவர்கள் அந்தப் புத்தகசாலையைத் தங்கள் ஆராய்ச்சிக் கூடமாகவே மாற்றிக் கொண்டு விடுகிறார்கள்.

'மனச்சாட்சி' மணியார்டர்கள் பல இந்த ஸ்தாபனத்துக்குத் தினம் வருகின்றன. இலவசமாகப் பல புத்தகங்களை இங்கு வந்து உட்கார்ந்து படித்துப் பரீட்சைகளில் வெற்றி கண்டவர்கள், அவசரத் தேவைக்காகப் புத்தகங்களை அபேஸ் பண்ணிக்கொண்டு போனவர்கள் எல்லோரும் வசதி ஏற்பட்டவுடன் இயன்ற பணத்தை அனுப்பிவிடுகிறார்கள். ஓர் ஆசாமி பல ரயில்வே பார்சல் ரசீதுகளை அனுப்பியிருந்தான். அந்தப் பார்சல்களில் அவன் பல காலமாகத் திருடிக்கொண்டு போய்ப் படித்து முடித்த எழுநூறு புத்தகங்கள் இருந்தனவாம். ஒரு பணக்கார மாது இருநூற்றி ஐம்பது பவுன்களுக்கு ஒரு செக்கையும் வைத்துக் கடிதம் எழுதியிருந்தாள். இதுவரை பிரசுரிக்கப்பட்டிருக்கும் புத்தகங்களில் மிக உயர்ந்த புத்தகம் ஒன்றையும் மிக மட்டமான ஒரு புத்தகத்தையும் அனுப்பும்படி கேட்டிருந்தாள். ஃபாயில் ஸ்தாபனம் அந்த வேண்டுகோளையும் பூர்த்தி செய்தது.

1930ம் ஆண்டில் நாஜிகள் தங்கள் நாட்டில் பகிஷ்கரிக்கப்பட்ட புத்தகங்களை ஏராளமாகத் தீயிலிடும் பணியை ஆரம்பித்தபோது நகைச்சுவை உணர்ச்சி நிரம்பிய வில்லியம் ஃபாயில் "அங்கு பகிஷ்கரிக்கப்பட்ட புத்தகங்களுக்கு இங்கு நல்ல விலை கொடுத்து வாங்கத் தயார்! எரிப்பதை நிறுத்திப் பேரம் பேசத் தயாரா?" என்று ஹிட்லருக்கு ஒரு தந்தி அனுப்பினார். ஹிட்லர் தகனத்தில்தான் ஈடுபட்டாரே தவிர இதற்குப் பதில் அனுப்பவில்லை. இதற்குப் பழி வாங்குவதுபோல் ஜெர்மானிய விமானங்கள் இங்கிலாந்தில் குண்டு வீசியபோது வீட்டுக் கூரைகளின் மீது பாதுகாப்புக்காக மணல் மூட்டைகளை அடுக்குவதற்குப் பதிலாக விற்காமல் இருந்த ஹிட்லரின் 'மெயின் காம்ப்ஃ' புத்தகப் பிரதிகளைக் கோணியில் போட்டுக் கட்டி அடுக்கினாராம் அந்த வில்லியம் ஃபாயில்! — கோமதி சுவாமிநாதன்

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.


வாழ்க்கை ஒளிகளின்
வனப்பான அழகு
ஸான்போரைஸ்ட் பாப்ளின்ஸ் :
கோல்ட் ட்ரிங்க், ப்ளூபர்ட், எவர் ப்ரைட்,
குட் ஷைன்,
ஷர்ட்டிங்ஸ் : ஸ்டிரைப், டாப்பி, செக்ஸ், பைஜாமா
தோதீஸ் : ராஜா ஸ்பெஷல், ராணி ஸ்பெஷல்,
ப்ளாடினம், காம்ராஜ்
ஸுட்டிங்ஸ் :
காபர்டின்
நெசவான கலர் புட்டாக்கள் :
ப்ரிண்ட்ஸ் :
ப்ரிண்டட் லான்ஸ், வாயில்ஸ், பாப்ளின்ஸ்,
ஸ்கிரீன் ப்ரிண்ட் ஸாரீஸ்
2x2 கவர்ச்சியான முழு வாயில்கள்—லினெனிலும்
புட்டாக்களிலும்
·SANFORIZED·
Arvind
Quality
FABRICS
அரவிந்த்
மில்ஸ் லிமிடெட் அஹமதாபாத்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon